262

சக்தி

309

ஸிலன்
ஆப்டோன்

பிளாக்குகள்

உங்களுக்குத் தேவையான
எவ்விதமான பிளாக்குகளும்
நவீன முறைகளில்
துரிதமாகவும் சகாயமாக
வும் செய்து தரப்பெறும்.

★

விவரங்களுக்கு எழுதவும்

மானேஜர்,

"ஸண்டே டைம்ஸ்" பிராஸஸ் ஸ்டுடியோ

எர்ரபாலு செட்டி தெரு :: சென்னை

PHONE: 2678

உண்மையாக பிரதிபலிக்க உங்கள் ரிகார்டுகளை எச். எம். வி. கிராமபோனிலேயே பாடுவித்துக் கேளுங்கள்.

இந்த போர்டபிள் மாடல்
94 (பிரௌன்)ன்
விலை ரூ. 90/-

எல்லா எச். எம். வி.
வியாபாரிகளிடம் கிடைக்கும்

'ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்'

While you are in Search of:—

Latest Models } In
Up-To-Date Designs } Gold & Silver Wares

JUST STEP IN!!

RADHA'S JEWELLERY SHOW ROOM



QUITE WORTH NOTING! & REALLY GUARANTEED
IN ALL BOTH FOR QUALITY & DURABILITY

FOR GENTS:—Golden Rings, Wedding Rings, Enamel Rings, Neck Fancy Chains, Buttons- Stone Stead Etc., Etc.,

FOR LADIES:—Latest Necklaces, Gold Chains, Oddiyanams, Vanki, Bangles of Innumerable Variety- Enamelled in Attractive Designs and Patterns.

SILVER WARES:—Tumblers, Tea Sets, Toy Sets, Jugs, Fancy Designed, Pattaikolusu & Enamelled.

MADE TO ORDER OR READY

PLEASE CALL
PHONE NO. 31
Telegrams: "RADHA"

G. RADHAKRISHNA CHETTY
JEWELLER
BIG BAZAAR STREET, TRICHY

எல்லா விதமான

பழ தினுசுகள்

எங்களிடம் குறைந்த விலையில் கிடைக்கும்

தினந்தோறும் புதிய சரக்குகள்
வந்துகொண்டே யிருக்கின்றன

வெளியூர் ஆர்டர்களே

எமது முக்கிய வியாபாரம்

வெளியூர் ஆர்டர்கள் பொறுப்பான
மேற்பார்வையில் அனுப்பப் படுகின்றன.

விபரங்களுக்கு :

FANCY FRUIT STALL
5, CORPORATION FRUIT MARKET
ESPLANADE, MADRAS

THREE COLOUR
Process Blocks



M. C. APPASAWMY CHETTY & Co.
COLOUR HALFTONE & LINE
BLOCK MAKERS
14, Jone's St., Mannady,
MADRAS

எமது கண் டாக்டர்களால் இலவசமாய் கண்களை பரிசோதித்து
உயர்ந்த மூக்குக் கண்ணாடிகள் கொடுக்கப்படும்.
திருப்திக்கு உத்தரவாதம்.

விக்ஸன் அண்டு கோ., மூக்குக்கண்ணாடி வியாபாரிகள்,
173, பிராட்வே மதராஸ்.

சங்கு நூல்கள்

		ரூ.	அ.	பை.
ஜவஹர்லால் நேரு சுய சரிதம் (வ. ரா. மொழிபெயர்த்தது)	....	3	0	0
சத்திய சோதனை (முதற் பாகம்)	....	1	8	0
„ (2-ம் பாகம்) (ரா. கிருஷ்ணமூர்த்தி மொழிபெயர்த்தது)	....	2	0	0
அனுசக்தி யோகம்	....	0	10	0
இல்லறமும் பிரம்மசரியமும்	....	0	8	0
ஆரோக்கிய வழி	....	0	6	0
ஹிந்து தர்மம்	....	0	4	0
உத்தம வாழ்க்கை	....	0	3	0
கீதா போதனை	....	0	2	0
காங்கிரஸ் மகாசபை சரித்திரம் (பட்டாபி சீதாராமையா எழுதியது, புதிய பதிப்பு)	....	1	8	0

சக்தி காரியாலயம்

46, முத்துமாரி செட்டித் தெரு, சென்னை.

READ

THE ECHO

The People's Illustrated English Fortnightly De-Luxe

The Most Attractive 'Shop-window' for advertisers

Annual Subscription Rs. 2/- only

For Rate Card please apply to:

The Advt. Manager,
THE ECHO,

48, Malaiperumal Street,
G. T. MADRAS.

காந்தித் தாத்தா கதை

காந்தித் தாத்தாவின் அற்புதமான கதை இது

முதியோர் கல்வி அபிவிருத்திக்காவும், சிறுவர் அறிவைப் பெருக்க வேண்டியும் பொதுவாக அனைவருக்கும் பயன்பட வேண்டி எழுதப்பட்டது இந்தப் புஸ்தகம்.

அருமையான பல படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.
படிக்கப் படிக்க தெவிட்டாத நடையில்
இயற்றப்பட்டிருக்கிறது.

சக்தி காரியாலயம்

46, முத்துமாரி செட்டித் தெரு, சென்னை.

சக்தி மலர்கள்

[சக்தி மலர்ப் பதிப்பு நூல்கள் தமிழ்மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் ஏற்ற உயரிய நற்கருத்துக்களை எளிய நடையில் வெளியிட எழுந்தனவாகும்.]

சக்தி மலர் 1

ருஷிய ஞானி லியோ டால்ஸ்டாய்

எழுதிய

இனி நாம் செய்யவேண்டுவது யாது?

சுத்தமான தமிழ் மொழிபெயர்ப்பு. ஒவ்வொரு தமிழனும் படித்துப் பயன்பெறத் தக்க அனுபவக் களஞ்சியம்.

விலை அணா 12 தபாற் செலவு வேறு

•

சக்தி மலர் 2

உலகம் சுற்றும் தமிழன்

ஸ்ரீ ஏ. கே. செட்டியார் எழுதியது.

பல நாட்டின் பழக்க வழக்கங்களையும், புதுமைகளையும் எளிய இனிய தமிழில் சித்தரித்துக் காட்டும் பல கட்டுரைகள் கொண்ட நூல் இது ஒன்றே சுத்தமிழ் மொழியில் வந்துளது.

விலை அணா 12 தபாற் செலவு வேறு

சக்தி மலர் 3

நிர்மலகுமாரி

காழி சிவ. கண்ணுசாமி எழுதியது.

இந்து தேச சரித்திரத்தை யொட்டி யெழுந்த ஒப்பற்ற இனிய நவீனம். எளிய நடை. படிப்பதற் குகந்த இனிமையான கதை.

விலை அணா 12 தபாற் செலவு வேறு

•

அச்சில்

ருஷிய மகான் டால்ஸ்டாய் எழுதிய

போரும் காதலும் I

எனும் அற்புத நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பை பொ. திருகூடசுந்தரம் பிள்ளை தமிழ் மக்கட்கு அளித்துள்ளார்.

விரைவில் எதிர்பாருங்கள்!

சக்தி மலர் 4

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!

அசலா

ஸ்ரீ. ஆர். ஷண்முகசுந்தரம்

மொழி பெயர்த்தது

ஸ்ரீ சரத் சந்திர சட்டர்ஜியின் நாவல்களில் அசலா தலை சிறந்ததென்று எல்லோராலும் போற்றப்படுகிறது. மூலத்தின் சுவை குன்றாது இனிய நடையில் ஸ்ரீ ஆர். ஷண்முகசுந்தரம் மொழி பெயர்த்திருக்கிறார்.

சக்தி காரியாலயம்

46, முத்துமாரி செட்டித் தெரு, சென்னை.

சந்தா விகிதம்

உள் நாடு

வருடச் சந்தா	...	ரூ.	3	0	0
6 மாதம்	...	,,	2	0	0
தனிப்பிரதி	...	,,	0	4	0

	பர்மா	மலேயா
வருடச் சந்தா	ரூ. 4 0 0	ரூ. 5 0 0
6 மாதம்	,, 2 4 0	,, 2 12 0

சிலோன் 25 சதம்

மாதிரிப் பிரதி வேண்டுவோர் தபாற் செலவு சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

திருத்தம்

சென்ற 'சக்தி' இதழில் இரு பிழைகள் நேர்ந்து விட்டன. அதன் அட்டையிலும் தலையங்கப் பக்கத்திலும் மலர் 3 இதழ் 7 என்றிருப்பதை மலர் 4 இதழ் 1 என்றும் 20-ஆம் பக்கத்துக்கும் 31-ஆம் பக்கத்துக்கும் இடைப்பட்ட பக்கங்களின் பக்க எண்களை 21 முதல் 30 வரையில் தொடர்ச்சியாக லக்கமிட்டும் திருத்திக்கொள்ளுமாறு அன்பர்களை வேண்டுகிறோம்.

—ஆசிரியர்.

ஆசிரியர் அறிவிப்பு

'சக்தி'க்குக் கதை, கட்டுரை, கவிகள் அனுப்புவோர், காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதி யனுப்ப வேண்டுகிறோம்.

கதை, கட்டுரை, கவிகளைத் திருத்தவோ, கூட்டவோ, குறைக்கவோ, மாற்றவோ ஆசிரியருக்குப் பூரண உரிமையுண்டு.

பிரசுரிக்கப்படாத கதை, கட்டுரை, கவிகளைத் திரும்பப் பெற வேண்டுவோர், தங்கள் விஷயத்தை அனுப்பும்போது கூடவே போதிய தபால் தலை வைத்து அனுப்ப வேண்டும்.

ஆசிரியர்,
'சக்தி'

பொருளடக்கம்

காலச்சுழல் ... 49

சூழ்ச்சிக்கார லவால்
'எரவி' ... 51

பம்பாயில் கண்டவை
ஏ. கே. செட்டியார் ... 53

பணப்பித்து
அழ. வள்ளியப்பன் ... 55

பருவ மங்கை
'பூ' ... 56

படப்பிடிப்பாளருக்கு
தி. ஜ. ர. ... 57

ஜன்னல்
ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயா ... 58

காலத்தேர்
சுவாமி சுத்தானந்த பாரதியார் ... 61

சிறையிலே சிவபக்தர்
ரா. நா. ... 65

சமரஸம்
கு. ப. ராஜகோபாலன் ... 66

சங்காதோஷம்
சேது அம்மாள் ... 67

யோகாஸனங்கள்
புரொபஸர் டி. வி. திருவேதி ... 69

அந்தப்புரக் கலகம்
மஞ்சேரி எஸ். ஈச்வரன் ... 70

மோகினி
பிக்ஷு ... 70

காந்தி வாக்கு ... 71

தேசத்தின் குழந்தைகள்
'நாதன்' ... 72

கொட்டகை வாசலில்
கே. ஸ்ரீநிவாஸன், பி. ஏ. ... 74

மதங்களும் தேவையா?
ரூஸோ ... 75

நடிக்க வேண்டுமா?
பி. எஸ். செட்டியார் ... 77

வழக்காடுதல்
லியோ டால்ஸ்டாய் ... 78

எங்கள் பிரயாணம்
ஆர். கோதண்டபாணி ... 79

பாரத சக்தி மஹாகாவியம்
சுவாமி சுத்தானந்த பாரதியார் ... 81

கனவுவிடு தூது
வே. நாராயணன் ... 85

இது திருச்சி
'கோணல்' ... 87

வாசனை சினிமா
"உல்லாவி" ... 88

எமனை ஏய்த்த கிழவன்
ஆர். திருஞானசம்பந்தம் ... 89

ராபர்ட் பிரிட்ஜஸ்
வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ. ... 91

பறித்த பூக்கள் ... 93

பாலர் கதை: பறவை - விலங்கு யுத்தம்
'மாமி' ... 95

பாலர் பாட்டு: ஊஞ்சலாட்டம்
வித்வான் சு. உமைதாணு பிள்ளை ... 96

யுத்தம்

நடக்கும் சமயத்தில்கூட மார்க்கட் நிலவர
ஏற்றத் தாழ்வினல் பாதிக்கப்படாதது

லைப் இன்ஷியூரன்ஸ்

அதற்குத் தேய்மானம் கிடையாது; நஷ்டம் கிடையாது; ஆனல், லாபம் கூடுவதால், அதன் மதிப்பு அதிகரிக்கிறது. உடனே சொத்து ஏற்படுத்துகிறது. எதிர்காலப் பாதுகாப்பாகவும் இருக்கிறது. அதன் பெறுமானம் தன் இயற்கை மதிப்புக்கு அதிகமாகவே யுள்ளது.

எவ்விதமான பண நிலையி லிருப்பவர்களுக்கும் யாவருக்கும் ஏற்ற லாபகரமான, பத்திரமான, நாணயமான பாலிஸிகளை **ஹிந்துஸ்தான்** அளிக்கிறது.

இதில்

இன்றே, இப்பொழுதே

இன்ஷியூர் செய்யுங்கள்

ஹிந்துஸ்தான்

கோவாபரேடிவ் இன்ஷியூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

தலைமை ஆபீஸ்:	மெட்ராஸ் பிராஞ்சு:
'ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்'	'ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்'
ஸுரேந்திரநாத் பானர்ஜி ரோடு,	107, அரண்மனைக்காரத் தெரு,
கல்கத்தா	சென்னை

சக்தி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து போலிகவே!

மலர் ௪ : இதழ் ௨ | விக்கிரம—மாசி

காலச் சுழல்

இந்திய அரசியல் முட்டுக்கட்டை சுலபத்தில் தீராது போலிருக்கிறது. அதிகாரிகள் அவ்வளவு பிடிவாதம் காட்டுகிறார்கள்.

சத்யாக்கிரகிகளோடு சமரசமே கிடையாதாம். சத்தியாக்கிரகத்தினிடம் அனுதாபங் கொண்டவர் யாராவது வந்தால், அவர்களோடாயினும் பேசக்கூட வைசிராய் தயாரில்லையாம்.

ஆனால், இந்திய நெருக்கடிபற்றி லோவின் இரண்டாவது படம் ஒன்று 'ஹிந்து' வில் சமீபத்தில் வெளிவந்தது, அதைப் பார்க்கும்படி நாம் வைசிராய்க்குச் சிபார்சு செய்கிறோம். லோ பிரிட்டனின் தலைசிறந்த கேலிச் சித்திரக்காரர். இதுதான் அவர் போட்டிருக்கும் படம்: இந்தியாவி லுள்ள அனைவரையும் சிறையில் அடைத்தாயிற்று; அதிகாரிகள் தான் மிச்சம். "ஆயிற்று; அப்புறம் என்ன செய்கிறது?" என்று கேட்கிறார் ஜான்புல்லை இந்திய அதிகாரி. இந்த நிலைமை வரும் வரையில் வைசிராய் காத்திருக்கப் போகிறாரா? இந்தியா முழுவதையுமே ஒரு பெரிய சிறைக்கூடம் ஆக்குவதுதான் அவர் ஆசையா?

அடிமையும் ஆண்டானுமாகச் சேர்ந்துதான் நாஜிக் கொடுமையை எதிர்க்க வேண்டு மென்று பிரிட்டிஷ் மக்கள் விரும்புகிறார்களா? சுதந்திர பிரிட்டனும் சுதந்திர இந்தியாவும் பிற சுதந்திர நாடுகளுமாகச் சேர்ந்து அப்படி எதிர்க்க வேண்டுமென அவர்கள் விரும்பவில்லையா?

இல்லை யென்றே தோன்றுகிறது. அதனால் நேரிடக்கூடிய விபரீதங்களுக்கு, பிரிட்டனே பொறுப்பாளியாகும் என்றுதான் நாம் மீண்டும் மீண்டும் எச்சரிக்க வேண்டி யிருக்கிறது.

தந்திரப் பதில்

"இந்தியாவிலே அரசியல் குற்றங்களுக்காகச் சிறைப்பட் டிருப்போர் எத்தனை பேர்?" என்று பார்லிமெண்டிலே இந்தியா மந்திரி அமெரியை ஒருவர் கேட்டார்.

அரசியல் குற்றம் என்று அதை ஒப்புக் கொண்டு விடக்கூடாதாம்! "யுத்தத்தைத் திறமையாக நடத்தப் பாதகமாய் எழுதியவர்கள், பிரசங்கித்தவர்களையே குறிப்பிடுகிறீர்கள் என்று நினைக்கிறேன்" என ஆரம்பித்து, "இவர்களில் மிகப் பலர் தாங்களாகவே ஆசைப்பட்டு ஜெயிலுக்கு வந்தவர்களாயிற்றே" என்று முடிக்கிறார்.

அடடா! இந்தியா மந்திரியின் ஞானமே ஞானம்! தாங்களாகவே சட்டத்தை மீறும் சத்யாக்கிரகிகள், தங்கள் அரசியல் அபிப்பிராயங் காரணமாகவே அப்படிச் செய்கிறார்கள் என்பதை அமெரி அறியாரா? நன்றாய் அறிவார். ஆனால், உலகம் அறியக் கூடாதாம். இந்தத் தந்திரத்தினா லெல்லாமா உலகத்தை ஏமாற்ற முடியும்?

ஜின்னா வைத்த வில்

சிந்துவிலே படுகொலைகள் நடந்தன; ஓயாமல் நடந்தன. மக்கள் ஊர்விட்டு ஊர் ஓடினார்கள். நிலைத்த மந்திரி சபை ஏற்பட்டு, அதற்குப் பரிகாரம் காணமுடிய வில்லை. காங்கிரஸ் தலைவர் ராஷ்டிரபதி ஆஸாது அங்கே விரைந்தோடினார். பல கட்சிகளுக்குள்ளும் ஓர் சமரஸம் செய்வித்தார். அதுதான் ஆஸாத் ஒப்பந்தம் என்பது.

1. பந்தே ஆலிகான் என்ற பிரதம மந்திரி மூன்றுமாதம் அப்பதவியை அனுபவித்து விட்டு, பிப்ரவரி 15 உ அதை ராஜீனாமாச் செய்ய வேண்டும்; 2. அல்லாபாக்ஷ் அல்லது ஸர் குலாம் ஹுஸேன் ஹிதாயத்துல்லா அப் பதவியை ஏற்க வேண்டும்—இந்த இரண்டு ஷரத்துக்களும் அவ் வொப்பந்தத்தின் முக்கிய நிபந்தனைகளாம்.

அப்போது பந்தே ஆலிகான் முஸ்லீம் லீக்கில் அங்கத்தினரல்ல. இங்கிலையில் ஜின்னாசாயபு உடனே அங்கே ஓடினார். பந்தே ஆலிகானை லீக் அங்கத்தினராய்ச் சேர்த்தார். "விடாதே பதவியை; கெட்டியாய் உட்கார்ந்து கொள்" என்று உபதேசமும் செய்து விட்டார்.

இப்போது பந்தே ஆலிகான், பிரதம மந்திரி நாற்காலியை விடமாட்டேன் என்று சண்டி செய்து கொண்டிருக்கிறார். ஜின்னா சாயபு எட்ட விருந்தபடியே "அதுதான் சரி; நகராதே" என்று அவரை முடுக்கி விட்டுக்கொண் டிருக்கிறார். அல்லாபக்ஷ் கட்சியாரும் சும்மா விடப்போவ தில்லை. ஒப்பந்தத்தை மீறிய இந்த மந்திரி சபை மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டுவரப் போகிறார்கள். இந்த ராஜீய சதுரங்கத்தால், சிந்துவில் நிலைத்த மந்திரி சபை யில்லாமல் போய்,மீண்டும் கலகங்கள்நேரிடக் கூடும். நிரபராதிகளான மக்கள் தாக்கப்படலாம். அந்த வதை யெல்

லாம் ஜின்னு சாயபுவைத் தான் சேரும்.

ஏமாற்றமான 'பட்ஜெட்'

இந்திய சர்க்காரின் ரெயில்வே பட்ஜெட் இந்திய அசெம்பிளியில் சமர்ப்பிக்கப் பட்டது. 1940-41 ஆம் வருஷத்துக்கு ஏற்கனவே போட்டிருந்த திட்டப்படி, 8 கோடியே 29 லட்ச ரூபாய் மிச்சம் ஏற்பட்டிருக்க வேண்டும். அதை விட அதிகமாகவே, மிச்சம் ஏற்பட்டிருக்கிறது; 14 கோடியே 59-லட்ச ரூபாய் மிச்சம். இதே மிச்சம் 1941-42 ஆம் வருஷத்திலும் ஏற்படுமாம்.

ஆனால், இந்த மிச்சம் எப்படிச் சம்பாதிக்கப் பட்டது? போன வருஷம் கட்டணங்களை உயர்த்திய தன் மூலமும், இருந்த சில பாதைகளை எடுத்துவிடுவதன் மூலமும் தான்.

லாபமில்லாத பாதைகளை எடுத்து விடுவது நியாயம் என்று தர்க்கம் செய்வது சரியாகாது. ஜனங்களின் போக்கு வரத்துச் சாதனங்களை வரவர அதிகரித்து அபிவிருத்தி செய்துகொண்டே போவதுதான் நாகரிக சர்க்கார்களின் கடமை. நாட்டின் யுத்தமுயற்சியின் பெயரால் உள்ள ரயில் பாதைகளையும் பிடுங்குவது போற்றத்தக்க செயலல்ல.

அடுத்தபடியாக,போன வருஷம் எதிர்பார்த்ததைவிட அதிக மிச்சம் கிடைத்திருக்கிறதே; போன வருஷம் உயர்த்திய கட்டணங்களை இவ்வருஷமாவது ஏன் குறைக்கக் கூடாது?

சிந்திய ரயில்வேக்கள், ஜனங்களின் நன்மையைக் கருதி நிர்வகிக்கப்பட வில்லையா? அந்நிய முதலாளிகளின் லாபத்தையும் சர்க்கார் வருமானத்தையுமே நோக்கமாய்க் கொண்டுதான் நிர்வகிக்கப் படுகின்றனவா?

பர்மாவில் இந்தியர் நிலம்

இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் நல்லுறவை வளர்ப்பதே தமது நோக்கம் என்று பர்மாப் பிரதம மந்திரி ஊ-ஸோ கூறியதை வரவேற்கிறோம். அவர் சமீபத்தில் செய்த இந்தியச் சுற்றுப் பிரயாணத்தின்

> **முகப்புப் படம்**
>
> கிராம ஷெரன்றில் ஏழைடிக்களுக்குக் கஞ்சி வார்க்கப் பட்டபோது, இப்படிப் பல கிழவிகள் வந்து சூழ்ந்துகொண்டது மன முருக்கும் காட்சியாயிருந்தது. கோவை ஐயாமுத்து அப்போது எடுத்தது இந்த போட்டோ. இத்தகைய கிழவிகளுக்கு இராட்டினமே ஓர் காமதேனு அல்லவா?

போது பம்பாயில் இவ்விதம் கூறினர்.

பர்மா இந்தியர்களை இன்று மிக முக்கியமாய்ப் பாதிப்பது, ஒரு பிரச்னை. அதுதான் **பர்மா நிலம் வாங்கும் மசோதா.** "பர்மா நாட்டில் தங்கி வசிக்காத நிலச் சுவான்தார்களிட மிருந்து சௌகரியமான இடங்களில் நிலங்களை ராஜாங்கம் தெளிவான விலைக்கு வாங்கி, அவைகளை நிலமில்லாத விவசாயிகளுக்கு ஜாதி, மத, வகுப்பு என்ற பாரபட்சமின்றிப் பகிர்ந்தளிப்பதே இந்த மசோதாவின் நோக்கம்" என்று கனம். ஊ-ஸோ கூறுகிறார்.

பர்மாவில் நிலம் வாங்கியிருக்கும் இந்தியர்களில் தளவணிகர்தான் அதிகம். அவர்கள் முக்கியமாக பாங்கித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள். ஆதலால், நியாயமான விலைகளுக்குத் தங்கள் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படுமானல், அதில் அவர்களுக்கு அதிக வருத்த மேற்படாது. ஆனல், நியாயமான விலை கிடைக்குமா என்பதுதான் கேள்வி.

நிலம் வாங்கும் மசோதாவின் படி, நிலத்துக்கு எப்படி மதிப்பிடப்போகிறார்கள்? நிலத்தின் ஒரு வருஷ வரும்படியைக் கொண்டு தான். ஆனல், அந்த வரும்படியோ, புதிய நிலக் குடியாண்மைச் சட்டக் கெடுபிடியால், மிகக் குறைகிறது. எனவே, நிலம் வாங்கும் மசோதாப் பிரகாரம் மதிப்பிடும் நிலவிலை மிக விழுந்துவிடும். இது நியாய மல்ல. பழைய நியாயமான விலை கிடைப்பதற்கு, வழி செய்வதே அவசியமும் நேர்மையுமாகும். கனம் ஊ-ஸோ இதைக் கவனிக்க வேண்டுகிறோம்.

சுபாஷ் எழுதிய கடிதம்

சுபாஷ் பாபு மகா தியாகி. தேசத்துக்காக இணையற்ற சேவை புரிந்தவர். என்று தினம் அவரைத் 'தேச வெறி' பிடித்ததோ அன்றிருந்து அவர் சுகப்பட்ட நாள் கிடையாது. சிறையும் அக்ஞாத வாசமும் நோயும் கவலையும் அவரை ஓயாமல் வாட்டின. தனிப்பட்ட மனக் கசப்புகளால், நல்ல சமயத்தில் அவர் செய்த சில தவறுகளை நினைக்கும் நேரமல்ல இது. அவர் காணமல் போய்விட்ட செய்தி மிக மிக வருந்தத் தக்கது.

ஆனல், அவருக்கும் காந்திஜிக்கும் நடந்திருக்கும் கடிதப்போக்குவரத்தை, 'பார்வர்டு பிளாக்' ஆக்டிங் காரியதரிசி இப்போது வெளியிட்டிருப்பது அதைவிட வருந்தத் தக்கது. காணமல் போன ஸ்ரீ சுபாஷைப் பற்றி நாம் அனைவரும் பெருங் கவலையில் ஆழ்ந்திருக்கும் சமயத்தில், அவரது மற்றோர் அசட்டுச் செயலை வெளியிடுவது அழகாமா? ஏனெனில், காந்திஜிக்கு அவர் எழுதிய கடிதம் அப்படிப் பட்டதுதான்.

யுத்தம்

ஐரோப்பிய யுத்த நிலை பழைய படியேதான் இருக்கிறது.

நடுவிலே ஜப்பான் என்னவோ சிங்கப்பூரைத் தாக்கப்போவதாக ஒரு 'புரளி' புறப்பட்டது. ஆனல், 'சமாதானமே என் நோக்கம்!' என்று ஜப்பான் கதறுகிறது.

பால்கனில் துருக்கிக்கும் பல்கேரியாவுக்கும் ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. துருக்கியின் தலைமையில் பால்கன் நாடுகள் ஒற்றுமைகொண்டு வாழத் தீர்மானித்ததற்கு அறிகுறி யென இதைக் கருதலாம்.

பிரான்ஸில் மீண்டும் பிட்டெய்னை மிரட்டியோ கவிழ்த்தோ லவாலை அதிகாரத்தில் அமர்த்திவிட, நாஜிகள் சூழ்ச்சிகள் செய்தார்களாம். ஆனல், அதெல்லாம் பலிக்கவில்லை.

ஸோவியத்-பிரிட்டன் நேச ஒப்பந்தத்துக்கான பேரங்கள் பலன் தரவில்லை.

இவை யெல்லாம் ஒரு அநிச்சய நிலைமையையே காட்டுகின்றன.

பிரபலஸ்தர் வரிசை 8:

சூழ்ச்சிக்கார லவால்

பிரஞ்சு சர்க்காரை ஜெர்மனியிடம் காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கும் துரோகி என்று குற்றஞ் சாட்டப்பட்டு வரும் பியர் லவால், ஓர் விசித்திரப் பிறவி யாவார்; அவருடைய வாழ்க்கை வரலாறு பூராவும், சதிகளும் சூழ்ச்சிகளும் நிறைந்ததாகும்.

1883-ஆம் ௵ சாட்டிலான் என்ற கிராமத்தில், ஏழைக் கசாப்புக் கடைக்காரர் ஒருவரது மகனாக லவால் பிறந்தார். அந்தக் கிராமம் ஆவெர்க்னு என்ற ஜில்லாவில் இருக்கிறது.

ஆவெர்க்னு ஜில்லாவின் மக்கள் ஆப்பிரிக்க நீக்கிரோக்களின் சாயலை ஓரளவு படைத்தவர்கள். அந்தச் சாயல் லவாலிடமும் இருக்கிறது; தடித்த உதடும் அடர்ந்து கறுத்து எண்ணெய்ப் பசை நிறைந்த தலைமயிரும் லவாலுக்கு உண்டு. 'நிலக்கரி விறகு ஆசாமி' என்று லவாலுக்கு ஒரு பரிகாசப் பெயர் உண்டு. காரணம் அவரது ஜில்லா வாசிகள் நிலக்கரியும் விறகுந்தான் பெரும்பாலும் வியாபாரம் செய்து வாழ்கிறார்கள்.

ஏழைக் குடும்பத்தில் பிறந்த லவால், எப்படியோ கஷ்டப்பட்டுக் கல்வி பயின்றார். அத்தனையும் சொந்த முயற்சிதான். கிரேக்க பாஷை பயின்று, பத்தொன்பதாம் வயதிலே, கிராமப் பள்ளிக்கூடம் ஒன்றில் உபாத்திமைப் பதவியும் பெற்றார். ஆனால், அதில் அவர் வெகு காலம் தரிக்கவில்லை. சட்டக் கல்வி பயின்று, வக்கீல் தொழிலில் இறங்கினார். வக்கீல் தொழிலில் அவரால் பிரகாசிக்க முடியவில்லை. அவரது கீழ்த்தரமான பாஷையும், நாட்டுப்புறக் கொச்சைகளும், நாகரிகப் பிரஞ்சு நீதி ஸ்தலங்களிலே எடுபடுமா? அவரிடம் மிகச் சில வழக்குகளே வந்தன; அவற்றில் எதுவும் அவருக்குக் கீர்த்தி சம்பாதித்துத் தரவில்லை. ராஜீய வாழ்வுதான் தமக்கு ஏற்றதென அவர் கண்டார்; தமது புன்னகை என்ற மூலதனத்தைக் கொண்டு லாபம் சம்பாதிக்க அதில்தான் நிறையச் சௌகர்ய மிருக்கிறது என்று அவர் அறிந்து கொண்டார்.

1914-ஆம் ௵ முதன் முதலாக, பிரஞ்சு டெபுடிகள் சபை அங்கத்தினர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி

பெற்று அச்சபைக்குள் நுழைந்தார். அப்போது அவர் ஓர் அபேதவாதி. 1922-ஆம் ௵ வரையில் அதி தீவிர அபேதவாதியாகவே கர்ஜனைகள் புரிந்து வந்தார். கர்ஜனை என்றதும் பிரசங்க நிபுணராக்கும் என்று நினைத்து விடாதீர்கள். பிரசங்கம் அவ்வளவு அழகாய்ச் செய்ய அவருக்குத் தெரியாது. ஆனால் சமயம் வந்த போதெல்லாம், ஆத்திரக் கூச்சல் போடுவதில் வல்லவர். சென்ற யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் சேம்பரில் ஒரு சமயம் "கொடுங்கோல் ஜார் ஆளும் ருஷியாவின் துண்டு தலையிலேயே நாம் போரிட்டுக் கொண்டிருக்கிறோம்" என்றும், மற்றொரு சமயம் "ஸ்டாக்ஹோமில் கூடுகிறதே அபேதவாதக் காங்கிரஸ், அதுதான் நமக்கு வழிகாட்டும் துருவ நட்சத்திரமாயிருக்கவேண்டும்" என்றும் அவர் கோஷித்தார். ஆனால், 1922-ஆம் வருஷத்துக்குப் பின்னர் மெல்ல மெல்ல இடசாரி அபேத வாதத்திலிருந்து திரும்பி, மிதவாதிகள், குடியரசு வாதிகள் முதலிய எண்ணற்ற பிரஞ்சு அரசியல் கட்சிகளுக்கு ஒன்றன்பின் னொன்றாகத் தாவிப் பல குட்டிக் கரணங்கள் போட்டிருக்கிறார். கேட்டால் "நான் ஒரு கட்சியு மில்லாத சுயேச்சைவாதி" என்று கூறுகிறார்!

லவால் ஏராளமாய்ப் பணம் சேர்த்துக் கோடீசுவர ராகி விட்டார். ஆனால், அதிகார துஷ்பிரயோசனத்தினாலும் லஞ்சம் வாங்கியதாலும் அவருக்குப் பணம் சேர்ந்ததாக யாரும் சொல்ல முடியாது. வியாபாரச் சூதாட்டமும் அதிருஷ்டமும் துணிச்சலும் சிக்கனமுமே அவருக்குப் பணம் சேர்ந்த காரணங்கள். அவர் தம் ஜில்லாப் பெண்ணொருத்தியையே மணம் புரிந்துகொண்டிருக்கிறார். பாரிஸுக்கு அடுத்த கிராமமொன்றில் அனடோல் பிரான்ஸ் என்ற பிரபல ஆசிரியரின் புராதன வீட்டின் அருகேயுள்ளதோர் அழகான பங்களாவில்தான் லவால் தம்பதிகள் வசிக்கிறார்கள். என்றாலும் லவாலுக்கு, நாடகம், ஓவியம், சங்கீதம் முதலிய கலைகளில் ஆசையே கிடையாது. பணம் சேர்ப்பதுதான் அவருடைய ஜீவிய லட்சியம்; அரசியல் சூழ்ச்சிகள் அவரது பொழுது போக்கு.

அந்தச் சூழ்ச்சிகளும் அநந்தமாகும். ஏன், அவரது ராஜீய வாழ்க்கை முழுதுமே ஒரு சூழ்ச்சிக் கோவைதான். தமது சூழ்ச்சிகளால் பலரை அவர் பித்துப் பிடித்து அலையும்படி செய்து விட்டார் என்று கூடச் சொல்லலாம். அவருக்கு எல்லாரும் நண்பர்கள். எவராயினும் சரி, கொஞ்சம் பழகிவிட்டால் போதும்; "நீ—நான்" என்று ஒருமையில் சம்பாஷித்து மிகத் தோழமை கொண்டாடத் துவக்கி விடுகிறார். பல கட்சிகளுக்குள்ளும், பல நாட்டுப் பத்திரிகைக்காரரிலும் அவருக்கு அந்தரங்க நேசர்கள் உண்டு. அவருக்குத்தான் உண்டு. அவர் யாருக்கும் அந்தரங்கத் தோழனாக மாட்டார்; ஆனால், அப்படிப் பாசாங்கு மட்டிலும் செய்வார். ஒரு மனிதனையும் அவர் மனப் பூர்வமாய் நம்பமாட்டார். சொன்ன சொல்லைக் காப்

'ஸரஸி'

பாற்ற வேண்டுமேயென்ற கவலை லவாலுக்கு ஒரு போதும் கிடையாது. லவாலின் மதிப்பையும் உண்மை நேசத்தையும் பெற்ற ஒரே ஒரு பிரபல பிரஞ்சு ராஜதந்திரியான பிரயாண்ட் என்பவரே ஒரு சந்தர்ப்பத்தில் பின்வருமாறு புலம்பியிருக்கிறார்: "ஐயோ! எல்லாரிடமும் ஒத்துப் போய், லவாலிடமும் ஒத்துப் போவதென்றால், முடியவே மாட்டேனென்கிறதே!"

1919-ஆம் ௵ லவால் தமது டெபுடி சபை ஸ்தானத்தை இழந்து விட்டார். கொஞ்ச காலம் வரையில் ராஜீய வனாந்தரத்தில் அலைந்து திரிந்தார்; ஒரு பதவியும் கிடைக்காமல் தத்தளித்தார். 1924-ஆம் வருஷத்துக்குப் பிறகு, பிரயாண்டு பிரதம மந்திரியாகப் பதவி ஏற்றபோது, அவருக்கு லவாலிடம் பிரியம் விழுந்தது. லவாலுக்கு அவர் பொதுக் காரியதரிசி பதவியை அளித்தார். பின்னால் நீதி மந்திரியாகவும் லவாலை பிரயாண்டு அமர்த்திக் கொண்டார்.

அதற்குப்பின், பாயின் கரேயின் சர்க்கார் அமைந்தது. பாயின் கரேக்கு, லவாலைப் பிடிக்கவில்லை. காரணம், லவால் தீவிர அபேதவாதியா யிருந்தது தான். தீவிர அபேதவாதத்தினால் இந்த 'நஷ்டம்' ஏற்பட்டதைக் கண்ட லவால், டார்டு என்ற மிதவாதியைச் சிநேகம் பிடித்தார். டார்டுவின் சர்க்கார் 1930-ஆம் ௵ ஏற்பட்டபோது, அதில் தொழில் மந்திரி பதவி லவாலுக்குப் பரிசு கிடைத்தது. டார்டுவுக்கும் பிரயாண்டுக்கு மிடையே லவால் ஏதோ 'தில்லு மில்லு'கள் செய்து கொண்டே வந்து, பிரயாண்டின் ஆதரவினால் 1931-ஆம் ௵ தாமே பிரதம மந்திரியாகி விட்டார். ஆனால் தாம் அமைத்த மந்திரி சபையில் டார்டுவுக்கும் லவால் ஒரு ஸ்தான மளித்தார்; தீவிரவாதிகளின் ஆதரவையும் கூட்டுறவையும் இதனோடு கைவிட்டார். முதன் முதலாக அவர் பிரதம மந்திரி பதவி வகித்த இக்காலத்தில் பதிமூன்று மாதங்கள் அந்தப் பதவியைக் காப்பாற்றி விட்டார். பெரும்பாலும் இரண்டு மூன்று மாதங்களுக்கு மேல் எந்த மந்திரி சபையுமே வாழாத பிரான்ஸில் இதுவொரு அபூர்வமாகும்.

இந்தக் காலத்தில், ஜெர்மனிக்கு அவர் விஜயம் செய்தார். ஜெர்மானியர், இவருக்கு அமோகமான வரவேற்பளித்தார்கள். ரகஸ்யம் என்ன தெரியுமோ? அப்போது ஜெர்மன் சான்ஸலரா யிருந்த புரூனிங் செய்ததோர் தந்திரமே இதன் காரணமாம். அசம்பாவிதம் எதுவும் நிகழ்ந்துவிடக் கூடாதே என்பதற்காக, ஏராளமான ஜெர்மன் ஒற்றர்களையும் அவர்களது மனைவிமார்களையும் லவாலின் வரவேற்புக் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி புரூனிங் கட்டளையிட்டிருந்தாராம். அந்தக் கும்பலே லவாலை ஆரவாரத்துடன் வரவேற்றதாம். பிறகு அமெரிக்காவுக்கும் லவால் விஜயம் செய்து, தலைவர் ஹூவரைச் சந்தித்துப் பேசினார். யுத்தத்துக்குப் பின் இவ்வாறு முதன் முதலாக அவ்விரு நாடுகளுக்கும் பிரயாணம் செய்து வந்த முதல் பிரஞ்சுப் பிரதம மந்திரி லவால் தான். 1932-ஆம் ௵ ஆரம்பத்தில் லவால் பதவி யிழந்தார். அமெரிக்காவுக்கு லவால் இலவசப் பிரயாணம் செய்தது கண்டு சிக்கனமான பிரஞ்சுக்காரர் முணு முணுத்தது ஒரு காரணம். தங்கத் திட்டத்தை பிரிட்டன் கைவிட்டபோதும் பிரிட்டிஷ் ஸ்டெர்லிங்குடன் பிரஞ்சு நாணயம் பிணைக்கப்பட்டே யிருக்க வேண்டுமென்று லவால் பிடிவாதம் செய்ததால், பிரஞ்சு பாங்கிக்கு 2 கோடி பவுன் நஷ்டம் ஏற்பட்டது மற்றோர் காரணம்.

ஆனால், மறுபடியும் 1934-ஆம் ௵ அயல் நாட்டு மந்திரியாகவும் 1935-ஆம் ௵ பிரதம மந்திரியாகவும் பதவிகளை அவர் கைப்பற்றி விட்டார். இந்த நாட்களில்தான், அபிசீனியாவுக்குத் துரோகமும் உலகப் பிரசித்தியுமான ஹோர்-லவால் சூழ்ச்சி நடைபெற்றது. அபிசீனியாவை இத்தாலி அநியாயமாய் ஆக்ரமித்துப் போர்புரிந்து கொண்டிருந்தது. செத்து வரும் சர்வதேசச் சங்கத்தில் அப்போது பிரிட்டனுக்குப் பெருஞ் செல்வாக்கு இருந்து வந்தது. அநியாய ஆக்ரமிப்புப் போரைத் தொடுத்த இதாலி மீது நடவடிக்கைகள் எடுப்பது என்று சர்வதேசச் சங்கம் தீர்மானித்தது. ஆனால் முக்கியமான எண்ணெய் ஏற்றுமதித் தடையை விதிக்க மட்டில் நடவடிக்கை எடுக்க வில்லை. அபிசீனியா உயிருக்கு மன்றாடிக்கொண் டிருந்தது. இந்நிலையில், பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி ஸர் ஸாமுவேல் ஹோரும் (மாஜி இந்தியா மந்திரியான புண்ணியவான் தான்) பிரஞ்சு அயல் நாட்டு மந்திரி லவாலுமாக ரகஸ்யமாய்ப் பேசி, அபிசீனியாவைக் காட்டிக் கொடுக்கும் ஒரு திட்டத்தைத் தயாரித்து விட்டார்கள். என்ன திட்டம்? அபிசீனியாவில் ஒரு பகுதியைப் பிய்த்து இதாலிக்குக் கொடுத்து விடுவது; அதற்குப் பதிலாக இதாலி சண்டையை நிறுத்தி விட வேண்டும் என்ற சமாதானத் திட்டம் தான். இந்த 'அபூர்வ' மான திட்டத்தைத் தயாரித்த பெருமையில் தொண்ணூற்றென்பதே முக்காலே மூணு வீசம் பங்கு லவாலைச் சேர்ந்ததாம்; வீசம் பங்குதான் ஹோரைச் சேரும் என்கிறார்கள். ஆயினும் அன்று ஹோர் பட்டபாடு, இந்த ஜன்மத்துக்கும் போதுமென்று அவருக்கு ஆகிவிட்டது.

இந்த ஹோர்-லவால் துரோகத் திட்டம் வெகு ரகஸ்யமாய்க் காப்பாற்றப்பட்டது. பிரிட்டிஷ் மந்திரி சபை இதைப்பற்றி அவசர அவசரமாய் ஆலோசித்ததாம். அச்சமயம் சபையில் அபிசீனியாவின் படம், மந்திரி சபை மந்திராலோசனை மண்டபத்தில் இல்லாததால், எவ்வளவு இடத்தை இதாலிக்குத் தானம் செய்ய ஏற்பாடாகி யிருக்கிறது என்று தெரியாமலே பிரிட்டிஷ் மந்திரிகள் இத் திட்டத்துக்கு ஒப்பம் வைத்து விட்டார்களாம். இதை ஒப்புக்கொள்ளுமாறு அபிசீனிய சக்கிரவர்த்தியை வற்புறுத்தித் தந்தியும் அடிக்கப் பட்டதாம். ஆனால், இதற்குள்ளே இத் திட்டத்தின் விவரங்களை எப்படியோ யாரோ பத்திரிகைக்காரன் கண்டு பிடித்து அம்பலம் செய்து விட்டான். சூழ்ச்சி வெளியானதும், பிரிட்டிஷ் பொது மக்கள் மகா ஆத்திர மடைந்தார்கள். பால்டுவின் மந்திரி சபையே கலகலத்தது. ஹோருக்கு மந்திரி பதவியிலிருந்து 'கல்தா' கொடுத்த பிறகுதான், ஜனங்களின் ஆத்திரம் தணிந்தது. திட்டமும் கைவிடப்பட்டது.

தற்போதைய யுத்தத்திலே பிரான்ஸ் சென்ற வருஷம் தோற்று வீழ்ந்ததும், முதன் முதலிலே ஓட்டமாய் ஓடி ஹிட்லருடன் கைகுலுக்கச் சென்ற பிரஞ்சுக்காரர் லவால்தான். சரணாகதி சர்க்காரான பிட்டெய்ன் சர்க்காரிலே, லவாலுக்கு ஒரு ஸ்தானமும் கிடைத்தது. ஆனால் சிறிது காலத்துக்கு முன் நாஜிகளுடன் கூடிச் சதிசெய்து பிட்டெய்ன் சர்க்காரையே கவிழ்க்க லவால் முயன்றதாகச் சில ரகஸ்யங்களைக் கேள்விப்பட்ட பிட்டெய்ன், லவாலைப் பதவியினின்று தள்ளி, கைதும் செய்தார். ஆனால், ஹிட்லரின் நிர்ப்பந்தத்தால், லவால் விடுதலை யடைந்தார். எனினும் அவரது சூழ்ச்சிகள் மாத்திரம் இன்னும் நின்றபாடில்லை என்றே தோன்றுகிறது. பிறவிக் குணத்தை அவர் எப்படி விட முடியும்?

மாஜிஸ்திரேட்: (கைதிக் கூண்டில் நிற்கும் எதிரியைப் பார்த்து) ஏய்? உன்னை நான் ஏற்கனவே பார்த்திருக்கேன் போலே யிருக்கே!

எதிரி: ஆமானுங்க, எஜமான். நீங்க தூங்கத் தொடங்கறத்துக்கு முன்னாலேயே நானு இங்கே வந்திட்டேனுங்க.

பம்பாயில் கண்டவை

ஏ. கே. செட்டியார்

"அடிக்கடி பம்பாய்க்குப் போகிறீர்களே, அங்கென்ன அதிசயத்தைக் கண்டீர்கள்?" என்று கேட்டார் ஒரு நண்பர்.

"நமது சென்னையி லில்லாத அதிசயமா பம்பாயி லிருக்கிறது?" என்றேன்.

"அப்படியா?" என்றார் நண்பர்.

"ஆம், நீங்கள் சாதாரணமாகத் தினந்தோறும் சென்னையில் காணும் ஒன்றை, பம்பாயில் மருந்துக்குக் கூடப் பார்க்கமுடியாது" என்றேன்.

நண்பர் ஆச்சரியத்தோடு என்னை நோக்கினார்.

"ரிக்ஷாவைத்தான் சொல்லுகிறேன். பம்பாயில் மனிதனை மனிதன் இழுக்கும் நாகரீகம் இன்னும் பரவவில்லை" என்றேன்.

ஒரு நகரத்தின் பெருமையை, அந்நகர அமைப்பி லிருந்தும், கட்டிடங்களி லிருந்தும், போக்குவரத்துச் சாதனங்களி லிருந்தும் ஒருவாறு அறிந்துகொள்ளலாம்.

பம்பாய் நகரில் போக்குவரத்துச் சாதனங்கள் சிறந்த முறையில் அமைக்கப் பெற்றிருக்கின்றன. 'விக்டோரியா' என்றழைக்கப்படும் குதிரை வண்டிகள், மாடியுடன் கூடிய டிராம் வண்டிகள், லண்டன் பஸ்களுக்குச் சமமாகச் சொல்லக்கூடிய மோட்டார் பஸ்கள், டாக்ஸிகள், வேகமாகச் செல்லும் எலெக்ட்ரிக் ரயில் ஆகியவை தான் பம்பாயின் போக்குவரத்துச் சாதனங்கள். யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் வரை, பம்பாயில் பெரும்பாலான டாக்ஸிகளுக்கு மைல் ஒன்றுக்கு நாலணாத்தான் கட்டணம்.

பத்து லட்சம் ஜனங்களுக்கு மேல் வசிக்குமிடம் பம்பாய். பழமையும் புதுமையும் கலந்தது பம்பாய். இந்தியாவின் வாசற்படி (அன்னியர்களுக்கு) பம்பாய்தான்.

பம்பாயி லிருந்த ஒரு புத்திசாலியான ஆங்கிலேய கவர்னர், கடலைத் தூர்க்க,பணத்தைக் கொட்டினார். அதாவது கோடிக் கணக்கான பணத்தைச் செலவுசெய்து, கடலைத் தூர்த்தார். அந்தக் கடற்கரையில் இப்பொழுது நாகரிகமுள்ள நூற்றுக் கணக்கான அழகிய கட்டிடங்கள் கட்டப் பெற்றிருக்கின்றன.

பம்பாய் நகருக்குள் இருக்கும் பொதுக் கட்டிடங்கள், இந்தியச் சிற்பத்தின் அறிகுறிகளாக விளங்குகின்றன. ஐந்தாறு மாடியுள்ள கட்டிடங்கள் சர்வ சாதாரணம். பெரும்பாலான பெரிய வீதிகளில் ஜனங்கள் நடப்பதற்கு ஐந்தடிகள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. இவைகளிலே நடந்து செல்லும்பொழுது ஜாக்கிரதையாக நடந்து செல்லவேண்டும். கீழே வாழைப் பழத்தோல் வழுக்கிவிட்டாலும் ஆபத்து; அல்லது ஐந்தாவது மாடியிலிருந்து அழகிய வெங்காயம் முதலிய பல பொருள்கள் தலைமேல் விழுந்தாலும் ஆபத்து. இதை உத்தேசித்துத்தான் பம்பாயில் எல்லோரும் தலைக்கு ஏதாவது அணிந்து கொள்கிறார்கள்போலும். பம்பாயில் பலவிதமான மனிதர்களைப் பார்க்கலாம். பல நாட்டு மனிதர்கள்—பல மாகாணத்து மனிதர்கள்—பல நாட்டு உணவுகள்.

உங்களுக்கு என்ன சாப்பாடு வேண்டும்? இட்லி சாம்பார் வேண்டுமா? வங்காளத்து ரசகுல்லா வேண்டுமா? சிந்துப் புலாவ் வேண்டுமா? பம்பாய் ஹல்வா வேண்டுமா? இத்தாலியமக்ரோனி வேண்டுமா? ஜப்பானியச் சுக்கி யாக்கி வேண்டுமா? சீனத்துச் சாப்சூய் வேண்டுமா? இராணிடீ வேண்டுமா? இங்கிலீஷ் தேசத்து உணவு வேண்டுமா? எது வேண்டுமானாலும் கிடைக்கும். பம்பாய்க்கு இது ஒரு சிறப்பு.

பல நாட்டு மனிதர்களைப் பம்பாயில் காணலாம். இப்பொழுது இத்தாலியரையும், ஜெர்மானியரையும் காண முடியாது. இவர்கள் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனர். வேறு நீங்கள் யாரைப் பார்க்கவேண்டும்? அதோ அந்த வீதிக்குச் செல்லாதீர்கள். அந்த வீதிக்குப் போனால் பல்லைப் பிடுங்கி விடுவார்கள். பல்லைப் பிடுங்குவதிலே சீனர்களுக்கு இணை பம்பாயில் யாருமில்லை. இவர்களுடைய கடைகளிலே, ஒரு மனிதனுடைய படத்தை—அவன் உட்புறப் பற்கள் தெரியும்படியாக—மாட்டி வைத்திருப்பார்கள். அதைப் பார்க்கும்பொழுதே பயங்கரமாக இருக்கும். இவர்கள் பல்லைப் பிடுங்க ஆரம்பித்தால் எப்படி யிருக்கும்?

"வெளி நாட்டுக்குச் செல்கிற ஒவ்வொரு ஜப்பானியனும் உளவாளி" என்பது பழமொழி. எனவே இவர்களிடமும் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

இன்னொரு வீதிக்குச் செல்வோம். இந்த வீடுகள் ஏன் புலிக் கூண்டுகள் போல, கம்பிகளால் அடைக்கப்பட் டிருக்கின்றன? இந்த வீதி, இந்தப் பகுதி முழுதுமே அப்படித்தான் போலும்! இந்தக் கூண்டு வீட்டுக்குள் அடைக்கப்பட் டிருப்பது ஒரு வழுக்கி விழுந்த பெண்—தாஸி. இந்தப் பகுதி ஊருக்கு நடுவே இருக்கிறது. இந்தப் பகுதிக்கு நடுவே டிராம் வண்டி ஓடுகிறது. வீதியின் இரு பக்கத்திலும், மேலும் கீழும், (பெண்) புலிக் கூண்டுகள்.

லாமிங்டன் வீதிக்குச் செல்வோம். என்ன கூட்டம்! எவ்வளவு போக்கு வரத்து!! ஒரு நிமிஷம் அஜாக்கிரதையாக இருந்தால் மோட்டார் ஏறிவிடும்.

இதோ பாருங்கள், வீரம் நிறைந்த மராட்டியப் பெண்கள்! அழகு நிறைந்த குஜராத்திப் பெண்கள்! ஆங்கில நாகரிகத்தில் அடியோடு மூழ்கிய பார்ஸிப் பெண்கள்! அகம்பாவம் பிடித்த ஆங்கிலோ இந்தியப் பெண்கள்! இவர்களெல்லாம் எங்கே செல்கிறார்கள்? சினிமாவுக்குத்தான்; இல்லையானால் இந்தியப் படங்கள் முப்

பது வாரம் எப்படி ஓட முடியும்?

சினிமாத் தியேட்டர்களிலே சிறந்தது மூன்று. முதலாவது, அமெரிக்கருக்குச் சொந்தமானது. இரண்டாவதும் மூன்றாவதும் பார்ஸிக்காரருக்குச் சொந்தமானவை. பார்ஸிக்காரர்களில் பலர் தங்களை இந்தியர் என்று நினைப்பதில்லை. ஆங்கிலேயர்கள் இந்தியர்களுக்கு மேலானவர்களென்றும், தாங்கள் ஆங்கிலேயர்களுக்குச் சமமானவர்களென்றும் பல பார்ஸிகள் கருதுகிறார்கள். ஒரு நண்பர் "பார்ஸிகள் யூதர்களைப் போன்றவர். இந்தியாவுக்குச் சுதந்தரம் கிடைத்ததும், இந்தப் பார்ஸிகளை, யூதர்களை ஹிட்லர் வெளியேற்றியதைப்போல் வெளியேற்றவேண்டும்" என்றார். ஆனால் எனக்கு இதில் சிறிதுகூடச் சம்மதமில்லை. ஒரு வேளை பெரும்பாலான பார்ஸிகள் யூதர்களைப் போலவேயிருந்தாலும், அவர்களை ஹிட்லரைப் போல நாம் வெளியேற்றக்கூடாது. அப்படிச் செய்தால் கேவலம் ஹிட்லருக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்?

சினிமாவில் ஆரம்பித்த இந்த விஷயம் பார்ஸிகளில் முடிகிறது. வியாபாரத்தைப் பற்றி எழுதினால் குஜராத்திகளோடு முடியும்; ஆபீஸ் உத்தியோகங்களைப்பற்றி எழுதினால் மதராஸிகளோடு முடியும்.

மதராஸிகள் என்றால் தமிழர், தெலுங்கர், கன்னடர், மலையாளத்தார் எல்லோரும்தான். சுமார் முப்பதாயிரம் மதராஸிகளுக்கு மேல் பம்பாயில் வசிக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் மாதுங்கா என்ற விடத்தில் வசிக்கிறார்கள். சென்னையில் ஒரு பகுதியை ஆந்திராவுக்குக் கொடுப்பதானால், பம்பாயில் மாதுங்காவைத் தமிழ்நாட்டுக்குக் கொடுத்துவிட வேண்டும்.

பொதுவாக, பம்பாய்க்காரர்களுக்கு-அதிலும் குஜராத்திகளுக்கு-மதராஸிகளைப்பற்றி மிகவும் கேவலமான அபிப்பிராயம். மதராஸிக்காரர்கள் ஆயிரக் கணக்காகப் பம்பாயில் முற்றுகை போடுகிறார்களென்பதும், மிகவும் குறைவான சம்பளத்துக்கு உத்தியோகத்துக்கு வந்து விடுகிறார்கள் என்பதும் குஜராத்திகள் கூறும் காரணம். எத்தனையோ குஜராத்திகள் நமது நாட்டில் வந்து வியாபாரம் செய்கிறார்களே, நாம் ஏதாவது கூறுகிறோமா? நூறு தமிழர்கள் பம்பாயில் சம்பாதித்து மீதம் பிடிப்பதைவிட, சென்னையில் வைர வியாபாரம் செய்யும் ஒரு குஜராத்தி அதிகமாகச் சம்பாதிக்கவில்லையா? தமிழர்கள் பிறர் வாழ்வதைக் கண்டு பொறாமை கொள்வதில்லை. தாங்களும் வாழவேண்டும், பிறரும் வாழவேண்டும் என்பதுதான் அவர்கள் சித்தாந்தம்.

பம்பாய்க்காரர்கள் மதராஸிகளை வெறுப்பதற்காக, மதராஸிகள் பம்பாயை வெறுக்கப்போவதில்லை. தமிழர்களுக்குப் பம்பாய்மீது எப்பொழுதும் நல்ல அபிப்பிராயம் உண்டு.

தாதாபாய் நௌரோஜியைப் பெற்றெடுத்தது பம்பாய். ஸர் பிரோஷ் ஷா மேத்தாவைப் பெற்றது பம்பாய். அன்னியத் துணி மறியலின்போது பாபுகன்னு என்னும் சிறுவன் மறியல் செய்து, மோட்டாரின்கீழ் மாண்டது பம்பாயில். தேசீய விஷயங்களில் மதராஸைப்போல எப்பொழுதும் முன்னணியில் நிற்பது பம்பாய். தமிழர்களுக்குத் தாய் நாட்டில் வேறுபாடு கிடையாது எல்லாம் ஒன்றே.

ஆனால் இந்த பம்பாயைப்பற்றி நினைக்கும் பொழுதெல்லாம், இரவுகளிலே வீதிகளில் படுத்துறங்கும் அனாதைகளைப் பற்றித்தான் ஞாபகம் வருகிறது. இந்த அனாதைகள் போதாதென்று, வெளி நாட்டிலிருந்து ஆயிரக் கணக்கான வெள்ளை அனாதைகள் (refugees) இறக்குமதி யாகின்றனர். இந்த வெள்ளை அனாதைகளுக்கு வேலையும், சாப்பாடும், இருக்க இடமும் சீக்கிரத்தில் கிடைத்து விடுகின்றன. இந்த வெள்ளை அனாதைகளுக்கு விசேஷச் சலுகைகள் காட்டப்படுகின்றன. அனாதைகளிலுமா வித்தியாசம்? இந்த வெள்ளை அனாதைகளுக்குச் சௌகரியங்கள் செய்வதற்காகச் சிரமப்படும் காருண்யம் நிறைந்த அரசாங்கமும், பெரிய மனிதர்களும், கமிட்டிகளும், பம்பாயிலுள்ள நிரந்தர உள்நாட்டு அனாதைகளைப் பற்றிக் கொஞ்சமாவது கவலை எடுத்துக் கொள்ள மாட்டார்களா என்றுதான் பலரும் எண்ணுகிறார்கள்.

பாவம்! இந்த அனாதைகள் என்ன செய்வார்கள்! 'பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த காந்தி' ஒருவரைத்தான் அவர்கள் நம்பி யிருக்கிறார்கள்.

அதுவும் ஒரு வேலைதான்!

வில்ஸன் பேரட் என்ற ஒரு நடிகர் இருந்தார். அவர் தமது வீட்டைச் செப்பனிட, பல ஊழியரை அமர்த்தி யிருந்தார். அவர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்வது கண்டு மனமிரங்கி, தாம் நடிக்கும் நாடகம் ஒன்றுக்கு இலவச டிக்கட்டுகள் கொடுத்து, ஒரு சனிக்கிழமை இரவு அவர்களை அழைத்துச் சென்றார்.

சம்பளம் போடும் நாள் வந்தது. வேலைக்காரரின் சம்பளப்பட்டியலைத் தரவழைத்தார். அதில் ஒவ்வொரு வேலையாளின் பெயருக்கும் எதிரே ஒரு புதிய 'அயிட்டம்' குறிக்கப் பட்டிருந்தது. அதாவது: "சனிக்கிழமை இரவு 4-மணி நேரம், ராஜாகொட்டகை'யில் 'ஓவர்டைம்' வேலை" என்று குறிக்கப்பட்டிருந்தது. எப்படி?

பணப்பித்து

அழ. வள்ளியப்பன்

பணத்திலே மனிதனுக்கு ஆசை வேண்டியதுதான். ஆனல், சிலருக்கு அளவுகடந்த பணப்பித்து இருக்கிறதே, அது மகா மோசம். பணத்திலே அப்படிப் பேராசை கொண்டிருப்பவனுக்குச் சந்தோஷமே கிடைப்பதில்லே. ஏனென்ருல், சந்தோஷத்தை அவன் அடையமுடியாதபடி அவனுக்கும் சந்தோஷத்துக்கும் நடுவிலே வேலியாக நின்று, அந்தப் பேராசை தடுக்கிறது. அவனுக்கு வயிறு பசிக்கிறதென்று வைத்துக்கொள்வோம். கிளப்புக்குள் செல்கிருன். அங்கே பலகாரம் சாப்பிடும்பொழுது பலகாரத்தில் மனம் செல்வதில்லே. பணத்தைப்பற்றியே எப்பொழுதும் நினைப்பதனல், "ஐயோ! இரண்டு இட்டலிக்கு ஓரணப் போய்விடுமே!" என்று கவலேப்பட்டுக் கொண்டே சாப்பிடுகிருன். ஒன்றரையணவுக்குமேல் தின்னவேகூடாது என்று எல்லேயும் கட்டிக்கொள்கிருன். ஆதலால், சாப்பிடுவதனல் உண்டாகும் ருசி யின்பத்தை அவன் இழந்துவிடுகிருன். அவனது பசியும் அடங்குவதில்லே. கிளப்பைவிட்டு வெளிவந்தவுடனே, மறுபடியும் பசிதான்.

ரயில்வே ஸ்டேஷன், பிரயாணிகள் விடுதி முதலிய இடங்களெல்லாம் அவன் கண்ணுக்குக் கொள்ளேயடிக்கும் இடங்களாகவே தோன்றுகின்றன. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பொருள்களேக் கொள்ளே யடிக்கவே வந்திருப்பதாக, அவனுக்குச் சதா நேரமும் ஒரு பயம் இருந்துகொண்டே யிருக்கிறது. இதெல்லாம் பண ஆசைப் பித்தின் விபரீதங்கள்.

பண ஆசை பிடித்தவர்களுக்கு, ஒவ்வொரு தம்பிடியைச் செலவழிக்கும் போதும் பரம வேதனே ஏற்படுகிறது. ஒரு சமயம் என்னுடைய ஒரு நண்பர் ரயிலில் வந்தார். அவரது சாமான்கள், வண்டியில் பாதி இடத்தை அடைத்துக் கொண்டன. திருச்சி ஜங்ஷனில் வேறு வண்டியில் மாறுவதற்காக, நாங்கள் இருவருமே இறங்கினேம்.

நண்பர் தமது சாமான்களேயும் என் சாமான்களுக்குப் பக்கத்திலே இறக்கி வைத்துவிட்டு, என்னே நோக்கி "கொஞ்சம் நம்ம சாமான்களேயும், ஒரு கூலி பிடிச்சு அந்த வண்டிக்குக் கொண்டு வரச் செய்யிரீங்களா? நான் இந்தா வாரேன்" என்று, எங்கேயோ அவசரமாகப் போய்விட்டு வரப்போகிறவர் போலக் கேட்டார். நானும் 'சரி' என்று தலேயாட்டினேன். அவர் சிறிது தூரம் போய் யாரையோ எதோ எதிர் பார்ப்பவர்போல நின்றுகொண்டிருந்தார். நான் எங்கள் இரண்டுபேர் பெட்டி படுக்கைகளேயும் இரண்டு கூலிகளிடம் கொடுத்து, மாற்றுவண்டிக்குக் கொண்டு போகச் செய்தேன். கூலி தமது சாமான்களேத் தூக்கினனே இல்லேயோ, நண்பரும் பின்னலேயே வந்துவிட்டார்.

அவர் சாமான்களேத் தூக்கிவந்த ஆளுக்குக் கூலி கொடுக்க வேண்டிய கட்டம் வந்தது. தாமே கொடுப்பதாகச் சொல்லி, என்னேத் தடுத்து விட்டார். ஆனல் உடனே கொடுக்கவில்லே. வண்டியில் ஏறிக்கொண்டு வெகுநேரம் வரையில் தம் சாமான்களே யெல்லாம் சரி பார்த்துக்கொண் டிருந்தார். ஆள் சிறிது நேரம் பொறுத்துப் பார்த்தான். அவர் கூலி கொடுக்கிற வழியாய்த் தெரியவில்லே. கடைசியில் அவனே கேட்டான். நண்பர் ஒரு அரையணவை அவனிடம் வீசி யெறிந்தார். "இதென்ன, சாமி, இது! என்ன பிச்சைக் காசா?" என்று அவன் நண்பரிடம் அதைத் திருப்பி எறிந்தான். நண்பர் தகராறு செய்ய ஆரம்பித்தார். அவனே அமர்த்தியவர் அவரா? நான்தானே. ஆகையால், அந்த விஷயத்தைத் தமது பேரத்துக்கு ஒரு வாதமாக அவர் உபயோகிக்கத் தொடங்கினர்.

"ஏண்டா, நானடா உன்னேக் கொண்டுவரச் சொன்னேன்? என்ன கெட்டுப் போனப்போலே யிருக்கு? கொடுத்ததை மரியாதையாய் வாங்கிக்கிட்டுப் போ; இல்லே, சும்மாப் போக வேண்டியது தான். ஒரு தம்பிடி கூடக் கொடுக்க மாட்டேன்" என்று கர்ஜித்து, இன்னும் ஒரு காலணவைச் சேர்த்து, முக்காலணவாக, அவனிடம் நண்பர் நீட்டினர். இதற்கெல்லாம் கூலியா மசிகிறவன்? அவனும் மேலும் கூச்சல் போட்டான். இவரும் கத்தினர். இவருக்குமேல் அவனும் அவனுக்கு மேல் இவரும் மேலும் மேலும் சத்தம் போட்டுக் கொண்டே யிருந்தார்கள். வண்டி புறப்படும் சமயம் நெருங்கிவிட்டது. நண்பரின் மேல் வேட்டியை, ஜன்னல் வழியாக அந்தக்கூலி எட்டிப் பிடித்துக் கொண்டு, "என்ன சங்கதி தெரியல்லே? பணத்தை வச்சிட்டு மறுவேலே பாரு, சாமி" என்று மிரட்ட ஆரம்பித்தான். நண்பர் பயந்துவிட்டார். பிறகு கசகிக் கசகி ஒவ்வொரு காலணவாகப் பையிலிருந்து எடுத்துக் கொடுத்துக் கொண்டே யிருந்தார். அப்படி அவர் கொடுத்த தெல்லாங்கூடி மொத்தம் ஒன்றேமுக்கால் அணுதான். அதற்குள் வண்டியும் நகர்ந்து விட்டது. பாவம்! கூலியால் அதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியவில்லே. திட்டிக்கொண்டே நின்ருன். இந்தப் பண ஆசை பிடித்த மனிதர் முதலில், "என்னடா காசு போயிற்றே!" என்று மிகவும் வருத்தப்பட்டார். ஆனல், "கொடுக்க வேண்டிய கூலி 4 அணுவில் $2\frac{1}{4}$ அணு மிகுத்து விட்டோம் அல்லவா?" என்று பிறகு கொஞ்சம் மனத்திருப்தி அடைந்தார். ஆனலும், அது சந்தோஷமில்லே. சந்தோஷமென்பது, அவர் சம்பந்தப்பட்ட மட்டில் மலடியின் குழந்தைமாதிரிதான். அவரால் சந்தோஷப்படவே முடியாது.

இப்படிப் பணப்பித்துப் பிடித்து அலேகிருர்களே, இவர்கள் தாங்கள்தான் சுகப்படுவதில்லே; பிறரையாவது சும்மா விடலாகாதா? அதுவுமில்லே. எல்லாருக்கும் அவர்களால் கஷ்டம்தான்.

பணத்தைச் சேகரிப்பதற்கு நூற்றுக் கணக்கான நல்ல வழிகள் இருக்கின்றன. பணத்தைச் சேகரிப்பது குற்றமல்ல. ஆனல் அந்தப் பணத்தின்மேல் அபார மோகம் கொண்டு, எப்பொழுதும் அதைச் சம்பாதிப்பதிலேயே கவனமாயிருப்பதுதான் குற்றமாகிறது. பணத்தை வெளியே ஓடிவிடாமல் பெட்டியில் பூட்டிவைத் திருப்பதனலேயோ, அல்லது பாங்கியில் போட்டு வைத்திருப்பதனலேயோ ஒருவித உபயோகமுமில்லே. எப்பொழுதும் பணம் நல்ல வழியில் செலவாகிக்கொண்டே இருக்க வேண்டும். செலவழிப்பதைத் தவிர, பணத்தால் வேறே என்ன பிரயோசனம்? உண்ணுமல், உடுக்காமல், உறங்காமல் பணத்தைச் சேமித்து வைத்தால், நமக்குப்பின் வருபவர் யாரோ ஒருவர் அதைச் செலவழித்துவிடத்தான் போகிருர். தகப்பன் தம்படிகூடச் செலவழிக்காமல் லட்சக் கணக்காய்ச் சேர்த்து வைத்திருப்பான். மகன் அதை யெல்லாம் கெட்ட வழிகளிலேயே செலவழிப்பான். அதனல் அந்த லோபி யடைந்த புண்ணியந்தான் என்ன?

பணத்தைத் தானே வைத்துக்கொண்டிருப்பதால் சந்தோஷம் வந்துவிடாது. பிறருக்குக் கொடுத்து அவர்கள் நன்மை பெறச் செய்தால்தான் தன்னே அவர்கள் போற்றிப் புகழ்வார்கள்; தனக்குப் பின்

னும் தன்பெயர் நிலை நிற்கும். எச்சிற் கையாலும் காக்கை ஓட்டாதவனாக இருந்தால், யார்தான் மதிப்பார்கள்? உடலுடன் பெயரும் புதைபட்டுத்தான் போகும்.

பள்ளிக்கூடப் பையன்களில் சிலர் மேல் நாட்டாரைப் பார்த்து, வேடிக்கையாகத் தபால் தலைகள் சேகரிக்கிறார்களல்லவா; அது போலத்தான் பண ஆசை கொண்டவனும் பணத்தைச் சேகரிக்கிறான். ஆனால், தபால் தலை சேர்ப்பது பொழுது போக்குக்காக ஓய்வு நேரத்தில் செய்யும் வேலை. பணம் சேர்ப்பதோ வாழ்க்கை முழுவதையுமே ஈடுபடுத்திச் செய்யும் வேலையாக இருக்கிறது. தபால் தலை சேகரிப்பதில் உற்சாகம் இருக்கிறது. பணம் சேகரிப்பதிலோ உற்சாகத்தின் வாசனைகூட இல்லை. ஒரு லட்ச ரூபாய் கையில் உள்ளவன் பத்து லட்ச ரூபாய் அடைய விரும்புகிறான். மீதி ஒன்பது லட்சத்தையும் சம்பாதிப்பதற்காக, அவன் தரித்திரனாகவே வாழ்ந்து வரவேண்டியிருக்கிறது. அரை வயிற்றுக்குக்கூடச் சாப்பிட மனம் வருவதில்லை. எந்த வழியில் எப்படி எவரிடமிருந்து பணத்தைப் பறிக்கலாம் என்றெல்லாம் சதா ஆலோசனை செய்யவேண்டியிருக்கிறது. அவனது வாழ்க்கையில் சுகம் எப்படி ஏற்படும்?

ஏராளமான லோபிகள் இருக்கிறார்கள். கையிலுள்ள பணத்தை குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கொள்ளுவதுதான் அவர்கள் வழக்கம். எப்போதும் பரிதாபகரமான நிலைமையிலேயே அவர்கள் வாழ்கிறார்கள். வீடு வாசல், நிலபுலம் எல்லாம் ஏராளமாக ஒரு லோபிக்கு இருந்தது. ஆனால், கிழிந்த வேஷ்டி, பிய்ந்த செருப்பு இவற்றைத்தான் அவன் எப்போதும் அணிந்து கொண்டு வீதியில் நடந்து செல்வான். அவையும், தான் பணங்கொடுத்து வாங்கியவை யல்ல. யாராவது குளிர்ந்த மனதுள்ள பெண்கள் குப்பையில் எறிவதற்குப் பதிலாக அவனுக்குத் தானம் கொடுத்ததாயிருக்கும். இப்படி அவன் கஷ்டப்படுவது எதற்காக? பணத்தை மிகுத்து வைப்பதற்காகத்தான். சாகும் வரை மிகுத்து மிகுத்து வைத்துக் காணும் பலன் என்ன?

இம் மாதிரி லோபிகளாவது கையில் உள்ள பணத்தைச் செலவழிக்காமல் பூட்டி வைப்பதோடு நிற்கிறார்கள். ஆனால் இந்த லோபித்தனத்தைவிட மிகவும் மோசமாக வேறு ஒன்று இருக்கிறது. அதுதான் பணத்தை மேலும் மேலும் சேர்க்கவேண்டுமென்னும் ஆசை. பணம் கையைவிட்டுப் போகாமல் அதைக் காப்பாற்ற ஒரு காரணமிருந்தால், பணத்தைச் சம்பாதிக்க ஒன்பது காரணங்கள் இருக்கின்றன.

டாக்டர் ஜான்ஸன் என்ற ஆங்கில ஆசிரியர் ஓரிடத்தில், "மனிதன் பணத்தைச் சம்பாதிப்பதைவிடக் குற்றமற்ற காரியம் வேறொன்றில்லை" என்கிறார். ஆனால் சில மனிதர்கள் பணம் சம்பாதிப்பதைப் பார்த்தால், பயங்கரமாக இருக்கிறது. "நாம பணம் சேகரிப்பதற்காகவே உலகில் ஜன்மம் எடுத்திருக்கிறோம்" என்று எண்ணிக்கொண்டு, பணம், பணம் என்று பேயாய் அலைகிறார்கள். நல்ல வழியோ, கெட்ட வழியோ, அதைப்பற்றி அவர்களுக்குக் கவலையே யில்லை. ஏழைகளிட மிருந்து கூடக் கொள்ளையடிக்கிறார்கள். செய்கையில் இப்படி இருந்தாலும் வெளியே மிகவும் நல்லவர்கள்போல நடிக்கிறார்கள். அவர்களுடைய ஆடம்பரமும் வீண் பேச்சுகளுமே அவ்வாறு நடிப்பதற்கு அணிகளாக இருக்கின்றன.

இந்தப் பணப் பேய்களைவிட, அந்த லோபிகளே மேல் என்பது என் அபிப்பிராயம். கருமிகளால், பிறருக்கு உபகாரமில்லாவிட்டாலும் அபகாரமில்லை; இவர்களால் அதுவுமன்றோ விளைகிறது!

உலகத்திலேயே மிகச் சிறிய காசு, திருவாங்கூரில் வழங்கும் ஒரு 'சக்கரம்' தான். அதன் மேல் 'ஒரு காசு' என்று மலையாளத்தில் எழுதப்பட்டுள்ளது. அது முதன் முதலாக 1815-ஆம் ௵ செய்யப்பட்டது. பிறகு 1900ஆம் ௵ கொஞ்சம் மாற்றப்பட்டது. பிரிட்டிஷ் ரூபாயில் 1,456-பங்கில் ஒன்றாக அதன் மதிப்பு வழங்குகிறது.

பருவ மங்கை

"பூ"

பல்லவி

மங்கைப் பருவமுன் மேனிமுழுவதும்
பொங்கி வழியுதடி—பொங்கிப்
பொங்கி வழியுதடி—இள (மங்கை)

அனுபல்லவி

செங்கையின் வீச்சினிலும்—உந்தன்
செந்தமிழ்ப் பேச்சினிலும்— இள (மங்கை)

சரணம்

அன்ன நடை தன்னிலும்—நீ
அங்கு மிங்கும் ஓடி ஆடித்திரிகையில்
மின்னல் நடை தன்னிலும்—அந்த
மெட்டி குலுங்கும் இசைதன்னிலும்—இள
(மங்கை)

ஸினிமாக் கடிதம்–5:

படப்பிடிப்பாளருக்கு—

தி. ஜ. ர.

காமிரா நண்பரே! தங்களிடம் வரும்போது, எனக்குப் பயமா யிருக்கிறது. நடிகரையும் கதாசிரியரையும் போல் அல்ல தாங்கள். ‘கலாசூட்சுமம்’ என்ற போர்வை உங்களிட மிருக்கிறது. ‘டெக்னீக்,’ ‘டெக்னீக்,’ என்று அவர்களும் ஜபிக்கக் கூடும். அதை நான் சரிக்கட்டி விடுவேன். ஆனால், உங்களிடம் அது முடியாது. காமிராக் கலையில் தங்களுக்கு வேறு என்ன தெரியுமோ, என்ன தெரியாதோ; என்னை மடக்குவதற்கு வேண்டிய வாதங்கள் மட்டில் நன்றாய்த் தெரிந்திருக்கும். எனது அறியாமையை உங்கள் கேடயமாக நீங்கள் உபயோகிப்பீர்கள். ஆனால், நானும் விடமாட்டேன்; நான் ஒரு நக்கீரனாகி, ‘நெற்றிக் கண் காட்டினாலும் குற்றம் குற்றமே’ என்று சாதிப்பேன். நாம் ஒருவருக் கொருவர் வாதம் செய்வது பிரயோசனப்படாது. எனக்கு வந்த நாற்காலியிலே நான் பழுது காண்பேனானால், “இதோ உளியைப் பார்; வாச்சியைப் பார். இவற்றிலே காரணம் தப்பினால் மாரணம். அப்படி யிருக்க, இவற்றால் செய்த நாற்காலியை நீ எப்படிப் பழுது சொல்லலாம்?” என்று தச்சன் தருக்கிக்கலாமா?

காமிராவைக் கையாளுவதிலே உங்களுக்கு எத்தனையோ சிரமங்களிருக்கும் என்பதை நான் அறிவேன். ஒரு வெறும் காமிராவை வைத்துக்கொண்டே நான் படும் பாடு எனக்குத் தெரியும். ‘நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்’ என்ற பழமொழி, காமிராக்கள் கண்டு பிடிக்கப் படாத காலம் வரையில்தான் செலாவணியா யிருக்கவேண்டும். இக்காலத்தில், ‘நாம் ஒன்று நினைக்க, நம் காமிராக்கள் வேறொன்று நினைத்து விடுகின்றன’ என்பது உண்மை. நமது கண்ணுக்கும் காமிராவின் கண்ணுக்கும் ஒற்றுமை மிகக் குறைவு. ‘அஹம் பிரம்மாஸ்மி’ என்னும் யோகிகளைப் போல, நீங்கள் அடியோடு உங்கள் ஊனக்கண்ணை யிழந்து, காமிராவின் ‘ஞானக் கண்’ணிலே ஒன்றி விட்டால்தான், வெற்றிகரமாய்ப் படமெடுக்க முடியும்.

உங்கள் அழகுசுந்தரியை, காமிரா அவலட்சண அவதாரமாய்க் காண்கிறது. உங்கள் பூஞ்செடியை, அது கள்ளியம் புதர் ஆக்கி விடுகிறது. அதன் பார்வை, ஏதோ செவ்வாய்க் கிரகத்திலிருந்து வந்த ஜந்துவின் பார்வையா யிருக்கிறதே யொழிய, இகலோக மனிதனின் பார்வையா யில்லை. அதற்குக் கோடுகளும் ஒளி நிழல்களும்தான் தெரியும்; கனமென்ற பரிமாணத்தைக் காமிராவின் கண் அறியாது. அட்டையை அரண்மனையாய் அதனிடம் நீங்கள் ஏமாற்றி விடலாம்; அதுவும் அப்படியே ஊரை ஏமாற்றும். காமிராவின் குணங் குறைகளை நீங்கள் மிக நன்றாய் ஆராய்ந்து வைத்துக் கொண்டால், பல இந்திர ஜாலங்களை அது உங்களுக்குச் செய்து தரும். அதற்காக எப்பொழுது பார்த்தாலும் செப்படு வித்தையிலேயே நீங்கள் இறங்கிக் கொண்டிருக்கக் கூடாது. இறங்கினால், விரசமாக்கி விடுவது மாத்திர மல்ல; உங்கள் ரந்திரங்களைக் கூட அது அம்பலம் செய்துவிடும்.

படங்களைப் பார்த்துப் பார்த்து அடைந்த அனுபவ அளவுக்கு, எனக்குத் தோன்றிய சில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன். பொருத்தமும் உசிதமும் உள்ளவற்றை ஏற்றுக் கொள்ளுங்கள்; மற்றவற்றை என்னிடமே விட்டு விடுங்கள். இன்னொரு நாள் தங்களிடம் வருகிறேன். விடாமுயற்சியில் எனக்கு நம்பிக்கை உண்டு. உங்களுடைய ஒரே நோக்கமா யிருக்க வேண்டியது, படம் கண்ணுக்கு ரம்யமாய், தெளிவாய்; குளிர்ச்சியா யிருக்கவேண்டும் என்பது தான். அங்கங்கே சில சில உணர்ச்சிகளை எழுப்புவதற்காக, படம் தெளிவு குன்றலாம். இனிமை குன்றலாகாது; கண்ணை உறுத்தவும் கூடாது. இந்த முக்கிய சூத்திரத்தைக் கடைப்பிடித்து விட்டீர்களானால், மற்ற விதிகளை வகுத்துக் கொள்வதில் கஷ்டமிராது.

படமெடுக்க வேண்டிய வஸ்துவின் சொரூபத்தை நீங்கள் நன்றாக ஆராய வேண்டும். ஒளியை லாகவமாய் உபயோகித்து, பற் பல கோணங்களிலிருந்து பற்பல விதமாய் அந்த ரூபத்தை நீங்கள் பரிட்சார்த்தமான படங்கள் எடுத்துப் பார்ப்பது நல்லது. நடிகர்கள் விஷயத்தில் இது மெத்த அவசியமும் ஆகும். நேரே பார்வைக்கு அழகா யிருப்பவரில் சிலர் காமிராவில் அழகா யிருப்பதில்லை. நமது கண்ணுக்கு அழகா யில்லாத சிலரை, காமிரா மிக அழகாய்க் காண்கிறது. சினிமா சம்பந்தப்பட்ட மட்டில், காமிராவின் விருப்பு வெறுப்புக்களையே நீங்கள் மதித்து நடக்க வேண்டும். உங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்களை மூட்டை கட்டி வைத்து விட வேண்டும்.

எனக்குப் பட்ட சில உதாரணங்களைச் சொல்லட்டுமா? ‘ஸேவா ஸத’னில் ஸ்ரீமதி சுப்புலட்சுமியின் முகம் ஒரு பக்கம் திரும்பி யிருந்த போதெல்லாம் மிக வசீகரமா யிருந்தது; மற்றொரு பக்கந் திரும்பிய போதோ, நன்றா யில்லை. ஆனால், நன்றாயில்லாத பக்கந்தான் படத்தில் பெரும்பாலும் காட்சி தந்தது! இதை முடிந்த மட்டில் விலக்கி யிருக்க வேண்டும். ‘ஜலஜா’வின் அவ்வளவு பருமனான கால் ஜதி வரிசையை ‘க்ளோஸ்-அப்’ காட்டியிருக்க வேண்டியதில்லை என்று ஒரு நண்பர் சொன்ன ஞாபகம். ‘இல்லாளு’வில் காஞ்சனமாலா முகத்தின் ஒருபுறத் தோற்றம், நமது புராதனக் குகை யோவியம் ஒன்றை எனக்கு ஞாபகமூட்டிற்று. சில சில நடிகர்களும் பொருள்களும் சம்பந்தப்பட்ட மட்டில், சில சில கோணங்களைத் தேரவும் சில சிலவற்றை விலக்கவும் வேண்டும் என்று வற்புறுத்தவே இவற்றைச் சொன்னேன். படத் தொடர்ச்சிக்கும் பாவத்துக்கும் ரஸத்துக்கும் பங்கமில்லாமல் இந்த விதியை மிகப் பிடிவாதமாய் நீங்கள் அனுஷ்டிக்க வேண்டும்.

இயற்கைக் காட்சிகள் ரொம்ப அழகா யிருக்கலாம். ஆனால், ஜீவ இயக்கமற்ற ஜடக்காட்சிகளைத் தொடர்ச்சியாக வெகு நேரம் படத்திலே காட்டிக்கொண்டிருக்கக் கூடாது. மாறி மாறி அங்கங்கே வரலாம். அநாவசியமான ‘க்ளோஸ்-அப்’கள் கூடாது; சம்பாஷணைகள், பாட்டுகளின்போது, சாத்தியமான மட்டில், சமயோசிதமான ‘இன்ஸெர்ட்டு’களைப் புகுத்த வேண்டும். இதெல்லாம் உங்களுக்குத் தெரிந்தது தான். திறமையாகக் கையாளுங்கள் என்று ஞாபக மூட்டவே குறிப்பிட்டேன்.

மொத்தத்தில் மீண்டும் மீண்டும், உங்களை நான் கேட்டுக்கொள்வது இது தான்: படத்தைக் கண்ணுக்கு இனிமையாய், ஸுகமாய், குளிர்ச்சியாய் எடுக்க முயலுங்கள். அது உங்கள் கடமை; அதுதான் உங்கள் கடமை.

உங்கள் நேசன்.

ஒருசமயம் உலகமெங்கும் விலைகள் மிகவும் இறங்கிவிட்டன. அமெரிக்காவில் விளைந்த பஞ்சு விற்பனையாக வில்லை. அமெரிக்கர் ஒரு யுக்தி செய்தார்கள். ஆயிரக்கணக்கான டன் நிறையுள்ள பஞ்சைத் தாருடனும் மண்ணுடனும் சேர்த்து ரஸ்தாக்கள்போட உபயோகித்து விட்டார்கள்!

ஓரங்க நாடகம்:

ஜன்னல்

ஹரீந்திரநாத சட்டோபாத்தியாயா

(சென்ற மாதத் தொடர்ச்சி)

தொழிலாளி: குழந்தைகள் எங்கே?

மனைவி: இப்பதான் குழந்தைகள் தூங்கப் போனதுகள். இத்தனை நாழியும் மேகத்தைப் பற்றியும் நிலாவைப் பற்றியும் வானத்தைப் பற்றியும் தாத்தாவின் வெள்ளைத் தாடியைப் பற்றியும் இன்னும் என்னென்னமோ ஓயாமல் உளறிக்கொண்டேயிருந்தன, அதோ அந்த ஜன்னல் பக்கம் நின்றுகொண்டு.

தொழிலாளி: அந்த ஜன்னலிடம் அவை ரொம்பப் பிரியம் வைத்திருக்கின்றன, இல்லையா! பாவம்! அசட்டுக் குழந்தைகள்! அவைகளுக்கு இந்த ஒரு சந்தோஷம் தானே உண்டு? மேகமும் சந்திரனும் நட்சத்திரங்களும் அடங்கிய வானம்தான் அவைகளின் பொம்மைப் பெட்டி. வேறு பொம்மைகள் ஏது? ஆமாம், ஒரு தொழிலாளியின் வீட்டிலே பிறந்த பாவத்துக்கு வேறென்ன கிடைக்கும்? பகவானும், பகவான்! பகவான் நாசமாய்ப் போக!!! நான் புரிவது தெய்வ நிந்தையானல், அதை அவன் மன்னிப்பானுக?

மனைவி: என் சிநேகிதியான அடுத்த வீட்டு அக்காள் கொஞ்ச நேரத்துக்கு முன் வந்து, ஒரு மண்பானை இரவல் கேட்டாள். போன வாரம் சாலையோரத்துச் சந்தையிலே இரண்டு பானைகள் வாங்கினீர்களே, அதில் ஒன்றை அவளுக்குக் கொடுத்து விட்டேன்.

தொழிலாளி: நல்லது, அவர்கள் பானை என்ன ஆச்சு? உடைந்து போச்சப்போ விருக்கு?

மனைவி: ஆமாம். 'சகலமும்தான் ஒரு நாள் உடைந்து போகப் போகிறது' என்று நான் அவளிடம் சொன்னேன்.

தொழிலாளி: பேஷ், நன்றாய்ச் சொன்னாய்!—ஆமாம், ஒரு நாள் என்ன, வெகு சீக்கிரத்திலேயே சகலமும் உடைந்து போகப் போகின்றன—நாம் நமது வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிஷத்திலும் ஒடிந்து விழுகிறோம். நானும் நாசம்—நீயும் நாசம்—நாம் அனைவருமே நாசம் — ஏழை மண்பாண்டங்கள், மலிந்த மண்பாண்டங்கள்!

மனைவி: நீங்கள் வொர்க ஷாப்பிலிருந்து நேரேயா வருகிறீர்கள்?

தொழிலாளி: ஆமாம்; உனக்குத்தான் தெரியுமே, இடையிலே கொஞ்சம் தங்கிவிட்டு வந்தேன்.

மனைவி: கள் நாற்றம் வீசுகிறதே!

தொழிலாளி: நல்லது, அது ஏனென்று உனக்குத் தெரியும்.

மனைவி: தெரியும். ஆனல், தொழிலாளிகள் கள்ளை விட்டுவிட்டு அதற்குப் பதிலாய்க் கடவுளைப் பற்றிப் பாடி ஆனந்திக்கும்படி செய்ய, அவர்கள் முயற்சிக்கிறார்களே.

தொழிலாளி: ஏழைத் தொழிலாளி, கள்ளை விட்டால் கடவுளையும் விட்டு விடுவான்; கடவுளை விட்டால் கள்ளையும் விட்டு விடுவான்.

மனைவி: வாருங்கள், வாருங்கள்; சாப்பிட நேரமாக வில்லையா?

தொழிலாளி: எனக்கு இன்று ராத்திரி பசியில்லை. நான் களைத்துப் போயிருக்கிறேன். ரொம்பக் களைத்திருப்பதால், ஒரு கவளம் கூட உண்ண முடியாது.

மனைவி: ஏதோ சஞ்சலப்படுகிறீர்கள் போல் தோணுது.

தொழிலாளி: ஆமாம். ஒரு வதந்திதான் அதன் காரணம்.

மனைவி: என்ன வதந்தி?

தொழிலாளி: கூடிய சீக்கிரம் அவர்கள் சகலத்துக்கும் வரி போடப் போகிறார்களாம்.

மனைவி: சட்டங்களைச் செய்வது யார்?

தொழிலாளி: சட்டங்கள் செய்பவரை நாம் ஒரு நாளும் பார்த்ததில்லை. அவர்கள் மகா புனிதமானவர்கள்; மகா மதிப்புடையவர்கள். அவர்கள் தேவர்களைப் போன்றவர்கள்; ஒரு நாளும் அவர்களை நாம் பார்க்க முடியாது. ஏனெனில், அவர்களை ஒரு தரம் நாம் பார்த்து விட்டோமானல், அவர்கள் தேவர்களாயிருப்பது ஒழிந்து விடும்; முழு உண்மையும் வெளிப்பட்டு விடும்.

மனைவி: சட்டங்கள் விசித்திரமாயிருக்கின்றனவே! சகல சட்டங்களும் மனிதன் செய்தவைதானு?

தொழிலாளி: சகலமும்—ஆம், சகலமுந்தான். ஆலைச் சட்டங்கள், தொழிற்சாலைச் சட்டங்கள், நிலச் சட்டங்கள்!

மனைவி: கர்ம பலனைப் பற்றிய சட்டங்கூட மனிதன் செய்தது தானே?

தொழிலாளி: ஆமாம், பெண்ணே! அதுவுங்கூடத்தான்! சகலத்திலும் மகா தந்திரமான, அதி யுக்தியான சட்டம் அதுதான்! சென்ற ஜன்மத்திலே செய்த பாவங்களுக்காகவே நாம் நசுக்கப்பட்டு, ஒடிந்து, பட்டினியில் உழன்று தவிக்கிறோம் என்று அது சொல்லுகிறது! அவை யெல்லாம் நாசமாய்ப் போக! இந்தச் சட்டங்களுக் கெல்லாம் நாம் தலை பணிந்து கிடக்கிறோம். ஹா!......பெண்ணே! நீ என்ன நினைக்கிறாய்? இப்போது அவர்கள் மற்றோர் சட்டம் செய்யப் போகிறார்கள். இன்று சாயந்திரம் அதை நாங்கள் கேள்விப்பட்டோம். அது என்ன சட்டமாயிருக்கும் என்று உன்னல் ஊகிக்கவே முடியாது.

மனைவி: சொல்லுங்கள், சொல்லுங்களேன்.

தொழிலாளி: மகா கொடியது, அற்பத்தனமானது, கேவலமானது. ஐயோ! என் ஏழைக் குழந்தைகள் என்ன செய்யும்!

மனைவி: என்ன? நம்ம குழந்தைகளை அவர்கள் எடுத்துக்கொண்டு போய் விடப் போகிறார்களா, என்ன?

தொழிலாளி: அதற்குத் துணிச்சல் உண்டா அவர்களுக்கு? பெண்ணே! நான் இங்கே உள்ள மட்டில், விஷமேறிய இந்த நாடி நரம்புகளில் ஒரு சொட்டு ரத்தம் மிஞ்சியிருக்கு மட்டில் அவர்களால் அது முடியாது.

மனைவி: பின்னே அது என்ன?

தொழிலாளி: இப்போது அதை உனக்கு நான் சொல்ல முடியாது. இல்லை. சொல்லக்கூடாது. சொல்ல மாட்டேன். நல்லது! சரி, சரி. அவர்கள் பார்க்கட்டும்; முடிந்த கெடுதலை யெல்லாம் செய்து பார்க்கட்டும். சகல

முந்தான் என்றோ ஒரு நாள் உடைந்து போகப் போகிறது. (பேய்ச் சிரிப்புடன்) பெண்ணே! நீ சொன்னது சரி!

(பக்கத்து வீட்டுத் தொழிலாளியொருவன் திடீரென்று பிரவேசிக்கிறான்.)

பக்கத்து வீட்டான்: அண்ணா! அது நிஜந்தான்; வதந்தி நிஜந்தான். அவன் இப்போதே வந்து விட்டான். (பிரவேசித்தது போலவே வேகமாய் வெளியேறி விடுகிறான்.)

தொழிலாளி: அவர்கள் நம்மை நசுக்கி, புண்படுத்தி, அங்கவீனமாக்கி விடுவதென்று முனைந்திருக்கிறார்கள். சிலர், சிலரே கொடுங்கோலர்கள்—அவர்கள் நம்மைக் கையையும் காலையும் கட்டி சக்கரங்களிலே பூட்டி, குதிரைகளைப்போல் ஜேண மிட்டு, ஆடுகளைப்போல் தார்ப்போட்டு விரட்டுகிறார்கள்; நமது கால் கைகளிலே விலங்கிட்டு விட்டார்கள். நமது வருங்கால சந்ததிக ளெல்லாம் தாய் வயிற்றிலே பிறக்கும்போதே மணிக்கட்டிலே பார விலங்குகளோடும் கணைக் காலிலே கனத்த இரும்புச் சங்கலிகளோடும் பிறப்பதைத் தாங்கள் காணலாம் என்று அவர்கள் ஆசை கொண்டிருக்கிறார்கள்! நம்மை வாயில்லாப் பாமர மக்கள் என்று அவர்கள் அழைக்கிறார்கள். இன்னும் மிஞ்சிவிட வில்லை. நாம் யாரென்று அவர்களுக்குக் காட்டுவோம். பாமர மக்களாமே, பாமர மக்கள்! நமது இருள் சூழ்ந்த பாழடைந்த குகைகளுக்குள்ளும் சேரிகளுக்குள்ளும் அவர்கள் வந்து பார்க்கட்டுமே! இந்தப் பாமர மக்கள் ஊமையும் குருடுமல்ல, தங்கள் இஷ்டப்படி யெல்லாம் உபயோகப்படுத்திக் கொள்வதற்காகப் படைக்கப்பட்ட ஏதோ வோர் மிருக சக்தியல்ல வெனக் காண்பார்கள். பாமர மக்களும், பெண்டு, பிள்ளை, குழந்தை, குட்டிகளெல்லா மடங்கிய மனித குலந்தான் என்றும், அந்த ஒவ்வொருவரும் தனித்தனி உயிரும் பண்பும் பூர்ணமும் கம்பீரமும் வாய்ந்தவர் தான் எனவும் காண்பார்கள். நம் ஒவ்வொருவர் இதயமும் வெற்றியை நாடிச் சித்தமான போர் முரசுபோல் அடித்துக் கொண்டிருப்பதையும் அவர்கள் காண்பார்கள்.

மனைவி: களைத்திருக்கும் தோழா! வாஸ்தவம்; நீங்கள் சொல்வதெல்லாம் வாஸ்தவம்.

தொழிலாளி: வேலை செய்யும் தொழிலாளிக்கு எண்ணும் சிந்தை யுண்டு; களிக்கும் நகைப் புண்டு; கற்பனைக் கனவுண்டு; சகிக்கும் தியாக முண்டு—ஆமாம், அவர்களைவிட அழகாகக் காதல் புரியக்கூடத் தெரியும். பாமர மக்கள்! ஆம், பெண்ணே! என்றோ ஒரு நாள் அது ஒடிந்து விழப்போகிறது—ஜல வெள்ளம் போல! உறுமும் அலை கடலின் ஜல வெள்ளம் அணை கடப்பது போல!! அவர்களைப் பழிக்குப் பழி வாங்குவோம். நீண்ட சாவினின்றும் மீண்டெழுந்து திடீரென்று பரிபூர்ணமாய் விழித்துக் கொண்டு விட்டோம் என்று நாளையே அவர்கள் உணரும்படி செய்வோம். கடைசியாய், கடைசியாய், பெண்ணே! கொடுங்கோலனின் கொடுங்கோன்மைக்கு நாம் நன்றியே செலுத்த வேண்டும். அதுவே யன்றோ நம் அனைவரையும் உறக்கத்தினின்றும் தட்டி யெழுப்பி விட்டது! சக்கரங்களில் பூட்டிய அடிமைகளாய் இனி வாழோம்; சிலருக்குச் சொந்தமான பார இயந்திரங்களிலே அகப்பட்டு உடலும் உயிரும் நசுங்கி நொந்து இனி வாழோம். ஆர்த்தெழுந்து பறித்து அவ்வியந்திரங்களுக்கு நாமே எஜமானாவோம்—அதன் பின்? ஓய்வு! சாந்தி!—இயந்திரங்கள் கோடிக் கணக்கான மக்களுக்குச் சொந்தமாகும்! நல்லது—நாம் நடைப் பிணங்களாயிரோம். என்ன! நம்பிக்கையா? சுதந்திரமா? நமக்கா? நமக்குக் கூடவா? எளிய, மிதிபட்ட ஜந்துக்களான நமக்கா? ரத்தம் செத்துக் களைத்துச் சோர்ந்த அடிமைத் தொழிலாளிக்கா? பசியே! கடைசியாய்ப் பார்க்கப் போனால் நீ வெறும் புகைப் படலந்தானா? இவ்வளவு சீக்கிரம் போய் விட்டாயே! துன்பமே! நீ வெறும் உருவெளிதானா? இவ்வளவு சீக்கிரம் அற்றொழிந்தாயே! அது சாத்தியமா? என்ன? என்ன? நான் என்ன சொல்லிக் கொண்டிருந்தேன், பெண்ணே? எனக்குப் பித்தா பிடித்திருக்கிறது? நான் என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்? பசியும் தொழும்பும் மிடியும் நம்மை விட்டு விலகி விடுமா? நிஜமாகவா?

ஹரீந்திரநாத சட்டோபாத்தியாயா

மனைவி: ஆம், விலகிவிடும். களைத்துச் சோர்ந்த என் ஏழைத் தோழா! கூடிய சீக்கிரம் நமக்கு நல்ல காலம் பிறந்து விடும்!

தொழிலாளி: இல்லை......அந்தக் காலம் வெகு தூரத்தி லிருக்கிறது. நாமோ களைத்துக் கிடக்கிறோம்.

(தார் பூசுவோன், கையிலே ஒரு வாளியில் தாரும் புருஷும் எடுத்துக் கொண்டு பிரவேசிக்கிறான்.)

தார் பூசுவோன்: இவ்வளவு நேரங் கழித்து வந்ததற்கு மன்னியுங்கள். ஜன்னல் எங்கே யிருக்கிறது?

மனைவி: அவனுக்கு இங்கே என்ன வேண்டுமாம்? அவன் யார்?

தொழிலாளி: வதந்தி உண்மையாகி விட்டது. வந்து விட்டாயா, அப்பா! அதோ இருக்கிறது ஜன்னல்—அழகான ஜன்னல்! உனக்கு வாழ்க்கையிலே சலிப்புத் தட்டினால் எறிக் குதித்து விடலாம் இந்த ஜன்னலிலே.

தார் பூசுவோன்: (ஜன்னலின் உடைந்த கண்ணாடிக் கதவுகளில் தாரைப் பூசத் தொடங்குகிறான்) பாவத்தைப் போல் கறுத்தது—பாவத்தைப் போல் கறுத்தது—அதுதான் தார். நான் எனக்கிட்ட வேலையையே செய்கிறேன்; அவ்வளவுதான்.

தொழிலாளியின் மனைவி: அவன் என்ன பைத்தியமா? என்ன செய்கிறான்?

தொழிலாளி: ஜன்னலுக்கும் அதன் உடைந்த கண்ணாடிக் கதவுகளுக்கும் தார் பூசுகிறான்! சிலரேயான முதலாளிகள், புதியதோர் சட்டத்தைச் செய்திருக்கிறார்கள். இப்போது அவர்கள், வெளிச்சத்துக்கு வரி போட்டிருக்கிறார்கள்.

மனைவி: வெளிச்சத்துக்கு வரியா? மறுபடியும் நம் வீட்டுக்கு வெளிச்சமே ஒரு போதும் வாராதா?

தார் பூசுவோன்: இனி வாராது—அதற்கு வரி செலுத்தும் வரையில் வாராது. படிப்படியான வரி விகிதங்கள்

தயாரித்திருக்கிறார்கள். அதை யனுசரித்து, உங்களுக்கு வேண்டிய வெளிச்சத்தை நீங்கள் கிரயத்துக்கு வாங்கிக் கொள்ளலாம். நமஸ்காரம். போய் வருகிறேன்.

(தார் பூசுவோன் தனது வாளியையும் புருஷையும் எடுத்துக்கொண்டு வெளியேறுகிறான்.)

தொழிலாளி: இதுதான் பட்டப்பகலிலே அடிக்கும் பகற் கொள்ளையின் உச்சம்—பகல் வெளிச்சத்தையே அடிக்கும் கொள்ளை!

மனைவி: கூடிய சீக்கிரம் சகலத்துக்கும் அவர்கள் வரி போட்டு விடுவார்கள். நமது கண்கள், நமது குழந்தைகளின் கண்களுக்கெல்லாம் வரி போட்டு விடுவார்கள் போலிருக்கிறதே? நமது வாய்களையும் பூட்டி முத்திரையிட்டு விடுவார்கள். நமது கனவுகள், நமது பாட்டுகள், நமது அழுகைகள், நமது சிரிப்புகள் எல்லாவற்றுக்குங்கூட ஒரு வேளை வரி போட்டு விடுவார்கள்! சகலத்துக்கும் வரி போட்டு விடுவார்கள்!

தொழிலாளி: ஆனால், நமது பிரார்த்தனைகளுக்கும் பஜனாவளிகளுக்கும் மாத்திரம் வரி விதிக்க மாட்டார்கள். ஏனெனில், அங்கே யிருக்கிறாரே அங்கே, (வானத்தை நோக்கிக் குத்து விடுபவன்போல் முஷ்டியை ஓங்குகிறான்) சகல விஷயங்களையும் பார்த்துக் கொண்டு, என்றாலும் ஒரு வார்த்தையும் சொல்லாமல் அங்கே யிருந்து கொண்டிருக்கிறாரே அந்தக் கடவுளுக்கு நமது பிரார்த்தனைகளையும் பஜனைகளையும் நாம் தாராளமாய்ச் செய்து கொண்டிருக்க வேண்டு மல்லவா, அதற்காக! நமது கடவுள் விக்கிரயமாகி விட்டார்; இயந்திரங்களுக்கும் நிலத்துக்கும் சகல பொருளுக்குமே சொந்தக்காரரான பணக்கார கர்விகள் கடவுளைக் கிரயம் வாங்கி விட்டார்கள். ஏன், பெண்ணே! உன் உடலுக்குக் கூட அவர்கள் வரி போட்டு விடக் கூடும்; அப்போது உன்னைக் காதலிக்கும் ஒவ்வொரு தடவையும் நான் கட்டணம் செலுத்த வேண்டியதுதான்!

மனைவி: என்ன கொடுமை! என்ன துர்ப்பாக்கியம்! இதெல்லாம் உண்மை தானா?

தொழிலாளி: மெத்த உண்மை—ஆனால், அத்தனையும் இன்று மகத்தான மோச நாசப் பொய்யா யிருக்கிறது! அவர்கள் அத்தனை பேரும் பொய்யர்கள்!

(வெளியே நகரில் சேமக்கலம் ஏழு மணி அடிக்கிறது.)

மனைவி: என்ன அடிக்கிறது? ஏழு மணியா? விளக்கின் சுடரோ அணைந்து விட்டது. பகவானே! என்ன இருள்! என்ன காரிருள் இங்கே சகலத்தையும் சூழ்ந்து விட்டது!

தொழிலாளி: சுடுகாடு போன்ற இருள்! குருடனின் கண்கள் போன்ற இருள்! ஜதையில் கருகிய உடல் போன்ற இருள்! நிலக்கரி போன்றமை யிருட்டு! அண்டை அயல் வீட்டுச் சகோதரர்களே! (பித்தனைப் போல் வீறிட்டுக் கத்துகிறான்) சகோதரர்களே!!!

அஜுனவும் ஜோதியும்: (இருளிலே விழித் தெழுந்து) அம்மா! அப்பா! நாம் எங்கே யிருக்கிறோம்? (சேரி யெங்கும் சஞ்சலமும் பரபரப்புங் கொண்ட சந்தடி கேட்கிறது).

தொழிலாளி: சூரியோதயம் வெளியிலே வந்து காத்திருக்க வேண்டியது தான்; காத்து நமக்கெல்லாம் என்ன நேரிட்டது என்று ஆச்சர்யப்பட்டுக் கொண்டிருக்கவேண்டியதுதான்! ஒளி! ஒளி! பெண்ணே, நீ சொன்னது சரி. சகலமும் என்றோ ஒரு நாள் உடைந்து போகத்தான் வேண்டும்! ஒளி! ஒளி! ஒளி! (ஜன்னலின் கண்ணாடிக் கதவுகளைக் குத்தி உடைக்கிறான்......அக்கம் பக்கமெல்லாம் நாற் புறமும் ஜன்னல் கண்ணாடிக் கதவுகள் நொறுங்கும் சத்தம் கேட்கிறது.) கடைசியாக, அவர்களுக்கு நமது சவாலைக் கொடுத்து விட்டோம்! ஒளி! ஒளி! தொழிலாளியின் வீட்டிலே......சாசுவதமான ஒளி!

(அழகிய ரோஜா வர்ண ஒளிக் கதிர் ஒன்று உள்ளே வீசி, தொழிலாளருக்கு மகிமையும் பெருமையும் நல்கும் நவயுகத் தொடக்கத்தின் அடையாளமாக இலங்குகிறது.)

கதையும் நிஜமும்

ஒரு பத்திரிகையின் தொடர்கதையிலே வரும் கதாநாயகி மெல்ல மெல்ல நோயால் வாடி மெலிந்துகொண்டு வந்தாள். இந்தக் கதையைத் தொடர்ச்சியாகப் படித்துக்கொண்டுவந்த ஒரு இளம்பெண்ணும் அதே வியாதியால் மெலிந்துவரத் தொடங்கினாள். கீர்த்தி வாய்ந்த ஆங்கில ஸர்ஜன் டாக்டர் புரூஸ் புரூஸ்-போர்ட்டர் என்பவரிடம் இந்தப் பெண் கொண்டுபோகப்பட்டாள். அவர் என்ன சிகிச்சை செய்தும் பெண் தேறவில்லை. பெண்ணைக் கவனித்தார். அவள் படித்து வரும் ஒரு பத்திரிகைக் கதையைக் கண்டார். அந்தக் கதாசிரியரிடம் ஓடினார் டாக்டர் புரூஸ். "உங்கள் கதாநாயகி கடைசியிலே என்ன ஆகப்போகிறாள்?" என்று கேட்டார். "ஆவதென்ன? சாகப் போகிறாள்" என்று பதிலளித்தார் ஆசிரியர். "இல்லை; அவளைக் கொல்லாதீர்கள். நோய் தீர்ந்து சுகப்படச் செய்யுங்கள்" என்று கெஞ்சினார் டாக்டர். டாக்டரின் வேண்டுகோளின்படியே கதாநாயகியை மங்களகரமாய் வாழச் செய்தார் ஆசிரியர். டாக்டரின் நோயாளியான பெண்ணும் நோய் குணப்பட்டுப் பிழைத்து விட்டாள்!

மாயையின் வலிமை

ஈசுவரனுடைய திருவடியில் சரணமடைவது அவ்வளவு சுலபமானதா? அதைக் கைகூடாத படி மகா மாயை தடுக்கின்றது. பிள்ளைகளில்லாத ஒருத்தி ஒரு பூனைக்குட்டியையாவது வளர்க்க ஆரம்பித்து, அதனால் உலகப்பற்றுள்ளவள் ஆகிறாள். அந்தப் பூனைக்குப் பாலும் வேறு பிரியமான ஆகாரங்களும் தேடித் திரிந்து காலம் போக்குகிறாள். 'ஐயோ, பாலைத் தவிர ஒன்றையும் பருக மாட்டேன் என்கிறதே; என்ன செய்வேன்?' என்று முறையிடுகிறாள். —பரமஹம்ஸர்.



[சுவாமி சுத்தானந்த பாரதியார்]

நான்காம் அங்கம்

முதற் காட்சி

[தெல்லாகுளம் அமெரிக்கன் கல்லூரிக்கருகே பாதிரி வைத்தியசாலையில் ஓர் அறை. ஒரு கட்டிலில் **மங்களம்** நோயால் படுத்திருக்கிறாள். **டாக்டர் மில்லரும்** அவர் **மனைவியும்** சிகிச்சை செய்கின்றனர். அவர்களுக்கு இருந்த ஒரே மகள் சமீபத்தில் தவறியதால், கடவுளே இந்த மகளைத் தமக்குக் கொடுத்ததாக அன்பு செய்கின்றனர். (மங்களம் வைகை வெள்ளத்தில் விழுந்தாள். வெள்ளம் அடித்துச்சென்று அவளைக் கரையில் ஒதுக்கிற்று. வெள்ளத்தில் அகப்பட்டோரைக் காக்கச் சாரணர் படை அங்கே வந்திருந்தது. அது மங்களத்தை எடுத்துச் சக்கரத்தில்வைத்துச் சுழற்றித் தண்ணீரை வெளியேற்றி, முதற் சிகிச்சை செய்து ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச்சென்று அங்கே பெண் வைத்தியம் பார்க்கும் மில்லர் மனைவியிடம் ஒப்புவித்தது. இக்காட்சியைப் பேச்சில்லாமல் காட்டலாம்.) மங்களம் சிறிது தெளிகிறாள். மில்லர் தம்பதிகள் தமிழ் கற்றவர்கள். ஆதலால் தமிழே பேசினர்.]

மங்களம்

இறைவா ஜோதி! இறைவா...எங்கு நீ?
கைவிட் டாயா கடவுளே...கதிநீ!

மில்லர்

கடவுள் அன்பரைக் கைவிட மாட்டார்,
பிதாவின் அருளால்...பிழைத்தாய், பெண்ணே!

திருமதி மில்லர்

இனிமேல் அபாயம் இல்லையென் கண்ணே!
பார்த்ததும் உன்னைப் பாலூ றியதே!
தனிமை நீங்கத் தயாபரன் கொடுத்த
வரமே யென்று வளர்ப்பேன் உன்னை.

மில்லர்

வாரிச் சென்ற வைகை வெள்ளம்
கரையில் ஒதுக்கிய கருணை வாழி!

திருமதி மில்லர்

ஒதுக்கிய பெண்ணை உடனே காத்தார்...
சாரணர் செய்த காரியம் வாழ்க!
தண்ணீர் உமிழச் சக்கரஞ் சுழற்றி
டோலி கட்டித் தூக்கி வந்தனர்...
பேடள் பௌவல் பெருக்கிய சாரணச்
சங்கம் செய்யும் தருமம் வாழ்க!

[மங்களத்தை உற்று நோக்கி]

மில்லர்

நல்ல முகக்களை...நல்ல மலர்விழி
செல்வத் திருவிற் செழித்ததீங் கனியே!
இன்னுமா மயக்கம்! இன்னும் தியக்கம்!

திருமதி மில்லர்

மயக்கம் தெளிய மருந்து தருகிறேன்.

[மூக்கில் ஒரு மருந்தைக் காட்டல்]

சூடான பானம் சுகமா யிருக்கும்.

[சூடான பானம் அருத்துகிறாள்]

மங்களம் (புலம்பல்)

எங்கே யிருக்கிறேன்? எங்கே ஜோதி?
வெள்ளம் மூழ்கி விண்ணில் வந்தேன்.
மண்ணிற் பிரிந்தவர் விண்ணிற் காணார்.
அவர்வரு மட்டும் அமரரோ டிருப்பேன்.
வந்ததும் அவருடன் வாழ்வைக் கழிப்பேன்.
உடலை உதறியென் உயிரைத் தேடினேன்.
உயிரைத் தருவீர் உயர்வா னுலகீர்!
துயர்மிகப் பட்டேன்...சோதிக் காதீர்.

அனாதைக் கிரங்கீர் ..அன்பிற் சிறந்தீர் !
இருளில் வருந்தினேன் இரவியைத் தாரீர்
மண்ணகச் சோதி மறந்தான் என்னை...
விண்ணகச் சோதி விரும்பித் தாரீர் !

மில்லர்கள்

அம்மா, ஜோதியை அளிப்பான் இறைவன்.
வானங் கண்டு வையகம் வந்த
வன்னக் கிளியே இன்ன லினியேன் ?

மங்களம்

அன்பைக் கேட்கிறேன்...அன்பை யுணர்கிறேன்.
உலகிலும் அன்பும் உண்டோ ! உண்டோ !
விண்ணகத் தேவர் பண்ணொலி யிதுவோ ?
அன்பின் மொழியே இன்பப் பாட்டாம்.

மில்லர்கள்

பிழைத்தாய் கண்ணே, பிரானரு ளாலே.
இனியெங் குழந்தையாய் இருநீ நீடு !

மங்களம்

இடர்ப்படும் உலகில் இனியன கேட்டேன்.

[நன்றாக விழித்து மில்லர்களை நோக்கி]

அன்பு மயத்தின் அவதா ரங்காள் !
தெய்வமே உங்கள் திருவடி வாக
என்னைக் காத்ததென் றெண்ணித் தெளிந்தேன்
யாரெனக் கேட்டலும் அபசார மாகும்.

மில்லர்

அன்புள மானே, யானுன் அப்பா !

திருமதி மில்லர்

ஆசைக் கண்ணே, யானுன் அம்மா !
நீயார் என்று நிசத்தைச் சொல்லாய் !

மங்களம்

நல்லன் புடையீர், நான் உம் மகளே.
நீரே எனது நிசமாம் பெற்றோர்.
கரும்பேய்க் காட்டில் கண்ணிலாச் சேய்போல்
வருந்தினேன், ஆற்றில் வாழ்வை உதறினேன்.

திருமதி மில்லர்

யாருனை வருத்தினர் அன்பிளங் கிளியே ?
ஆற்றில் விழுந்ததேன் அருமைத் திருவே ?
உன்பெயர் என்ன ? உறவினர் யாவர் ?
கன்னி யார்நீ ? கதையினைச் சொல்வாய்.

மங்களம்

ஆ ஆ மனமே, அங்கே செல்லேல்,
அந்தப் பிறவியை அறவே மறவாய் !
முன்னர் வாழ்வை முற்றிலும் மறந்தேன்.
அதனை நினைத்தால் அல்லற் படுவேன்.
முள்மேல் ஒருமலர் முளைத்துத் தவித்தது,
விதியதைப் பறித்து வீசிய தாற்றில்.
அந்தநாண் மலரை அன்புக் கரங்கள்
எடுத்ததும் அதுவே இன்ப மலராய்
அன்பு மலராய் அமைதி யுடனே
வாழ்ந்தது, பெரியீர் ! வரலா றிதுவே.
அன்பே நீவிர்; அன்புமலர் யான்.
பெற்றோர் உற்றோர் பெரியார் அரியார்
அனைவரும் நீரே, அடைக்கலம் புகுந்தேன்.

திருமதி மில்லர்

கவலைப்படாதே; காப்போம் உயிர்ப்போல்,
கல்வி யளிப்போம், செல்வ மளிப்போம்.
சிலுவைப் பெருமான் சித்த மிரங்கி
எமக் கொரு மகளை ஈந்தான்.

மில்லர்

வாழ்க !
அன்பு மலரே, அருமை மகளே !
விருப்ப மெல்லாம் விரும்பு; தருவோம்.

மங்களம்

எனது விருப்பம் இயம்புவேன் கேளீர்:
தாயுந் தந்தையும் தமரும் பிறரும்
நீவிரே ; வேறு நினைப்பது மில்லேன்.
உம்மடி நிழலே உயர்மனை எனக்காம்.
மறுபிறப் பெடுத்தேன்... மற்றுமுன் பிறப்பின்
துயரக் கதையைச் சொல்ல மனமிலேன்.
அந்தப் பிறப்பில் யாரொரு சோதியைக்
கண்டுயிர் போலக் காதலித் திருந்தேன்.
காதற் சோதி கைவிட் டகன்றான்.

மில்லர் (மனத்துள்)

மாணவன் சோதியா...? மனத்துளே யாதோ
அவன் காதலியே இவளெனச் சொல்லும்.
இருப்பினும் இன்னும் இரகசியம் காப்போம்,
சோதியை அறிவேன், சொல்லாய் கிளியே. !

மங்களம்

தந்தையே எனது சரிதை போதும்.
உலகுடன் எனக்கினி உறவெது மில்லை.
கன்னி யாகவே காலங் கழிப்பேன்.
என்னையா ரென்றே எவர்க்கும் இயம்பா
வரமே கேட்டேன். வழங்குவீர் உடனே !

மில்லர்

பேச்சும் உடையும் பெயரும் சுற்றமும்
மாறிய பின்பினி யாருனை யறிவார்.
எம்மக ளென்றே இயம்புவோம், உன்னைக்
கண்ணிமை போலக் காப்போம் கிளியே !
கல்வியின் சிகரம் காண்பாய் கண்ணே !

மங்களம்

கற்பவை கற்பது கடனெனக் காகும்.
அதனுடன் எனக்கோர் ஆணை யுள்ளது ;
ஏழைக் குழந்தைகள் எனக்கினிக் குழந்தைகள்.
அவர் பணியேயென் அருமைத் துணைவன்.
அப்பணி தருவீர் அன்பு மலர்க்கே !

திருமதி மில்லர்

தந்தோம் கண்ணே...தந்தைதா யில்லாப்
பிள்ளைகள் இங்கே பிதாவின் அருளால்
கவலையில் லாமற் கல்வி பயிலுவர்.
அவரெல்லாம் உனக்கே அன்புக் குழந்தைகள்.
அமுதக் கரத்தால் ; அவரை வளர்ப்பாய் ;

மங்களம்

அதுவே இன்பம்! அதுவே புண்ணியம்!
வந்தனம், என்னை வளர்த்த பெரியீர் !

மில்லர்கள்

வந்தனம் உரியது வான்பிதா வுக்கே!
இதற்குமே லுன்னை எதுவும் கேளோம்.
அதுவாய் வருவதை அறிந்து கொள்வோம்.

[வருதல் சாரணர்]

சாரணர்

தந்தையே தந்தையே விந்தையென் சொல்வோம்!

மில்லர்

என்ன செய்தி, கன்னியைக் காத்தீர்?

சாரணர்

பயங்கரச் செய்தி! பயங்கரச் செய்தி!
ஆற்றிற் கக்கரை அமைந்த வனத்தில்
சோதியின் வீட்டில் சோரர் புகுந்தனர்.
துப்பாக்கி யாலே சுட்டார் நால்வரை.
கல்லூ ரியிலே படித்த கண்ணன்
மனைவி யுடனே மயங்கி விழுந்தான்.
திருடருள் ஒருவன் தீர்ந்து போனான்.
தலையைக் காணும் சாவுடல் கண்டார்.
வக்கீல் சிவனார் மகளும் அங்கே
இருந்தே ஆற்றில் வருந்தி வீழ்ந்த
செய்தியைக் குமாஸ்தா செப்பக் கேட்டோம்.
திருடரைத் தடுத்த சேவகர் இறந்தார்.
தீயிட் டெரித்தனர் திருடரவ் வீட்டை.
போலீஸ் காரர் புலனறி கின்றார்.

மங்களம் (மனத்துள்)

தெய்வமே, இந்தச் செய்தியேன் கொணர்ந்தாய்?
காது வருந்துதே! கருத்து நோகுதே!

மில்லர் (மனத்துள்)

[மங்களம் முகமாறுதலைக் கண்டு]

அதற்கும் இதற்கும் அணைப்பொன் றுள்ளது.
உண்மை தெரிந்தது, உளத்தில் வைப்போம்.
பெண்ணின் முகத்திலே பெருங்கதை காணுதே!
கவலையால் மெலிந்தாள், கதையினி வேண்டா.
சாரணர் சொன்ன சரித்திரம் நன்று!
உலகின் பயங்கர வுண்மை தெரிந்தது.

[சாரணரை நோக்கி]

வெள்ளச் சேதம் விளைந்த பக்கம்
சென்றுநல் லுதவி செய்வீர்; செல்வீர்!

சாரணர்

ஊருக் குதவியே உயிர்வாழ் வெமக்கே.
வந்தனம் தந்தையே, வந்தனம் தாயே!

மில்லர்கள்

இரங்குவோர் வாழ்க; இரக்கம் பெறுவார்!
உதவுவோர் வாழ்க; உதவி பெறுவார்!
ஆண்டவன் அருளால் அன்பர் வாழ்க!

சாரணர்

அன்பு வாழ்க... அன்பர் வாழ்க!

[செல்லல்.]

தந்திச் சேவகன்

வந்தனம் ஐயா!

மில்லர்

வருக; தருக!

[தந்தியை உடைத்துப் பார்த்து]

நல்ல செய்தி; நமது நண்பன்,
அப்துல் லாகான் அமர்க் களத்தில்
இசைகள் பெற்றான்; இந்தியா வந்தான்.
பாது காப்புப் படை திரட்டினான்.
கொலைக்குற் றங்கள் கொடுமையா யிருக்கும்
இங்கவன் இருப்பான். இறைவர் ஆணை—
ஒற்றர் தலைவனாய் உழைப்பான் இனிமேல்.
குற்றம் செய்வோர் கூட்டம் அவனைத்
தப்புதல் சாவைத் தப்புத லாகும்.
இங்கே நாளையே இருப்பான் அப்துல்.

திருமதி மில்லர்

அன்புச் சோதியும், அப்துல் லாவும்
சிறந்த நண்பர்; சீரிய வீரர்!

மில்லர்

எளியர் சேவை இயற்றும் சோதியும்,
வீரப் பணியே விரும்பும் அப்துலும்
நம்முடன் வசிக்கும் நாளை விரும்புவோம்!

[டாண் டாண் என்று
மணி யடிக்கிறது.]

மில்லர்கள்

அன்பு மலரே, ஆண்டவன் இச்சை
கடமை செய்யெனக் கட்டளை யிட்டது.
எமது கடமை யியற்றி வருவோம்.
நிம்மதி யாக நீயிங் கிருப்பாய்.
நல்ல தோழி நயமுடன் வந்து
இனியன சொல்வாள்.

மங்களம்

இருக்கிறேன் அப்பா.
கடமை காக்கக் களிப்புடன் செல்வீர்!

திருமதி மில்லர்

கண்மணிச் செல்வீ!

[முத்தமிட்டு, இருவரும் செல்லல்.]

மங்களம்

கருணைக் கடவுளே!
அன்பைக் காட்டினை, அருளை விளக்கினை,
உனக்கே வாழ்க்கை, உனக்கே நினைப்பு!

கள்ளர் கைப்பட்டு வெய்ய
கடுந்துயர் தாங்கா துமல்
வெள்ளத்தில் விழுந்தேன்; என்னை
விடுதலை தந்து காத்தாய்.
நள்ளிர வினிலும் சோதி
நலமுறக் காட்டும் உன்னை
உள்ளத்தில் வணங்கு தற்கே
உயிர்க்கிளி வாழ்வ தாமே.

இரண்டாம் காட்சி

[டங்கர்க்கில் கடும்போர். ஆங்கில தளகர்த்தர் திறமையால் நேசப்படைகள் டோவருக்குத் தப்பிச் செல்கின்றன. காப்டன் அப்துல்லா வீரப்போர்புரிந்து பதக்கம் பெறுகிறுன்; பல வீரர்களை டங்கர்க்கிலிருந்து தப்புவிக்கிறுன். அவனது திறமையை மெச்சி சர்ச்சில் இந்தியப் பாதுகாப்புப் படை தயாரிக்கச் சென்னைக்கு அனுப்புகிறுர். அப்துல்லா வீரர்சிலருடன் ஆகாசக் கப்பலில் சென்னைக்கு வருகிறுன். சென்னையில் வீர வரவேற்பு நடக்கிறது. [இக் காட்சிகளைப் பேச்சில்லாமல் அரங்கில் மௌனமாகக் காட்டலாம்.] இக்காட்சி தொடங்கும்போது படை வீரர் வீரப்பாட்டுடன் போர் நடனம் புரிகின்றனர். பாட்டுக்கேற்றபடி அப்துல்லா வாளைச் சுழற்றி நிற்கிறுன். சன்னக் குரலில் முரசும் பாண்டும் முழங்குகின்றன.]

போர்வீரர்

எடுங்கள் ஆயுதங் களை
இனிய நாட்டுத் தோழர்காள்,
விடுங்கள் பேடி அச்சத்தை
விரைந்து சேனை சேருங்கள் !

அப்துல்லா

இரக்க மற்ற ராக்ஷஸர்
இரத்தஞ் சிந்தி வந்தனர்.
உறக்க முற்று வீழ்வமோ,
உடன் எழுந்து வாருங்கள் !

எல்லாரும்

ஹேய் ...ஹேய் எழுந்தோம் இகல்கடுங் கிடவே,

அப்துல்லா

வீரம் வாழ்க...வெற்றி நமதே !
பாரின் சரிதை வீரர் செயலே,

படை வீரர்

ஹேய்...ஹேய்,

இடி முரசு கொட்டுங்கள்
இரும்பு போன்ற நந்தசை
துடி துடிக்க வாருங்கள்
சுதர்மங் காக்கப் போர் செய்வோம் !

அப்துல்லா

அறத்திற்காக நம் முயிர்
அறத்திற்காக நம் முடல்
அறத்திற்கே பலி கொடுப்போம்
ஆவி யாக்கை யாவுமே.

படை வீரர்

ஹேய்...ஹேய்.

கட்டுகள் சிதறவே, இக்
காசினி யதிரவே....
வெட்டுமின்னல் போல வாளை
வீசி வீசிப் போர்செய்வோம் !

அப்துல்லா

[நடனத்தை நிறுத்த ஊதுதல். வீரர் வரிசையாக நிற்றல். கபாத்து நடக்கிறது. கட்டளைப்படி வீரர் நடத்தல்.]

இடம் ! வலம் ! எதிர்ப்புறம் ! இரு ! செல் ! நில் ! விரை
வளைந்து வளைந்து விரைந்துசெல் ! ஓடு !
வட்ட மாகநில் ! வாளை உயர்த்து.

[வருதல் **தந்திச் சேவகன்**]

சலாம் ஸார், தந்தி !

அப்துல்லா

சலாம்...தா இப்படி!

[தந்தியைக் கையெழுத்திட்டு வாங்குதல். சேவகன் சலாமிட்டுச் செல்லல். அப்துல்லா படித்து]

வீரர்காள், எனக்கொரு வேலை வந்தது.
எங்கும் கிளர்ச்சி ! எங்கும் குற்றம் !
பாதகர் கொடுமை பாரில் வலுத்தது.
கொள்ளையும் கொலையும் சள்ளை செய்யும்,
மதுராக் கென்னை மாற்றினுர் கவர்னர்,
ஒற்றர் தலைவனுய் உழைப்பேன் சிலநாள்.
சமயம் வந்ததும் சமர்செய வருவேன்.
செல்கிறேன் வீரச் செல்வர்காள் ! இனிது
கடமை செய்து நாட்டைக் காப்பீர் !

எல்லாரும்

வீரத் தலைவர் வெற்றி பொலிகவே !

[பாண்டு முழங்குகிறது; போர் நடனம்; வீரர் மரியாதை செய்து அப்துல்லாவை வழியனுப்புதல்.]

வெற்றி வெற்றி யெங்குமே—நம்
வீரருக்கு வெற்றியே
சுற்றியுள்ள வுலகு போற்றச்
சூரருக்கு வெற்றியே.

[திரை.]

(தொடரும்)

வீரனும் நிருபனும்

"நம் எல்லார் தலையிலும்தான் இப்போது குண்டுகள் விழுகின்றன. ஆதலால், வீரனின் போரை விட, அதிகக் கடினமும் அதிக அபாயமுமான வேலை பத்திரிகைத் தொழிலே. காமிராவையும் நோட்டுப் புஸ்தகத்தையும் தாங்கிய பத்திரிகை நிருபன், விமானக் குண்டுகளுக்குப் பயந்து, சுரங்கக் குகைகளுக்குள் ஒளிந்துகொள்ளக் கூடாது" என்கிறுர் பெர்னுர்ட் ஷா. அவர் இப்படி ஒளிந்து கொள்வதேயில்லையாம்.

சிறையிலே சிவ பக்தர்

ரா. நா.

1930-ஆம் வருஷம் சிறைக்குள் இருக்கிறேன். நள்ளிரவு நேரம். தூங்கியும் தூங்காதது மான ஒரு திரிசங்கு நிலை. அச்சமயம் எங்கேயோ தொலையிலிருந்து, ஓர் இனிய பாட்டுக் குரல் கேட்டது. கனவா யிருக்குமோ என்று தயங்கினேன்; அவ்வளவு குளுமை! இல்லை; நனவுதான். நன்றாகக் காது கொடுத்துக் கேட்டேன். ஆம்; மனிதக் குரல்தான். பாட்டை நிதானித்துக் கவனித்தேன். தாயுமானவர் பாடல். பக்திப் பெருக்குடனும் பாவ நிறைவுடனும் யாரோ ஒருவர் பாடுகிறார். இதுதான் அந்தப் பாடல்:

இனியே தெமக்கு நின்
அருள் வருமோ
எனக் கருதி ஏங்குதே
நெஞ்சம் ஐயோ!
இன்றைக் கிருந்தாரை
நாளைக்கு இருப்பரென்று
எண்ணவோ
திட மில்லையே!
அநியாயமாய்இந்த உடலை
நான் அன்றுவரும்
அந்தகர்க்கு
ஆளாக் கவோ?
வாடித்திரிந்து நான்
கற்றதுங் கேட்டதும்
அவல மாய்ப்
போதல் நன்றோ?
கனியேனும்
வறிய செங்
காயேனும் உதிர்சருகு
கந்த மூலங்களேனும்
கனல் வாதை
வந் தெய்தி
அள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனி யாகித்
தனியே இருப்பதற்கு
எண்ணினேன்; எண்ணமிது
சாமி நீர்
அறியா ததோ?
சர்வ பரிபூரண
அகண்ட தத்துவமான
சச்சி தானந்த
சிவ மே!

பாட்டை ரஸிக்கையில் பாடுபவர் யாரா யிருக்கலாம் என்று சிந்திக்க மனமில்லை. கீத ஒலி ஓய்ந்தவுடன் "சிறைக்கூடத்திலே இவ்வளவு பக்தி பரவசமாய்ப் பாடுபவர் யாரா யிருக்கலாம்? சகோதர அரசியல் கைதி எவரும் பாடியிருக்க முடியாது. ஏனெனில், குரல் கொட்டடிக்கு வெளியே இருந்து அல்லவா வருகிறது" என்று எண்ணினேன்.

நான் இப்படிச் சிந்தனையிலாழ்ந்திருக்கையில், காவல் புரியும் 'கான்விக்ட் வார்டர்' எங்கள் கொட்டடி யோரமாய் நடந்து வந்தான். அவன் என் அறைக்கு எதிரிலே வந்ததும் அவனை நிறுத்தி "யாரப்பா சற்றுமுன் இங்கே பாடியது?" என்று கேட்டேன்.

அவன் சற்று மலைத்து நின்றான்.

"ஏன் யோசிக்கிறாய்?" என்று வற்புறுத்திக் கேட்டேன்.

"அடியேன்தான்" என்று தலை குனிந்த வண்ணம் பதில் கூறினான்.

"சிறைக்குள் வந்து நீ பக்தி மார்க்கத்துக்குத் திரும்பியது அதிசயமாக வல்லவா இருக்கிறது!" என்றேன். "இந்த ஏழைக்கு வெளியிலேயே சமய விஷயங்களில் பற்றுதல் உண்டு" என்றான்.

"அப்படியானால் ஆயுள் தண்டனை அடையும் குற்றம் எப்படிப் புரிந்தாய்?" என்று கேட்டேன்.

அவன் தன் கதையைச் சொல்லத் தொடங்கினான்:

"நான் நல்ல வியாபாரம் செய்து வந்தேன். என் வியாபாரத்தில் எனக்குப் போட்டியா யிருந்தவர் என் வர்த்தக வெற்றியைக் கண்டு பொறாமைப் பட்டார். அதன் காரணமாக அவர் பல விதமாய் எனக்கு இடைஞ்சல்கள் புரிந்துவந்தார். அதை யெல்லாம் நான் சமாளித்து வந்தேன். இப்படி யிருக்கையில், அவர்களுடைய காரியஸ்தர் ஒருவர் பாம்பு கடித்து இறந்துவிட்டார். இந்தச் சம்பவத்தைத் திரித்து, அவரை நான் கொலை செய்ததாக அபாண்டம் சுமத்தி, விரோதிகள் என்மீது வழக்குத் தொடர்ந்தார்கள். என் எதிர்வாதமெல்லாம் பலிக்கவில்லை. நீதிபதி எனக்குத் தீவாந்திர தண்டனை விதித்தார்."

"**அ**ந்த நீதிபதிக்கு மூளையில்லையா?" என்று சற்று ஆவேசத்துடன் நான் கேட்டேன்.

"ஸ்வாமி! அவரை ஏன் நோகிறீர்கள்? அவர் மிகுந்த தெய்வ பக்தர். என்னுடைய முன்வினைப் பயன், நான் அனுபவிக்கிறேன்" என்று சொல்லி, அவன் கீழ்க்காணும் பாட்டை உள்ளமுருகப் பாடினான்:

நல்லோர் மனத்தை
நடுங்கச் செய்தேனே!
நட்டாற்றில் கையை
நழுவ விட்டேனே!
வலிய வழக்கிட்டு
மானங் கெடுத்தேனே!
வரவுபோக் கொழிய
வழியை யடைத்தேனே!
தானங் கொடுப்போரைத்
தடுத்து நின்றேனே!
தருமம் பாராது
தண்டஞ் செய்தேனே!
கலந்த சிநேகிதரைக்
கலகஞ் செய்தேனே!
களவு செய்வோருக்கு
உளவு சொன்னேனே!
மனமொத்த நட்புக்கு
வஞ்சகஞ் செய்தேனே!
மண்ணோரம் பேசி
வாழ்வழித் தேனே!
குடிவரி யுயர்த்திக்
கொள்ளை கொண்டேனே!
குடிக்கின்ற நீருள்ள
குளத்தைத் தூர்த்தேனே!

அவனது தாராள மனசை வியந்தவனாய், பாட்டிலே உள்ளமிழந்து மெய்மறந்தவாறு எனக்கு நானே எண்ணமிடலானேன்:

"ஸத்தியாக்ரஹிகள் யாரிடமும் விரோதம் காட்ட லாகாது என்று மகாத்மா உபதேசம் செய்திருக்கிறார். என்றாலும், அந்த உபதேசத்தை ஸத்யாக்ரஹிகள் கிரியாம்சையில் கைக்கொள்வது எவ்வளவோ சிரமமா யிருக்கிறது. ஆனால், இந்த ஸாமான்யக் கைதி என்ன உன்னதமான அன்பு காட்டுகிறான்! இவன் இருதயம் எவ்வளவு தூய்மையாயிருக்கிறது!" என்று சிந்தனை செய்துகொண்டே, 'கான்விக்ட் வார்டர்' என் எதிரில் நின்றதையே மறந்து விட்டேன். திடீரென "சிவம், சிவம், சிவோஹம்!" என்ற கோஷம் கேட்டது. சிந்தனை சிதைந்து திரும்பிப் பார்த்தேன். அவர் நடந்து கொண்டிருந்தார். இனியும் அவரைக் கைதியெனக் கருதலாமா? இல்லை, அவர் சிவ பக்தர்; பக்தி வெள்ளத்திலே மூழ்கியவனுக்குச் சிறைவாசத்தினால் ஏற்படும் பந்தங்களு முண்டோ?

சமரஸம்

(கு. ப. ராஜகோபாலன்)

சமரஸம் என்ற வார்த்தையைக் கேட்டாலே தீவிர வாதிகளுக்கு எரிச்சல். "சமரஸம் செய்து செய்துதானே இந்திய ஜாதி இந்த நிலைமைக்கு வந்திருக்கிறது; இன்னுமா அந்தப் படுகுழியில் நாம் போய் விழவேண்டும்? வேண்டவே வேண்டாம், கூடவே கூடாது. சமரஸம் என்ற பேச்சே கூடாது" என்று பலமாகக் கோஷம் செய்கிறார்கள். புரட்சியே சமரஸத்தை ஒடுக்கும் சாதனம் என்கிறார்கள். அரசியல் துறையில் மகாத்மா காந்தி தாம் எப்பொழுதும் சமரஸத்துக்குத் தயார் என்று சொல்லுகிறார். அதனால் அவரையும் அவர் தத்துவத்தையும் கண்டால், தீவிர வாதிகளுக்கு அபாரமான கோபம் வருகிறது.

உண்மையில் சமரஸம் என்பது என்ன? மார்லி அதைப்பற்றி ஆங்கிலத்தில் ஒரு பெரிய புத்தகமே எழுதி விட்டார். 'சமரஸம் சாவுக்குச் சமானம்' என்று ஜார்ஜ் மெரிடித் என்ற ஆங்கில ஆசிரியர் எழுதி விட்டுப் போய் விட்டார். சமரஸம் என்பதில் இழுக்கு ஒன்று எப்படியோ நுழைந்து விட்டது. இரண்டு தத்துவங்களோ, இரண்டு கட்சிகளோ, இரண்டு எதிரிகளோ சமரஸம் செய்து கொண்டால், அதில் நிச்சயம் ஒரு தரப்பு தன் அம்சத்தில் சிறிதளவையாவது விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும் என்ற தப்பெண்ணம் ஏற்பட்டு விட்டது. போர்களின் இறுதியில் நடைபெறும் சமாதானத்தை மனத்தில் வைத்துக்கொண்டு பலர் இம்மாதிரி அவஸ்தைப் படுகிறார்கள். சொல்லப் போனால், சமாதானம் கூட அவ்வளவாக ஒரு கட்சியின் வெற்றி மட்டு மல்ல. சமாதானம் ஒரு நாளும் வெற்றியோ, தோல்வியோ ஆக முடியாது.

சமரஸம் என்ற வார்த்தையே ஆழ்ந்த பொருள் கொண்டது. இரு சுவைகள் ஏற்றத் தாழ்வின்றித் தேவையான விகிதத்தில் கலந்திருப்பது சமரஸம். அது இரண்டு மல்ல; இரண்டையும் மீறிய மூன்றாவதானதோர் புதிய சிருஷ்டி. பிராண வாயுவும், ஹைட்ரோஜன் என்ற ஜலவாயுவும் விகிதமான அளவில் கலந்தால் தண்ணீர் உண்டாகிறது என்று விஞ்ஞான சாஸ்திர ஆரம்ப நூல்களிலிருந்தே அறிகிறோம். தண்ணீர் சமரஸம். பிராணவாயு தன் தன்மையைப் பூராவும் இழந்து விட்டதென்று சொல்ல முடியுமா? ஜலவாயுதான் இழந்து விட்டது என்று சொல்ல முடியுமா? முடியாது. ஏனென்றால் மறுபடியும் தண்ணீரிலிருந்து இரண்டையும் பிரித்தெடுத்து விடலாம். இரண்டும் கலந்து ஒரு மூன்றாவது பொருள் உருவாகிறது. உயிரும் உடலும் சேர்ந்தது பிராணி; உயிரும் உடலும் செய்து கொண்ட சமரஸம் பிராணி.

எனவே சமரஸம் என்பது முன்னேற்றத்துக்கு வழி. அது ஒருகாலும் தோல்வியாகாது; தன்மை நாசமாகாது. வெற்றியுடன் இரண்டு சக்திகள் கைலாகு கொடுத்துக் கொண்டு பிணைவதுதான் சமரஸம். வேதாந்தத்தின் நோக்கமே சமரஸம் தான். கலையின் ஊக்கமும் சமரஸம்தான். சொல்லும் பொருளும் சேர்ந்து வார்த்தை யாகிறது —சிவனும் சக்தியும் சேர்ந்து சிருஷ்டியாவது போல.

காந்திஜியின் மதமே சமரஸம் தான். அதில் சாத்வீகமும் எதிர்ப்பும்—இரண்டு நேர் எதிரிடைச் சக்திகள் —சேர்ந்து சத்தியாக்கிரகம் ஆகின்றன. சத்தியாக்கிரகம் சாத்வீகமும் அல்ல, எதிர்ப்பும் அல்ல. இரண்டும் தழுவிக் கலந்த மூன்றாவதொரு சக்தி. தீவிரவாதிகள் காந்தீயத்தை எதிர்ப்பதற்குக் காரணம் இதுதான். தீவிரவாதம் ஒரே சக்தி; அது கலப்புக் கொள்ளாத தன்மை. அது வாழ்க்கைக்கு எக்காலத்திலும் பொருந்தாது. அது ஆதி சங்கரருடைய அத்வைத சித்தாந்தம் போன்றது.

மனிதன் தனது பலவீனத்தால் சமரஸம் தற்கொலை யாகி விடுமோ என்று பயப்படுகிறான்; அதாவது எதிரியுடன் கலப்பதற்கு அஞ்சுகிறான்; எதிரி எங்கே தன் முழுச் சக்தியையும் காட்டித் தன்னை இருந்த இடம் தெரியாமல் அடித்து ஆக்கிரமித்து விடுவானோ என்ற திகில், தன்னம்பிக்கை இல்லாததால் ஏற்படும் இந்த பீதி, கீழ் மனப் பிராந்தியில் பிறந்ததாகும்.

மிதவாதமும் இதே முறையில் உற்பத்தியான மனப் பான்மை தான். அதற்கும் சமரஸம் பிடிக்காது. விசிஷ்டாத்வைதம் போல, சரணாகதியில் பரிபூரண நம்பிக்கை கொண்டது மிதவாதம். அப்படித் தாழ்ந்துபோய் விடுவதினாலாவது தன் தன்மையைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று அது நினைக்கிறது. அது எப்படி முடியும்? 'கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை' என்ற வழக்குப்போன்ற இந்த நிலை எப்படி நீடிக்க முடியும்?

சமரஸத்துக்கு உண்மையான, நிதர்சனமான உதாரணம் வாழ்க்கை. சமரஸப் பாதையில் அதுவொரு நீண்ட முயற்சி. ஆணுக்கும் பெண்ணுக்கும் சமரஸம், சுகத்துக்கும் துக்கத்துக்கும் சமரஸம் இப்படியாக இடை விடாத முயற்சி. அதில் வெற்றி பெற்றால் வாழ்க்கை இன்பமாகும். அந்தச் சமரஸம் கைகூடாத வரையில் இடைவிடாத போர்தான், தொல்லை தான்.

சமரஸம் என்ற இந்த அற்புதமான துலாக்கோல் ஒன்றுதான் வாழ்க்கையின் எதிரிடை அம்சங்களை எடை கட்டிச் சீர்தூக்கிச் சமமாக்க முடியும் என்பதில் என்ன சந்தேகம்?

"பிறன் ஒவ்வொருவனுடைய வேலையும் எப்பொழுதும் நமக்கு நம்முடைய வேலையை விடச் சுலபமாகத் தோன்றுவது ஒரு விநோதம். பிறன் தன் வேலையை எவ்வளவுக் கெவ்வளவு சிறப்பாய்ச் செய்கிறானோ அவ்வளவுக் கவ்வளவு அதி சுலபமாக அது நமக்குத் தோன்றுகிறது!" —ஏடன் பில்பாட்ஸ்

(ஆங்கில நாவலாசிரியர்)

சங்கா தோஷம்

(சேது அம்மாள்)

(சுமார் பதினெட்டு வயதுள்ள பாலம் கடுமையான காய்ச்சலுடன் படுத்த படுக்கையாகப் பிரக்ஞை யற்றுப் புரண்டு கொண்டிருக்கிறாள். பக்கத்தில் அவளுடைய தாயார் மீனாக்ஷியம்மாள் கண்ணும் கண்ணீருமாக ஏதோ புலம்பிக் கொண்டிருக்கிறாள். சற்று தூரத்தில் சாய்மான நாற்காலியில் அவளுடைய தகப்பனார் நடேசய்யர் யோசனையில் ஆழ்ந்தவராய்ப் படுத்துக்கொண் டிருக்கிறார்.)

மீனாக்ஷியம்மாள்:—(அழுது கொண்டே) இங்கே வாங்கோளேன், என்ன நாற்காலி யோசனை வேண்டியிருக்கு? ஜன்னியோ என்னமோ தெரியலையே, இப்படிப் புலம்பராளே குழந்தை!

நடேசய்யர்:—(படுத்த வண்ணமே) ஜன்னிதான் புலம்புகிறாள். நாமென்ன செய்யலாம்? டாக்டர் இஞ்ஜக்ஷனும் தான் கொடுத்திருக்கிறார்.

மீனாக்ஷியம்மாள்:—இஞ்ஜக்ஷன் ஓயாமல்தான் கொடுக்கிறார்; குணமே தெரியலையே?

நடேசய்யர்:—எப்பொழுதும் போல வெறும் ஹிஸ்டீரியா மூர்ச்சையாக இருந்தால், இஞ்ஜக்ஷனால் உடனே குணம் தெரியும்; பயமுமில்லை. ஜுரம் காய்கிறதே!

மீனாக்ஷியம்மாள்:—தொண்டையில் கபம் வேறே கட்டியிருக்கு—அது கூடாது என்பார்களே.

நடேசய்யர்:—கடினம்தான் என்று டாக்டரே சொல்லுகிறார்.

பாலம்:—(பிரக்ஞையற்று) அம்மா, அவா என் என்னை இப்படி விட்டுட்டு ஓடிப்போனா?......நான் அப்படி ஒண்ணுமே தப்புப் பண்ணலியே!

மீனாக்ஷியம்மாள்:— ஜன்னியிலும் அந்தப் படுபாவி ஞாபகம்தான் குழந்தைக்கு!

பாலம்:— (மறுபடியும்) காவேரியிலேயோ, கிணத்திலேயோ விழுந்து விடுகிறேன். இனிமேல் என்னால் தாங்க முடியாது?

மீனாக்ஷியம்மாள்:—அடியம்மா, தாங்காமெ உன்னை யாரு என்னடீ சொல்றா?

நடேசய்யர்:—நீதான் அவள் வயத்தெரிச்சலைக் கொட்டிக்கறையே? ஒரு நாழி அவளை வெறுமனே இருக்க விடறயா?

மீனாக்ஷியம்மாள்:— ஐயோ! நானென்ன சொல்றேன்? 'அடி பாவி, உன் கதி இப்படியாச்சே!—எவ்வளவோ நன்னாயிருக்கணும்னு பாடுபட்டேனே' என்று தானே சொன்னேன்?

நடேசய்யர்:—அதுக்கு அவளென்ன செய்வாள்? அவள் புண்பட்டு இருக்கற போது, அவள் முன்னாலேயே...

பாலம்:—(புலம்பி) ஐயோ! அவர் திரும்பி வந்து... அப்போ நான் இல்லாட்டா?—பாவம், என்ன செய்வார்?

மீனாக்ஷியம்மாள்:—அடியம்மா, நீயே போனப்புறம்—அவன் எக்கேடு கெட்டால் என்னடி?

பாலம்:—(ஜன்னியில்) அம்மா என்னமோ பண்றதே—தூத்தம், கொஞ்சம் தூத்தமாவது குடு.

மீனாக்ஷியம்மாள்:—(பாலை உத்தாணியில் எடுத்து) இந்தா வாயைத் திற.

நடேசய்யர்:—(கோபத்துடன்) சீ மூடம்! அவள் ஜன்னியில் பிதற்றுகிறாள், இந்தா என்கிறாயே! அந்தண்டை போ—டாக்டர் வருகிற சத்தம் கேட்கிறது.

டாக்டர்:—(உள்ளே வந்து) என்ன, ஸார். எப்படி யிருக்கிறது? கையைப் பார்ப்போமோ?

நடேசய்யர்:—ஜன்னி வேகம் குறையவில்லை. இரவெல்லாம் பிதற்றல் தான்.

டாக்டர்:—உங்கள் மாப்பிள்ளை தான் எங்கே இருக்கிறார்? உடனே தந்தியடித்து வரவழையுங்களேன்.

நடேசய்யர்:—அவன் இருக்கிற இடமே தெரியவில்லை, ஸார். உங்களிடம் சொல்லுவதற் கென்ன? சாந்தி முகூர்த்தம் ஆனவுடன் எங்கோ போனவன்தான்!

டாக்டர்:—அடாடா! அப்படியா? ஓ—அதுதான்—

நடேசய்யர்:—என்ன?

டாக்டர்:—உங்கள் மாப்பிள்ளை வந்தால் உடம்பு குணமாகிவிடும்!

நடேசய்யர்:—அவனை நான் எங்கே தேட?

டாக்டர்:—சரி, இன்னொரு இஞ்ஜக்ஷன் கொடுப்போம்; மார்பியா இஞ்ஜக்ஷன். பிதற்றல் நின்று போகும். திரும்பவும் வருகிறேன்.

(போகிறார்)

மீனாக்ஷியம்மாள்:—(மறைவிலிருந்து வந்து) என்ன சொல்றார்?

நடேசய்யர்:—என்ன சொல்றது? மாப்பிள்ளையை வரவழையுங்களென்கிறார்! எங்கே யிருந்து வர வழைக்கிறது?

மீனாக்ஷியம்மாள்:—ஐயோ! படுபாவி அநியாயமா என் குழந்தையெக் கொலைச் சூட்டானே! பழிகாரன் ஓடிப்போன அன்னியிலேருந்து ஒடுங்கிப் போயிட்டாளே குழந்தை! நல்ல புத்தி வந்து வரமாட்டானான்னு இருந்தேனே; கிளியாட்டமா குழந்தையைப் பார்த்து வயிறு எரியறதே! அவனுக்கு எப்படித் தான் மனஸு வந்ததோ—

நடேசய்யர்:—சரி வாயை மூடு. (யாரோ வருவதைப் பார்த்து) அட சனியனே, இவள் வந்துட்டாளா!

மீனாக்ஷியம்மாள்:— யாரு வந்துட்டா?

நடேசய்யர்:—கோடியாத்துச் சங்கரி தான். போரும்!

சங்கரிப்பாட்டி:—(உள்ளே நுழைந்து) மீனாக்ஷி, கொழந்தைக்கு என்னமா யிருக்கு?

மீனாக்ஷியம்மாள்:— அப்படியேதானிருக்கு—

சங்கரிப் ப்பாட்டி:—அடியே, நான் சொல்றதெ கேளு. இது சங்கா தோஷம்தான். இல்லாட்டா இப்படி இருக்காது. மேலப் பாலத்துச் சாவடியிலே ஒரு பரதேசி வந்திருக்கானாம். சிறு வயசானாலும் ரொம்பக் கெட்டிக்காரன் தான்னு எல்லாரும் சொல்றாம்மா—

நடேசய்யர்:— பரதேசியாவது — மண்ணாவது! எல்லாம் பித்தலாட்டம்!

சங்கரிப் பாட்டி:— என்னமோப்பா, எனக்குத் தெரிஞ்சதெ சொன்னேன். உங்கள் இஷ்டம். ஹிமோத்கிரியா—அதென்ன வடக்கே காசி கிட்டே—அங்கே இருக்கிற பெரியவாளண்டே பச்செலெ மருந்து மாந்த்ரீகம் எல்லாம் தெரிஞ்சுண்டவனாம்மா—அவன் கிட்டே ரொம்ப மகிமை இருக்குன்னு சொல்லிக்கறாம்மா—

மீனுக்ஷியம்மாள் :—அவர் இங்கே வருவாரோ ?

சங்கரிப் பாட்டி :—சொல்லி இந்த மாதிரின்னு, படுத்த படுக்கையா இருக்கான்னு கெஞ்சினு வாராமெ என்ன? அவன் கிட்டெ காட்டினு சொஸ்தமாகும்னு எனக்குத் தோண்றதம்மா. நல்ல வேளையிருந்தா, அவன் வந்த முகூர்த்தத்திலே பொழைக்கட்டமே—— நீங்களும்தான் கொஞ்சமாவா வைத்யம் பார்க்கறேள்? ஒண்ணுக்கும் பிடிபடலியே — மணி, மந்திர, ஔஷதம்னு பெரியவா சொல்றபடி எல்லாந் தான் பார்க்கணும்—அந்தப் பாவி! ஒரு நாளாவது வச்சு, குடித்தனம் பண்ணலியே. உம்! என்னமோ அதுந் தலையிலே இப்படி எழுதியிருக்கு, யாரென்ன சேவா? இதைத்தான் சொல்லிட்டுப் போவோம்னு வந்தேன்.

மீனுக்ஷியம்மாள் :—பாட்டி, நீங்கதான் புண்ணியம் கட்டிக்கணும். எனக்கு நாதி கிடையாது. போயி அவரைக் கையோடெ கூட்டிண்டு வாங்கோளேன்.

சங்கரிப் பாட்டி :—ஆகா, இதென்ன பிரமாதம்? கூட்டிண்டு வரேனே! அவர் வரத்துக்குள்ளே இருட்டிப் போயிடும். கிட்ட குத்து விளக்கு வெத்தி வச்சு, சாம்பிராணி போடு. நைவேத்யம் வெத்திலெ பாக்கு இதெல்லாம் எடுத்து வை. அஸ்தமனங்கூட ஆயிட்டுது. வரட்டுமா—வரேன். (போகிறுள்)

மீனுக்ஷியம்மாள் :—ஆகா! பாட்டியாட்டமா உபகாரம் சமய மறிஞ்சு யார் சேவா—

பாலம் :—(மயக்கத்தி லெழுந்து உட்கார்ந்துகொண்டு) வரேன்னுட்டுப் போனவா இன்னம் வரல்லே—' இன்னும் வரக் காணேனே!'

மீனுக்ஷியம்மாள் :—(கிட்ட வந்து) அம்மா, என்னடி பேத்தரே, படுத்துக்கோடி!

பாலம் :—(மெள்ள மீண்டும் சாய்ந்துகொண்டு கீழ் ஸ்தாயியிலே) 'ஆசை முகம் மறந்து போச்சே!' (சில அடிகளைப் பாடுகிறுள்).

மீனுக்ஷியம்மாள் :—ஐயையோ! ஜன்னியிலே இந்தத் தெம்பு வரக்கூடாது என்பாளே, என்ன பண்ணுவேன்?

நடேசய்யர் :—நீ தானேடி அவளைக் கிணத்திலே தள்ளினுய்? ஆகட்டும், நல்ல இடமா பார்த்துக் கொடுப்போம்னேனே—கேட்டயா?

மீனுக்ஷியம்மாள் :—அவதானே ஒத்தெக் காலாலே நின்னு, இந்தப் பாழாப் போனவனுக்குத்தான் வாக்கப்படுவேன்னூட்டு. இருட்டிப் போச்சு, விளக்கேத்தறேன்—மங்களாம்பா—என் வீட்டிலே விளக்கேத்தி வையடி, தாயே! (விளக் கேற்றுகிருள்)

நடேசய்யர் :—சாமியார் வந்துட்டான் போலேருக்கே? எங்கேன்னுதான் காத்திண்டிருப்பன்களோ, பறிச்சுத் தின்ன!

(பரதேசியும், சங்கரிப் பாட்டியும் நுழைகிருர்கள்)

சங்கரிப் பாட்டி :— உக்காருங்கோ. அடி மீனுக்ஷி, இதென்னடி எழுந்து உக்காந்திருக்காளே ஜன்னியிலே!

பரதேசி :—இருக்கட்டும். எங்கேம்மா வாயைத் திற; நாக்கை நீட்டு.

மீனுக்ஷியம்மாள் :—அதுக்கெல்லாம் பிரக்ஞை இல்லெ.

பரதேசி :—பிரக்ஞை யில்லையா! பின்னே படுக்க வையுங்கள். சந்தனக் கல்லும், கொஞ்சம் வென்னீரும் கொண்டு வாருங்கள்—இந்த மருந்தை—

பாலம் :—அம்மா, அவர் இன்னும் வரலையா?

பரதேசி :—சட்டென்று, பேசும் போதே இந்த மருந்தை நாக்கில் தடவுங்கள்.

மீனுக்ஷியம்மாள் :— அம்மாடி, பாலம். வாயைத் திற—தடவி விட்டேன்.

பரதேசி :—சாம்பிராணிப் புகையை அதிகம் போடுங்கோ.

நடேசய்யர் :—இதெல்லாம் என்னது?

பரதேசி :—சற்றுப் பொறுங்கள்.

பாலம் :—(திடீரென்று கண்களைப் பிரக்ஞையுடன் திறந்து சுற்று முற்றும் பார்த்து) அம்மா, இதென்ன—அம்மா, அம்மா—உன் மாப்பிள்ளேடீ! (எழுந்துட்கார முயலுகிருள்)

பரதேசி :—பாலம், பாலம், எழுந்திருக்காதே. நான் இதோ வந்து விட்டேன்!

மீனுக்ஷியம்மாள் :— மாப்பிள்ளெ—மாப்பிள்ளை தானு!

நடேசய்யர் :—(ஓடி வந்து) ராமுவா இதென்ன கோலம், அப்பா!

சங்கரிப் பாட்டி :—இதேதடி கூத்து, மீனுக்ஷி!

(டாக்டர் பிரவேசிக்கிருர்.)

நடேசய்யர் :—வாருங்கோ டாக்டர். மாப்பிள்ளை வந்துட்டார்.

டாக்டர் :—வந்துட்டாரா, நல்லது. (நோயாளியருகே செல்கிருர்.)

பாலம் :—ஆச்சே, காப்பி போட்டேட்டேனே—நீங்க குடியுங்கோ — ஆகாச விமானத்திலே தானே போகணும்? போவோமே-- அப்பாடா!— (கண்ணை மூடி அயர்ந்து பெரு மூச்சு விடுகிருள்.)

நடேசய்யர் :—எப்படி யிருக்கு? நீங்கள் சொன்னபடி மாப்பிள்ளையும் வந்துட்டாரே?

டாக்டர் :—(பாலத்தின் நாடியைப் பார்த்த வண்ணம்) மாப்பிள்ளை வந்திருக்க வேண்டிய கட்டம் தாண்டி விட்டது. இப்போது வாராதிருந்தால் நன்றுயிருக்கும்.

நடேசய்யர் :—என்ன, டாக்டர்!

டாக்டர் :—இனிமேல் அவளுக்கு ஒரு வைத்தியமும் தேவையில்லை; ஒருவர் வருகையும் தேவையில்லை. எல்லாம் முடிந்தது.

பரதேசி :—பாலம், அடி பாவி! என்னைப் பழிவாங்கி விட்டாயே! இதற்கோ நான் வந்தேன்! (கண்ணீர் பெருக்குகிருன்).

ஊமை பேசலாம்!

ஹங்கேரிய எஞ்சினீர் ஒருவர் ஆச்சர்யமானதோர் நூதன இயந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிருராம். டைப்ரைட்டர் மெஷின் இல்லையா அந்த மாதிரியே இருக்கிறது அது. அதில் பல ஒலிகளுக்கும் பல பித்தான்கள் இருக்கின்றன. அந்தப் பித்தான்களை டைப் அடிப்பவனைப் போலவே ஊமை அமுக்கவேண்டியது. அந்தந்தப் பித்தான்களின் ஒலி ஒரு கிராமபோன் கருவி மூலம் வெளிவந்து, தத்ரூபமாய்ப் பேசத் தொடங்கி விடுகிறதாம்!

உடம்பும் மருந்தும்:

யோகாஸனங்கள்

புரொபஸர் டி. வி. திருவேதி

யோகாஸனங்கள் என்றவுடனே, "சரி, சரி! நம்மை யெல்லாம் வீட்டைத் துறந்து காட்டை யடைந்து மூக்கைப் பிடித்து உட்காரச் சொல்லுகிறான் போலிருக்கிறது" என்று எண்ணி விடாதீர்கள். "பேரின்பத்தை எட்டிப் பிடியுங்கள்" என்று உங்களுக்கு நான் உபதேசம் செய்ய வரவில்லை. அப்படியே சொன்னாலும் எல்லாராலும் அது முடியக்கூடிய காரியமும் அல்ல. கோடிக் கணக்கான ஜனங்களுள்ள பரந்த இத் தமிழ் நாட்டில் இன்று ஒரே ஒரு அரவிந்தராலும் ஒரே ஒரு ரமண மகரிஷியாலுமே அதைச் சாதிக்க முடிந்த தென்றால், ஆத்ம தர்சனத்துக்கான யோகஸாதனம் எவ்வளவு சிரம சாத்தியம் என்பது நன்றாய்ப் புலனாகும். நான் உங்களுக்குச் சொல்லும் யோசனை யெல்லாம், யோகாஸனச் 'சுனை'களில் நீராடி, உங்கள் தேக அழுக்குகளைப் போக்கிக் கொள்ளுங்கள் என்பதேயாம். யோகாஸனங்கள் துறவிகளுக்குத்தான் ஏற்றவை என்று பலர் நினைக்கிறார்கள். அது தவறு. யோகாஸனங்களை எல்லாரும் பயிலலாம். மேனாட்டார் கூட இப்போது நம் யோகாஸனங்களின் பெருமை தெரிந்து, மோகத்துடன் அவற்றைக் கற்கத் தொடங்கி விட்டார்கள்.

யோகாஸனங்களைச் 'சுனைகள்' என்றேனல்லவா? அதற்குக் காரணமுண்டு. தண்ணீரில் முழுகியிருக்கும் ஒருவனுக்கு எப்படி வெளியில் நடப்பவை சற்றும் புலப்படாவோ அப்படியே, யோகாஸனங்களில் ஆழ்ந்தவனுக்கு வெளி யுலகின் பந்தங்கள், கவலைகள் முதலியவை சற்றும் தோன்ற மாட்டா. யோகச் 'சுனை'களில் அமிழ்ந்தவன் எவனோ அவன் எல்லையிலா ஆனந்தத்தை யடைகிறான்.

'**சு**வரை வைத்துக் கொண்டுதான் சித்திரம் எழுத முடியும்' என்று பழமொழி. அதைப்போலவே, உடம்பை நல்ல நிலையில் வைத்துக் கொண்டால்தான், வாழ்க்கையின் பல துறைகளிலும் நாம் திறம்பட ஈடுபட முடியும். அதற்கு நம் யோகாஸனங்களை விடச் சிறந்த மார்க்கம் வேறு கிடையாதென்று நான் துணிந்து கூறுவேன். நம் தற்காலக் கலாசாலைகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு என்னென்னவோ தேகப் பயிற்சி அளிக்கத்தான் அளிக்கிறார்கள். அப்படியிருந்தும் கூனல் முதுகு, கொத்தவரங்காய் உடம்பு, குழிந்த கண்கள், அவற்றின் மங்கலை மறைக்கும் மூக்குக் கண்ணாடி ஆகிய லட்சணங்களோடு, அனாரோக்கிய பிண்டங்களாய் அவர்கள் இருக்கிறார்கள்.



புரொபஸர் டி. வி. திருவேதி பல யோகாஸனங்கள் பயின்றவர். அவுந்து ராஜாவிடம் சூர்ய நமஸ்கார முறைகளைக் கற்றவர். மார்ச்சு மீ 2உ சென்னை சௌந்தர்ய மகாலில் தமது கலையை விளக்கும் சில பயிற்சிகளைச் செய்து காட்டப் போகிறார்.

ஏனெனில், அந்தத் தேகப் பயிற்சிகளெல்லாம் சுவாரஸ்யமற்ற, பயனில்லாத, மேனாட்டு முறைகள். அவற்றை அப்யஸிப்பதிலும்கூட நம் மாணவர்கள் 'டிமிக்கி'யும் கொடுத்து விடுகிறார்கள்! நமது புராதன முறைகளான இனிய யோகாஸனங்களையும் சூரிய நமஸ்காரத்தையும் கற்றுக் கொடுப்போமானால், மாணவ மாணவிகள் களிப்புடன் பயில்வார்கள்.

நமது யோகாஸனங்களில் ஒவ்வொன்றும் வெவ்வேறு தனி அங்கத்துக்கும் வளர்ச்சியும் பயிற்சியும் அளிக்கிறது; அன்றியும் எல்லாமே உடம்பு முழுவதற்கும் உறுதியளிக்க வல்லவை. தவிர, புத்தி தீட்சண்யம், சுறு சுறுப்பு, தேக லாகவம், லாவண்யம் ஆகியவற்றையும், அப்பியாசிக்கு நமது யோகாஸனங்கள் தருகின்றன. இந்தப் பலன்களெல்லாம் எப்படி யேற்படுகின்றன வென்றால், யோகாஸனங்களை நமது முன்னோர் வகுத்திருக்கும் அபார சூட்சுமமே காரணம். ஒவ்வொரு பிராணியிடமும் காணப்படும் தனித்தனி அபூர்வ குணங்களைக் கொண்டு, வெவ்வேறு யோகாஸனங்களையும் அவர்கள் வகுத்திருக்கிறார்கள். பாம்பின் விசேஷ குணநிசயத்தை யனுசரித்தது ஸர்ப்பாஸனம்; மயிலின் சிறப்பான குணத்தை அடக்கிக் கொண்டது மயூராஸனம்—இப்படியேதான் மற்ற ஆஸனங்களும் அமைந்திருக்கின்றன. இப்பேர்ப்பட்ட அரிய யோகாஸனங்களை நமது ஜனங்கள் மீண்டும் கைக்கொண்டு, தங்களுக்கும் பிற்கால சந்ததிகளுக்கும் தேகாரோக்கிய வாழ்வைத் தேட முற்பட வேண்டுமென்பது எனது ஆவலாகும்.

பாஷையின் உபத்திரவம்

கேலெட் நேபே என்ற ஒரு புடாபெஸ்ட் டாக்டர் பின்வருமாறு கூறுகிறார்:—

நான் பல வருஷங்களாகத் தொழில் புரிந்து வருவதிலிருந்து, ஒரு விஷயம் அறிந்து கொண்டிருக்கிறேன். கையாள மிகக் கஷ்டமான சாதனம் பாஷையே என்ற படிப்பினைதான் அது. ஒரு நோயாளியை "உங்கள் வயதென்ன?" என்று நான் கேட்டேனானால், "1879-ஆம் வருஷம் ஜூன் மீ 29-ந் தேதி" என்று அவர் பதிலளிக்கிறார். அவருடைய பெயரைக் கேட்டால் "என் பெயரா?" என்று ஆச்சரியத்தோடு அவர் கூவுகிறார், "குப்புறப் படுத்துக்கொள்ளுங்கள்" என்றால், அவர் மல்லாக்கப் படுத்துக்கொள்ளுகிறார். "வாயைத் திறவுங்கள்" என்றால், அவர் கண்களை மூடிவிடுகிறார். "காலைச் சேர்த்துக்கொண்டு நில்லுங்கள்" என்றால், அவர் முட்டிக்கால் தட்டுகிறார். இத்தனை தொல்லையோடு பரிட்சித்து முடிந்ததும், "பத்து ரூபாய் கொடும்" என்று கேட்டால், அவர் அஞ்சு ரூபாய் கொடுக்கிறார். பாருங்கள், அவருக்குத் தமது சொந்த பாஷையே தெரியவில்லை; என்ன செய்வது?

அந்தப்புரக் கலகம்

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

கீழ் நாட்டிலே ஒரு மன்னன் இருந்தான். அவனது செல்வத்தைப் பார்த்துக் குபேரனே வயிறெரிந்து வலிப்புக் கண்டுவிட்டான். அத்தனை செல்வம்! அளவிலாச் செல்வம்!!

முத்துக்களைத் தூற்றிப் பொறுக்க, மணிக் களமொன்று அவனுக்கிருந்தது; கண்ட பேரண்ட பட்சிகளின் முட்டைகள்போல் பெரிய முத்துக்களே அவன் பொக்கிஷத்தில் சேரும். டால் அடிக்கும் வைரங்களே அவனது 'பேப்பர் வெயிட்டு'கள். சேவகரிடம் கோபம் வந்தால், அந்த வைரக் கற்களைத் தான் அவர்கள்மேல் அவன் வீசியடிப்பான். அவனது ஸ்நான அறைக் கூரை, சந்திரகாந்திக் கற்களால் பாவப்பட் டிருந்தனவாம்; மதியின் குளிர் நிலவை வடித்து, அவனது சிம்மத் தலையிலும் மேனியிலும் அவை பொழிந்தனவாம். இதெல்லாம் ஆதாரமுள்ள தஸ்தவேஜிகள் கூறும் தகவலாகும்.

அம் மன்னனின் மற்றெல்லா அரும் பொருள்களிலும் மகா அருமையான வேறிரண்டு உண்டு. சுண்ணாம்பும் வெண்ணெயும் போல், கள்ளும் பன்னீரும் போல், ஒன்றுக் கொன்று அவை மிக மாறானவை. ஒன்று, பொறுக்கியெடுத்த ஐந்நூறு கட்டழகிகளடங்கிய அவனது அந்தப்புரம்; மற்றது, ஆய்ந்து தேர்ந்த ஐந்நூறு ஒட்டைக ளடங்கிய அவனது ராஜாங்க லாயம்.

தனது அந்தப்புரக் காதலிகளை அவன் ஆண்டு முழுதும் வசந்தத்தின் களிப்பிலே யிருத்தி, சர்வபோக கேளிக்கைகளோடு போஷித்து வந்தான். அவனது விருந்தினரெல்லாம், அக் கட்டழகிகளின் சுந்தரப் பொலிவைப் புகழ்ந்து போற்றினார்கள். அவ்வழகு சுந்தரிகளின் ஹாஸ்ய ஜோதியின் இன்பத்தாலும், அவர்களது மலர்மணப் பெருமூச்சு மேலே வீசும் பேரானந்தத்தாலும், விருந்துக்கு வந்த அதிதிகள் பரவசமெய்தினார்கள்.

இப்படி யிருக்கையிலே, திடீரென் றொருநாள், அவ்வந்தப்புரக் கட்டழகிகள் கலகந் தொடங்கி விட்டார்கள். தாங்கள் அளவுக்குமேல் வேலை செய்வதாக முணு முணுத்தார்கள். அந்த ஐந்நூறு ஒட்டைகள்மீதும் அவர்களுக்குப் பொறாமையும் மூண்டது; அவை மட்டில் நாள் முழுதும் வேலையின்றித் தின்று குடித்து, தங்கள் திமிலழகையும் வனாந்திர எழிலையும் சிந்தனை செய்து காலங் கழிக்கின்றனவே என்று குமுறினார்கள்.

அவர்களது கூச்சல் அரசனின் காதுகளை எட்டியது. அவர்களின் குரூரமான திடீர் வேலை நிறுத்த யோசனையைக் கேட்டு, அவன் திடுக்கிட்டுக் கவலைகொண்டு நெஞ்சங் கலங்கினான். ஒருபுறம் துயரமும் ஒருபுறம் ஆத்திரமும் சூழ்ந்து, அவனது பல தார மூளையை இருளடையச் செய்தது. எந்த நெருக்கடியிலும் கடவுளைப் பிரார்த்தித்தறியாத அவன் இந்த நெருக்கடியிலே மன்றாடிப் பிரார்த்தனை புரியலானான்: "தெய்வமே! எனக்கு வழி காட்டு. கருணைக் கடலே! இம் முட்டுக்கட்டையைத் தீர்" என்று இறைஞ்சினான்.

ஆண்டவன் பதிலும் உடனே வந்தது. சமாதான தேவதையின் திருநடனச் சிலம்பொலி, ஆயுதப் பரிகாரணப் பசுஞ்சோலை நாடுகளிலே மாய்ந்து மறைந்தது. போர் முரசு கொட்டி முழுங்கியது. மரணத் தேவனும் புதிய புதிய நகர்களிலே ஊழிக்கூத் தாடலானான். கீழ்நாட்டு மன்னனும் தனக்குக் கதி பிறந்த களிப்பிலே மூழ்கியவனாய், யுத்த பூமியான ஆசேல்டாமாவுக்குத் தனது வீர தீர ஒட்டைப் படையை விறு விறென்று அனுப்பிவிட்டான்!

ஸோவியத் ருஷ்யாவில் அரசர்களைப் பிடிக்காது. ஆனால், சதுரங்க விளையாட்டில், 'அரசு' வேண்டுமே, என்ன செய்வது? காக்கஸ் பிரதேசத்துக் குடியானவன் ஒருவன் ஒரு யுக்தி செய்திருக்கிறான். சதுரங்க 'அரசன்' 'மந்திரி' காய்களுக்கு, ஸோவியத் ஜனாதிபதியும் அவரது மனைவியும் என்று பெயர் சூட்டிவிட்டான்; யானையைக் குடியானவன் குடிசை என்றும், ஒட்டையை வேட்டையாடி எனவும், குதிரையைக் கலைமான் என்றும் புதிய பெயர்களால் அழைத்து, பொது உடைமை ராஜாங்கத்தின் 'பெருமையை' அவன் காப்பாற்றியிருக்கிறான்!

மோகினி

(பிக்ஷு)

வானத்தில் கை கண்டேன்,
மோகினியாள் முறுவலித்தாள்:
நள்ளிரவில் முல்லை மலர்
அள்ளி விட்ட லாகிரி போல்.

"வாடா என் கண் மணியே!
வழி கெட்ட வழிப் போக்கா!
இல்லாத இடமெங்கும்
சுற்றி வந்து சோர்வடைந்தாய்.

பண மென்னும் பெண்ணைக் கூடிப்
பல நாள் தனித்திருந்தாய்;
ஐம்புலனின் பாழ் மனையில்
கதவு தட்டிக் கால் கடுத்தாய்.

உலகின் பரந்த சந்தை
பாசக்கயிறு எறியக் கண்டாய்!....
மணமாலை, மஞ்சம், வர்த்தி
நெடுநாளாய் வைத்திருந்தேன்.

வாய்த்தேனும் வடிவழகும்
வெகு யுகமாய்க் காத்திருக்கு.
வாடா என் காதலனே!
வழிகண்ட வழிப் போக்கா!"

காந்தி வாக்கு

'ஹிந்து-முஸ்லீம்' பிரச்னை கடினப் பட்டிருக்கிறதே, விமோசனமே யில்லையா? தற்போதைய நிலையை 'வெறும் உஷத்கால இருள்; இது மாறிவிடும்' என்கிறார் மகாத்மாஜி. மகாத்மாவின் வாசகம் வருமாறு :

ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமைக்கு நாம் நம்மைத் தயார் செய்து கொண்டு விட்டோம் என்பதில் சந்தேகமேயில்லை. கிலாபத் இயக்க காலத்தில் இதை நாம் அநேகமாக அடைந்து விட்டதாகவே தோன்றிற்று. ஆனால் பின்னர் நமது நம்பிக்கை யெல்லாம் மண்ணாய்ப் போனதுபோல் காணப்பட்டது. எனினும், இருள் என்றென்றும் இருந்து கொண்டிருக்க முடியா தென்பது இயற்கையின் நியதி. இருள்கூட ஒளி யில்லாவிட்டால் வாழ முடியுமா? விடியற்காலையில் சூரியோதயத்துக்கு முன்னால்தான் இருளும் அதிகமாக இருக்கும். பயங்கரமான இருள் அதிகரிக்க அதிகரிக்கத்தான் சந்துஷ்டி தரும் ஒளியும் இன்னும் அருகாமையில் வந்து கொண்டேயிருக்கும். எந்த நோய்க்கும் ஒரு முடிவு உண்டு. நோய் தீராவிட்டால், சாவு என்ற முடிவாவது வந்து துன்பத்தைப் போக்கிவிடும். நாமறிந்தமட்டில், நம் துன்பம் தீரும் காலம் நெருங்கி விட்டது.

மொழிபெயர்ப்பு இலக்கியம்

இலக்கியத்தை வளர்க்க மொழி பெயர்ப்புகளும் ஒரு வழியாகும். காந்திஜியும் இதை ஆதரித்திருக்கிறார் :

மேல் நாட்டில், ஜெர்மன் பாஷையில் ஒரு நல்ல புஸ்தகம் வெளிவர வேண்டியதுதான் தாமதம்; கொஞ்ச நாளைக்குள் அது மொழி பெயர்க்கப்பட்டு இங்கிலீஷில் வந்து விடுகிறது. ஆங்கில இலக்கியத்திலுள்ள மகத்தான நூல்களைக்கூட, சிறு குழந்தைகளும் பாமர மக்களும் வாசிக்கும்படியாகச் சுருக்கி, மிகவும் குறைவான விலைகளில் விற்கிறார்கள். நம்மில் யார் இப்படிச் செய்கிறார்கள்? இந்தத் துறை இதுவரை கவனிக்கப்படவே யில்லை. நம் இலக்கிய கர்த்தாக்களும், பல பாஷை விற்பன்னர்களும் இதைக் கவனித்தால் என்ன! இவர்களெல்லாம், முதலில் கிராமங்களுக்குப் போகவேண்டும்; ஜனங்களின் உள்ளங்களை அறியவேண்டும். அவர்களது தேவையை உணர்ந்து அதைத் திருப்திசெய்ய வேண்டும்; கிராமம் போன்ற 'அடைச'லான இடத்தில் இருந்தால் மூளை மழுங்கிப் போய்விடும் என்று சொல்லாதீர்கள். மூளை மழுங்கிப் போவதற்குக் காரணம் உங்கள் மூளை 'அடைச'லா யிருப்பதுதானே யன்றி, கிராமம் 'அடைச'லா யிருப்பதல்ல. புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆவலுடன், கண்ணையும், காதையும், மனதையும் திறந்துகொண்டு அங்கே போவீர்களானால், கிராமத்தின் பரிசுத்தக் காற்றில் அவை இன்னும் கூர்மையாகிவிடும்.

காமம் தேளின் விஷம்போல

காம இச்சையை வெல்வதே மனிதர்களின் மிக முக்கிய முயற்சியா யிருக்க வேண்டும் என்கிறார் மகாத்மாஜி :

காம உணர்ச்சி இந்தியாவெங்கும் வலுத்து வருகிறது. ஓர் அடிமை, தனது எஜமான் தனக் கிட்டிருக்கும் விலங்குகளைக் கட்டியணைத்துப் பெருமை கொண்டு, அவற்றைத் தனது மதிப்பரிய

ஆபரணங்களாக எப்போது மதிக்க ஆரம்பிக்கிறானோ அப்போது அந்த அடிமைமீது எஜமானின் வெற்றி பரிபூர்ணமாகி விடுகிறது. ஆனால், மன்மதனின் இந்த வெற்றியோ, பார்வைக்குப் பெரியதாய்த் தோன்றினாலும்கூட, அற்பாயுள் வாழ்வுடன் மாய்ந்து மறையும் என்றே நான் திடமாய் நம்புகிறேன். ஒரு தேள் கொட்டின விஷம்போல இந்தக் காமவெறி தானாகவே இறங்கி, இறுதியில் சக்தியற்றதாய்ப் போய்விடும். என்றாலும், அந்த இடைக்காலத்தில் நாம் ஒன்றும் செய்யாமல் கையைக் கட்டிக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்கலா மென்று அர்த்தமில்லை. காம இச்சை இறுதியிலே மடிந்துவிடும் என்று நினைத்து, நாம் பத்திரமாகவே யிருக்கிறோம் என்ற அசட்டுத் தைரியத்துடன் சும்மாவிருக்கலாகாது. காமத்தை ஜயிப்பதே ஒரு ஸ்திரீ அல்லது புருஷன் தன் வாழ்வில் செய்யக்கூடிய மிக உன்னத முயற்சியாகும்.

ஆத்ம சக்தி

சில மனிதர்களிடம், நமக்கு என்னவோ, ஒரு நிமித்தமும் தெரியாமலே ஒரு வசியம் ஏற்பட்டு விடுகிறதே; இதன் காரணம் ஆத்ம சக்திதான் என்கிறார் காந்திஜி :

தன்னைச் சூழப் பரிமளம் வீசும் ரோஜா மலரைப் பற்றிப் புஸ்தகமா எழுதவேண்டும்; கண்ணுள்ளவரெல்லாம் காணக்கூடிய அதன் அழகைப் பற்றித்தான் நூல் இயற்ற

சர்க்காரின் அவசரச் சட்ட கெடுபிடிக்குப் பணிய மனமில்லாமல், 'ஹரிஜன்' பத்திரிகையை மகாத்மா காந்தி நிறுத்திவிட்டார். ஆனால், தேசீய இந்தியாவை இன்று போஷித்து வளர்க்கும் உணவு, காந்தியின் வாக்கும் எழுத்தும்தான். தேசீய இந்தியா காட்டாறு போல் பொங்கியோ வறண்டோ போகாமல், ஜீவ நதியாய் அதனைக் காப்பாற்றும் அணை கரைகள் அவை. ஆதலால், ஏற்கனவே 'யங் இந்தியா' விலும் 'ஹரிஜ'னிலும் அவ்வப்போது வெளியான காந்தி வாக்குகள் சிலவற்றை இங்கே கோய்து தந்திருக்கிறோம்.

வேண்டுமா? எழிலும் மணமும் உள்ள ரோஜா மலரைவிட, ஆத்ம பரிசுத்த முடைய வாழ்வு எத்தனையோ மடங்கு மேலானதாகும். ஒருவனது வாழ்வினின்றும் ஆத்ம சக்தி வெளிப்படும் க்ஷணத்திலே சூழவுள்ளவ ரெல்லாம் அதனால் வசியமாகி விடுவர் என்றுகூட நான் சொல்லத் துணிவேன். ‘பகவான் கண்ணன் எங்கே தோன்றினாலும் அவனைக் கண்ட ஜனங்கள் ஆவேசம் பிடித்தவர்போல் பரவசமாய் நடக்கிறார்கள்’ என்று பாகவதத்திலே நாம் படிக்கிறோம். ஏசுவைப் பற்றியும் பைபிளில் இப்படியே சொல்லப்பட் டிருக்கிறது.

இன்றைக்கு நடப்பதையே எடுத்துக் கொள்ளுவோமே. ஜவஹர்லால் எங்கே சென்றாலும், ஜனங்கள் மந்திரத்தால் கட்டுண்டவர் போல் மயங்கி விடுகிறார்களே, ஏன்? ஏதோ ஓர் நுட்ப சக்தியிருக்கிறது. அது ஆத்ம சக்தியாயில்லாமலிருக்கலாம். அதற்கு நீங்கள் என்ன பெயர் வேண்டுமானாலும் கொடுங்கள். ஜனங்கள் அவர் பிரசங்கத்தைக் கேட்பதற்காக வரவில்லை; அவரைத் தரிசிக்கவே வருகிறார்கள். கோடிக் கணக்கான ஜனங்களை நடத்தி வைக்க, இதையன்றி வேறு வழி கிடையாது.

எனக்கும் ஆண்டவனுக்கும் இடையே எவ்விதத் தூதும் கிடையாது. நான் என்னிச்சையாக அவன் கைக் கருவி யாகிவிடுகிறேன். அவனது அருள் என் மீது பொழிந்து என்னிடமிருந்தும் ததும்பி யோடுகிறது. தான் பிறந்த மூலஸ்தானத்தி லிருந்து கங்கை எப்படி வழிந்தோடுகிறதோ, அம்மாதிரியே ஆண்டவனருட் பிரவாகமும் என்னிடமிருந்து வழிந்தோடுகிறது. ஒருவன் சத்திய வாழ்க்கையை நடத்தும்பொழுது அவன் பேசவேண்டிய தேவையே யில்லை.

“எஜமானே! மீன்கள் நீரிலே எப்படி வாழ்கின்றன என்று எனக்கு ஆச்சர்யமா யிருக்கிறது.”

“ஆச்சர்யமென்ன? தரையிலே மனிதன் வாழ்வதைப் போலவேதான்; பெரியவை சிறியவற்றை விழுங்கி வாழ்கின்றன.” —ஷேக்ஸ்பியர்.

தேசத்தின் குழந்தைகள்

“சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருவதற்கு இடங் கொடுங்கள்; அவர்களைத் தடை செய்யாதீர்கள்” என்றார் ஏசு பெருமான். குழந்தைகளின் களங்கமற்ற நடவடிக்கைகள் அவ்வளவு இனிமையானவை. முற்றுந் துறந்த முனிவர்களும் குழந்தைகள் என்றால் பிரேமை காட்டுகிறார்கள்.

போலந்தி லிருந்த ஒரு யூதப் பெண் குழந்தை. அவளுடைய பெற்றோர் அந்த நாட்டை விட்டு விரட்டப்பெற்று, ஆஸ்திரேலியாவில் அடைக்கலம் புகச் சென்றனர். அவர்கள் கப்பலில் செல்லும்போது, எடுக்கப்பட்டது இந்தக் குழந்தையின் படம்.

ரொம்ப தூரம் போவானேன்; நமது மகாத்மா காந்திக்கே குழந்தைகளிடம் பரம வாஞ்சை. அவர்களிடம் அவர் கொஞ்சி விளையாடுவார். ‘குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள் — மழலைச் சொல் கேளாதவர்’ என்றும் ‘மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்தம் — சொற் கேட்ட லின்பம் செவிக்கு’ என்றும் பாடிப் போந்தார் தெய்வப் புலவரும்.

குழந்தைகளுக்குச் சூதுவாது தெரியாது. அவற்றின் மழலையிலே, தளர் நடையிலே இயற்கை அழகும் இனிமையும் பொங்குகின்றன. அவற்றின் உணர்ச்சி பாவங்களெல்லாம் கலப்பற்றவை யாகும். ஆதலால், இக்காலத்தில் போட்டோ எடுப்போர்க்கெல்லாம் குழந்தைகளை எடுப்பதிலே ஒரு ஆர்வம். மிகத் தேர்ந்த நடிகர்களிடம் கூட குழந்தைகளிடம் காணப்படும் முக பாவங்களைக் காண முடியாது.

இந்தப் பக்கங்களிலுள்ள மூன்று குழந்தைகளின் படங்களும் நண்பர் **ஸ்ரீ ஏ. கே. செட்டியார்** (காந்தி படம் தயாரித்திருக்கிறாரே அவர்தான்) எடுத்தவை யாகும். ஒன்று நம் நாட்டுக் குழந்தை; மற்றிரண்டும் அயல் நாட்டுக் குழந்தைகள். எல்லாம் நம் நாட்டுக் குழந்தைகளா யிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! இதைக் கேட்டால், அவர் சொல்லுகிறார்: “நம் நாட்டுக் குழந்தைகளை நான் எடுத்த படங்களும் என்னிடம் நிறைய இருக்கின்றன. உங்களுக்குக் கொடுப்பேன்; ஆனால், நீங்கள் போட மாட்டீர்கள்” என்கிறார்.

ஏன்?

மேல் நாட்டுக் குழந்தைகள் அனைத்தும் உடற்கட்டும் ஆரோக்கியமும் நிறைந்திருக்கின்றன. நம் நாட்டுக் குழந்தைகளோ, பெரும்பாலும் உடல்மெலிந்து, களைகுன்றியிருக்கின்றன. இது ஒரு தேசீய துர்ப்பாக்கியமாகும். அவரவர் வீட்டுக் குழந்தைகளைப்பற்றி அவரவர் தானே கவலை கொள்ள வேண்டும், மற்றவருக் கென்ன என்று எவரும் நினைப்பது தவறாகும். குழந்தைகள் ஒரு தேசத்தின் அடுத்த பரம்பரையின் சரித்திரத்தைச் சிருஷ்டிக்கப் போகிறவர்கள்; நம்மால் செய்து முடிக்க முடியாமல் விட்டுவிட்டுப் போன காரியங்களை அவர்களே செய்ய வேண்டும். ஒரு தேசத்தின் ஒவ்

வொரு குழந்தையின் உடல், மன ஆரோக்கிய விஷயத்திலும், வளர்ச்சி விஷயத்திலும், தேசமே சமூகமே, அக்கரை எடுத்துக் கொள்வது அவசியமாகும்.

இங்கிலாந்திலும் ஒரு காலத்தில் குழந்தைகளின் நிலைமை மிகப் பரிதபிக்கத் தக்கதாகத்தான் இருந்தது. பத்தொன்பதாம் நூற்றுண்டிலே, லார்டு ஷாப்ட்ஸ்பரி என்பவர், இவ்விஷயத்தில் தேசத்தின் மனச்சாட்சியையே தட்டியெழுப்பி விட்டார். குழந்தைகளுக்கு இழைக்கப்பட்ட சமூகக் கொடுமைகளைக் களைய முயன்றுர். சின்னஞ்சிறு குழந்தைகளை யெல்லாம் தொழிலிலே போட்டு வாட்டும் அநியாயத்தை ஒழிக்கும் தொழிற்சாலைச் சட்ட மியற்றப் பெரிதும் போராடினுர். பின்னுல், குழந்தைகளைப்பற்றிய வேறு பல பிரச்னைகளும் அவர் காலத்துக்குப் பின்னரும் தொடர்ந்து கவனிக்கப்பட்டு வந்தன. இன்று இங்கிலாந்தில் குழந்தைகள் நிஷ்கவலையாய், ஆரோக்கியமாய், மனப்பூரிப்புடன் வாழ்கின்றன.

இங்கிலாந்தில் மட்டிலுமல்ல, மேல்நாட்டின் பற்பல தேசங்களிலும், இதை 'ஆனந்தக் குழந்தை'யின் காலம் என்பதாக மதிக்கிறுர்

'நாதன்'

கள். ஏழைத் தொழிலாளர் குழந்தைகளுக்கு இன்று ராஜாங்கங்களே பால், சத்தான ஆகாரமெல்லாம் அளித்துப் போஷித்து வளர்க்கின்றன. குழந்தைகளின் உள்ளத்திலே பயம் என்பது துளியும் புகவிடாமல் கல்வி புகட்டப்படுகிறது. கலாசாலைகளிலே 'கலீர்', 'கலீர்' என்று குழந்தைகள் சிரித்த வண்ணமிருக்கின்றன. சர்வ சுதந்திரமாய், சர்வோபசாரத்தோடு குழந்தைகளை நடத்துகிறுர்கள்.

இதோ ஒன்றன்பின் ஒன்ருகப் பல நாடுகள் சர்வாதிகாரக் கொடுங்கோலனின் கையிலே விழுந்து விட்டன. இங்கிலாந்தும் மிக நெருக்கடியான நிலைமையில் இருக்கிறது. ஆயினும், குழந்தைகள் அவர்களை மறக்கவில்லை. இங்கிலாந்து என்ன அவதிக்குள்ளானுலும் சரிதான்; பிரிட்டிஷ் குழந்தைகள், அமெரிக்கா, இந்தியா முதலிய பத்திரமான நாடுகளுக்குச் சென்று க்ஷேமமாய், களிப்போடு வாழ்ந்து வரும்.

நாகரிக உலகமெல்லாம் குழந்தைகள் வளர்ப்புக் காரியத்தை

இந்தியக் குழந்தை. என்ன ஆவலுடன் பழத்தைக் கவ்வுகிறது! அப்படியே ஒரே வாயில் விழுங்கிவிட ஆசைபோலும்!

இப்படியொரு முக்கியமான தேச கைங்கரியமாய் மதித்துக் கவனம் செலுத்தி வருகையில், நம் நாட்டிலே இன்றும் நோயும் நொடியும் உடல் நலிவும் வாட்டும் குழந்தைகளையே பெரிதும் காண்பது நமது துர்ப்பாக்கிய மல்லவா? அரசாங்கம் என்ன செய்கிறது? தேசம் என்ன செய்கிறது? மக்கள் என்ன செய்கிறுர்கள்? இன்னும் உறக்கந்தானு?

சீனக்குடியரசின் பிதா என்று சொல்லப்படும் ஸன்யட் ஸென் செய்த சில பிரசங்கங்கள் மிகப்பிரசித்தமாகும். சீனுவின் அரசியல் தத்துவத்தை அவர் பின்வருமாறு சுருக்கிக் கூறியுள்ளார்:

(1) பொருள்களின் இயற்கையை ஆராய்ச்சி செய்.

(2) அறிவின் எல்லையை விசாலமாக்கு.

(3) உனது நோக்கத்தில் சிரத்தை காட்டு.

(4) மனதை ஒழுங்கு படுத்து.

(5) தன் மதிப்பை விருத்தி செய்து கொள்.

(6) குடும்பத்தை ஆட்சி செய்.

(7) ராஜாங்கத்தை நிருவாகம் பண்ணு.

(8) உலகத்தைச் சமாதானப் படுத்து.



ஸ்வீடன் தேசத்துப் புரோபலர் ஒருவரது மகள். அவர்களது தேசீய தினத்தன்று ஸ்வீடன் தேசியக் கொடியைத் தாங்கி நிற்கிறுள்.

கொட்டகை வாசலில்

கே. ஸ்ரீநிவாசன், பி.ஏ.

"நான் வந்து....நான் வந்து...." என்று நான் சொல்லிக் கொண்டே எழுந்துபோக எத்தனித்தேன்.

"நீ வந்ததெல்லாம் எல்லாருக்கும் தெரியும். உட்காரேன். என்னிக்கோ ஒருநாள் இந்தப் பக்கம் வரே. அதுவும் அத்தி பூத்தாப்பிலே" என்றார் மாமா.

"இல்லே, மாமா, ஆத்திலே...."

"என்னடா ஆத்திலே வந்துடுத்து?"

"ஆத்திலே, மாமா........"

"என்ன, என்ன? வெள்ளம் வந்துடுத்தா? நீ சொல்றதைப் பார்த்தால் பயமா யிருக்கே."

"இல்லே, அவள் தனியா இருப்பா."

"நல்லவேளை! இதுக்குத்தானா இவ்வளவு தடபுடல் பண்ணிட்டே! ....தனியென்ன; பெரிய பட்டணத்திலே, தனி யென்னடா வந்தது!" என்று மாமா போட்ட போட்டிலே அயர்ந்துவிட்டேன்.

மணியோ ஏழு.

"அம்மாமி எங்கே?" என்று ஆரம்பித்தேன்.

"அது என் கேட்கிறே! அவள் கிளப்புக்குப் போயிருக்கா" என்றார்.

"என்ன, கிளப்புக்கா?"

"என்னடா உனக்கு அதிசயம் வந்துடுத்து?"

"பின்னே ராஜம் எங்கே"

"அம்மாவோடேதான் போயிருக்கா."

"சமையல்காரன் ஊரிலே யில்லையா?"

"அட பைத்தியமே, அவள் காப்பி கிளப்புக்குப் போகல்லெ; லேடீஸ் கிளப்புக்கு."

"ஓகோ! கச்சேரியாக்கும்."

"கச்சேரி என்ன? வம்புக் கச்சேரிதான்."

திடீரென்று மாமாவின் தொனி குன்றியது. என்னை மிரள மிரளப் பார்த்தார். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

"பேச்சுக் கென்ன பேச்சு!" என்று அம்மாமியின் குரல் என் பின்னே ஒலித்தது.

அதற்குள் ராஜமும் வந்துவிட்டாள்.

'வாங்கோ, மிஸ்டர் அத்தான். ஏது இவ்வளவு தூரம்?" என்று கேட்டுக்கொண்டே என்னை நெருங்கினாள் ராஜம்.

"அப்பவே வந்துட்டேன்; நீ ஆத்தி லில்லை. உனக்கோசரம்தான் காத்திருந்தேன்" என்றேன்.

ஒரு விஷமப் புன் சிரிப்பு அவள் முகத்தில் பூத்தது. நல்ல பேச்சுக்காரி அவள்.

"இவ்வளவு தூரம் பேசக் கத்துண்டுட்டயா?" என்று கேட்டாள்.

"அவனை என்னன்னு நினைச்சுண்டே? அவன் ஆம்படையாள் யார் தெரியுமோன்னோ?" என்று ஆரம்பித்தாள் அம்மாமி.

"ப்ரொவஸர் பொண்ணு!" என்றாள் ராஜம், குறும்புச் சிரிப்புடன்.

"ராஜம், நாழியாச்சு; நான் வந்து........"

"நீ வந்ததுதான் வந்துட்டே. கொஞ்சம் இருந்துட்டுத்தான் போயேன்" என்றாள் ராஜம்.

"மணி ஏழேகால் ஆகிவிட்டது. அவளும் காத்துண்டிருப்பா."

"சதா அவ பேச்சுத்தானா? அத்தான், நீ மாமா வாத்துக்கு வரதே அதிசயம். ஒரு நாளைக்காவது இருந்துட்டுப் போகக் கூடாதா?"

"அதுக்கில்லே. இன்னொரு நாள் வரேன்."

"அத்தான், மறந்துட்டேனே. இன்னிக்கி அபூர்வமான ஸினிமா. இன்னும் 'டைம்' இருக்கு. சீக்கிரம் புறப்படு, போகலாம்" என்று அவள் மெதுவாக ஒரு யோசனையைப் போட்டாள்.

"என்ன? ஸினிமாவா? மணி பத்தாகிவிடுமே?" என்று நான் மிரண்டுகொண்டே சொன்னேன்.

"என்னை அழைச்சிண்டு போவையா? அழைச்சுண்டு போன்னு சொல்ல எனக்குப் பாத்தியதைதானிருக்கா?" என்று அவள் குறையிரக்கத் தொடங்கிவிட்டாள்.

எனக்கு ஏன் வந்தோம் என்றாகி விட்டது. ராஜத்துக்கு என் மீது மட்டற்ற அன்பு உண்டு. அவள் வார்த்தையைத் தட்ட எனக்கு மனம் வரவில்லை. தவிர, ஒரு மூன்றுமணி சாவகாசமாவது ராஜத்துடன் சந்தோஷமாய்ப் பேசிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பம்...........

"என்னடா யோசிக்கறே! இஷ்டமிருந்தால் கூட்டிண்டு போ. இல்லேன்னாச் சொல்லிப்புடேன். என்ன தலை போறது?" என்று மாமா முடுக்கினார்.

கதையை வளர்ப்பானேன். கால்மணி நேரத்தில் நான் ராஜத்துடன் ஸினிமாக் கொட்டகையை அடைந்தேன். கொட்டகை வாசலில் 'திமிதிமி' யென்று கூட்டம். கொஞ்சநேரம் வரையில் ஒரு பக்கமாய் நின்றுகொண்டு, 'டிக்கட் எப்படி வாங்குவது?' என்ற கவலையில் மூழ்கியிருந்தேன். எப்படியும் நான்தானே வாங்கி யாகவேண்டும்? கடைசியில் ராஜத்தை ஓரிடத்தில் விட்டு, "ராஜம், இங்கேயே யிரு, இரண்டு டிக்கட்டுகள் வாங்கிண்டு வரேன்!" என்றேன்.

"இரண்டு போதாது, நாலு வாங்குங்கள்!" என்ற ஒரு குரல் என் காதில் விழுந்தவுடன் நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

என் மனைவி கமலா எங்களுக்குப் பின்னே தன் அத்தானுடன் நின்றுகொண் டிருப்பதைக் கண்ட எனக்குத் தலை சுழல ஆரம்பித்து விட்டது.

வேதாந்த விசாரணை :

மதங்களும் தேவையா?

ரூஸோ

["மனிதன் சுதந்திரமாய்ப் பிறந்தான்; ஆனால், எங்கும் விலங்குகளோடு காணப்படுகிறான்" என்று கூறிய பிரஞ்சு வேதாந்தி **ஜீன் ஜாக்ஸ் ரூஸோ.** சங்கீத சாஸ்திரம், இலக்கியம், அரசியல் இத்துறைகளிலும் சில பிரபல நூல்களை அவர் இயற்றியிருக்கிறார். பதினெட்டாம் நூற்றாண்டிலே வாழ்ந்தவர். அவருடைய அருங் கருத்துக்கள், பிரபல பிரஞ்சுப் புரட்சிக்கு விதை போன்றவை.]

ஏன் எனது ஆன்மா உடலினால் தளையுண்டு கிடக்கிறது? ஏன் எனது ஆன்மா இந்திரியங்களின் ஆட்சிக்கு உட்பட்டிருக்கிறது? பல்வகைத் தளைகளினால் ஆன்மாவின் தூய நோக்கங்கள் தோற்கடிக்கப் பெறுகின்றனவன்றோ? இவ் வினைக்களுக்கு விடை எனக்குத் தெரியாது. எல்லாம் வல்ல இறைவனுடைய மந்திராலோசனைச் சபையில் எனக்கு இடமில்லை. ஆயினும், கடவுளின் சித்தம் இவ்வண்ணம் இருக்கலாமோ என்று நான் ஒருவாறு ஊகிக்கலாம். இயற்கையிலே தூயநிலையே எங்கும் நிலைத்திருந்து, ஆன்மாவானது ஆபாசங்களால் பீடிக்கப்படாமல் சுத்தமாயிருக்குமாயின், பின் ஒருவன் அன்பும் அறமும் உடையவனாயிருக்கிறான் என்பதில் அவனுக்கு என்ன சிறப்பு இருக்கிறது? அப்போது மனச்சாட்சியின்படி நடந்துகொள்ளும் ஞாபகத்தாலும், நெஞ்சத்து நல்லன் நான் என்னும் பெருமிதத்தாலும் விளைகிற தனிப்பெரு மகிழ்ச்சியின் சிகரத்தை ஒருவன் அடைய முடியுமா? அற ஒழுக்கம் உலகத்தில் இயற்கையிலேயே அமைந்திருக்குமாயின், எவ்விதக் கஷ்டமுமில்லாமல் ஒருவன் ஆன்மவாழ்வு நடத்துதல் சாத்தியமாகும். அப்பொழுது ஒருவன் தேவதைகளைப்போல் இருக்கலாம். எனினும், எவ்வகை இடர்களுக்கிடையேயும் ஒழுக்கத்துடன் இருக்கும் ஒருவனே தேவதைகளினும் பலமடங்கு சிறந்தவனாவான்.

லோகாயதத் தளைகள் மனிதனைத் தன்னலங் கோருமாறு செய்கின்றன. சுயநல எண்ணங்கள் ஆன்மாவைத் தம் வழி இருக்கின்றன. பொதுநலத்துக்குத் தன்னலம் விரோதமாவதால், தன்னல வசதிகளையே மனிதன் தேட நேர்கிறது. இத்தகைய நிலையிலே எவன் ஒருவன் தனது அறிவினால் அற வழியில் நடக்கிறானோ அவனே புகழுக்கும் பெருமைக்கும் தகுதியுடையவன். லோகாயதத் தளைகளை வென்று, கடவுளின் சங்கற்பத்தின்படி எவன் நடக்கிறானோ, அவனுக்குத்தான் முடிவில்லா ஆனந்தம் உரியதாகிறது.

இவ்வுலகில் மனிதன் தாழ்மையான நிலையில்தான் இருக்கிறான். எனினும், மனிதனது உள்ளத்தின் முதல் தூண்டுதல்கள் நன்மைக்குரிய வழியையே காட்டும். எனவே, தீமையெல்லாம், அந்தத் தூண்டுதலுக்கு விரோதமாய் நாமாகத் தேடிக் கொள்பவையே. அப்படியிருக்க, தீமைகளையும் கடவுளே தந்ததாய்ச் சொல்லி, அவர்மீது பழி சாற்றுவானேன்? மனிதனைக் கெடுக்காமல் அவனை நாம் இயற்கையாய் வாழவிடுவோமாயின், அவன் நல்லவனாகவும் சந்தோஷமுள்ளவனாகவுமே யிருப்பான். 'குற்றம் செய்யும் நிலைமைக்கு நான் வற்புறுத்தப்பட்டேன்' என்று ஒரு தீயவன் சொல்வானாயின், அவனது கூற்று பொய். இந்திரியங்கள் இழுக்கும் வழிக்கு இரையாகாதபடி தன்னை யடக்கி ஆண்டு கொள்ளாமல், அவைகளின் வசப்பட்டுவிட்டு, பிறகு வருந்துவதில் பயனென்ன? இந்திரியங்களின் அடிமைகளாய் உழலும்போது விஷயங்களைத் தவறான முறையில் மதிப்பிட்டு விடுகிறோம்.

என்னை நானே உயர்த்திக் கொண்டு, மனோதிடத்தோடும் சந்தோஷத்துடனும் ஆசாபாசங்களின் வசமாகாமலும் இருக்க, நான் தியானம் முதலிய பயிற்சிகளைச் செய்கிறேன். படைப்பைப் பற்றிச் சிந்திக்கிறேன். எனினும், அதை ஆராய முயல்வதில்லை. படைப்பைப் போற்றுகிறேன், படைப்பின் முதல்வனை வழிபடுகிறேன். அவனது தெய்வ தத்துவத்தில் ஆழ்கிறேன்; அவனது கருணை வெள்ளத்தால் என்னை யவன் நிறைத்து விட்டான். அவனது கருணைக்கு அவனை நான் வாழ்த்துகிறேன். ஆனால், அவனுக்குப் பிரார்த்தனை ஒன்றும் நான் செய்வதில்லை.

அவனிடமிருந்து எதையாவது பெறுவதற்கன்றோ பிரார்த்தனைகள் செய்யவேண்டும். அவனிடமிருந்து பெறுவதற்கு எனக்கு என்ன விருக்கிறது? எனக்காக அவன் தனது சுய நிலையை மாற்றி, அதிசயச் செயல்களைப் புரியவேண்டுமோ? அவனது அறிவில் பிறந்து அவனது இச்சையில் நிலவுகிற இயற்கைப் போக்கை நேசித்திருக்க வேண்டியவனே நான். அதை விட்டு இயற்கையை என்பொருட்டு அவன் மாற்றிவைக்கவேண்டுமென விரும்பலாமா? அத்தகைய பிரார்த்தனை தண்டனைக்கே உரியதாகும். 'நேரான வழியில் நான் நடக்குமாறு செய்வாய்' என்றுகூட நான் அவனைக் கேட்க வேண்டிய தில்லை. நல்வழியில் நடக்கவேண்டிய சித்தத்தை முன்னமே அவன் எனக்கு அளித்திருக்கிறான். அறத்தின்மீதும் அன்புநெறியிலும் நான் ஆர்வங் கொள்வதற்கு அவன் எனக்கு மனச்சாட்சியை அளித்திருக்கிறான். மனச்சாட்சியின் முறையைத் தெரிந்துகொள்ள எனக்கு அவன் அறிவைக் கொடுத்திருக்கிறான். நேர் வழியில் நான் நடந்துகொள்ள எனக்குச் சுதந்திரமும் இருக்கிறது.

அப்படியிருக்க, நான் தீமையே புரிவேனாயின் அதற்கு மன்னிப்பே கிடையாது; நானாகவே தான் தீமையைச் செய்கிறேன். 'என்னை நீ நல்ல வழியில் நடத்து' என்று நான் கடவுளைக் கேட்டால்,

அவன் எதைச் செய்யும்படி என்னை எதிர்பார்க்கிறானோ அதையே அவனிடமிருந்து நான் எதிர்பார்ப்பதாகும். "நீதிக்கும் உண்மைக்கும் கருணைக்கும் மூலமான கடவுளே! உன்னிடம் எனக்கு நம்பிக்கையுண்டு; எனது நெஞ்சத்தின் விருப்பமெல்லாம், உன் சித்தம் நடப்பதாக என்பதே. எனது இச்சையை உனது சித்தத்துடன் பொருத்தியிருக்கின்றேனாதலினால், நீ எதைச் செய்கிறாயோ அதையே நானும் செய்கிறேன். உனது நன்மையில் எனக்கும் பங்குண்டு. தெய்வப் பெருமிதத்தை முன்னமே நான் அநுபவிப்பதாக நம்புகிறேன். அதுதான் ஒழுக்கத்தின் வெகுமதி. நான் வழிதப்பிப் போவேனேயானால், அப்பொழுது நீ என்னைத் தடுத்து நேர் வழியில் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில், மனிதன் தவறக்கூடும். நான் நேரானதென்று நினைப்பது தவறாயிருக்கலாம். எனவே கெட்டதை நல்லது என்று என்னை மயங்கவைக்கும் மாயையை விலக்கி உண்மையே என்னைத் தன்னிடம் இழுத்துக் கொள்ளுமாறு கேட்கிறேன். என்னால் உண்மையை எய்த முடியாத காலத்து, உண்மையின் கடமை என்னை வந்து ஆட்கொள்ள வேண்டுமென்றாகிறதன்றோ!"

இயற்கையின் பெருவனப்பைப் பார். உள்ளத்திருந்து எழும் ஓசைக்குச் செவிகொடு. கண்ணுக்கும், மனச்சாட்சிக்கும், புத்திக்கும் எட்டும்படி கடவுள் பேசுகிறானல்லவா? இதற்கு மேல் அவன் நமக்கு என்ன செய்யக்கூடும், என்ன சொல்லக்கூடும்? மனிதன் கூறுகிறதெல்லாம் கடவுளை இழிவு செய்வதேயாகும். மனிதனால் கூறப்படும் மதக் கோட்பாடுகளில் ஒன்றும் கடவுளின் தத்துவத்தை விளக்குவதாகாது. நம்மை அவை குழப்பியே வைப்பதன்றி உயர்த்துவதென்பது ஒருபோதுமில்லை. மனிதனால் வகுக்கப்பட்ட மதக்கோட்பாடுகள், மனிதனைச் செருக்குடையவனாகவும் கொடியவனாகவும் பிடிவாதக்காரனாகவும் செய்து, உலகத்தின் அமைதிக்கு மாறாக நெருப்பையும் கத்தியையும் எங்கும் நிலவச் செய்கின்றன. இவற்றால் பயனொன்றுமில்லை. அதற்குப் பதிலாக, குற்றத்தையே அவை வளர்க்கின்றன; துக்கத்தையே பெருக்குகின்றன.

கடவுளை எப்படி வழிபடுவது என்பதை மனிதன் அறிவதற்கு மதமுறைகள் தேவை என்று கூறுகிறார்கள். ஒவ்வொரு நாட்டினரும் கடவுளைத் தங்கள் இஷ்டப்படி கற்பித்துக்கொள்ளத் தொடங்கியதும், தங்கள் மனதுக்கு இசைந்தபடி அக் கடவுளைப் பேசச் செய்துவிட்டனர். இதற்கு மாறாக, அவரவர் இதயத்தில் கடவுள் என்ன சொல்கிறார் என்பதை மாத்திரம் மனிதர்கள் செவிகொடுத்துக் கேட்டிருப்பார்களானால், உலகத்தில் ஒரே மதந்தான் இருந்திருக்கும்.

குண்டுகளும் கணித நிபுணரும்

போன மகா யுத்த காலத்தில் பிரபலமடைந்த மாஜி பிரஞ்சுக் குடியரசுத் தலைவர் பாயின் கரேயைப்பற்றி நண்பர்களுக்குத் தெரிந்திருக்கும். அவருக்குச் சொந்தக்காரரான மற்றோர் பாயின் கரே ஒரு புரொபஸர்; கணித நிபுணர்.

பாரிஸில் இரவும் பகலும் ஜெர்மன் குண்டுகள், புரொபஸர் பாயின் கரேயின் இருப்பிடத்தைச் சூழ விழுந்து கொண்டிருந்தன. அவரது தோழரெல்லாம் வாடியும் இளைத்தும் போய் விட்டார்கள். அவர் மட்டில் கவலையற்று, ஆரோக்கியமாய், முகமலர்ச்சியுடனேயிருந்தார்.

"இதன் ரகஸ்யமென்ன?" என்று ஒரு நிருபர் அவரை விசாரித்தார்.

புரொபஸர் கரே சொன்ன பதிலாவது :— "குண்டுச் சத்தம் கேட்டவுடனே, எனது நண்பர்களெல்லாம் பயந்து, தப்பித்துக்கொள்வதற்காக வெளியிலும் வாசலிலும் ஓடுவார்கள். குளிரிலும் பனியிலும் நடமாடுவதால் அவர்களுக்கு ஜலதோஷம் பிடித்துக்கொள்ளும். சபஜுரம்கூட வந்து விடுவதுண்டு. அதனால்தான் அவர்கள் நோயுற்று இளைத்திருக்கிறார்கள்."

நிருபர் : "அது சரிதான்; உங்கள் விஷயத்தை யல்லவா கேட்டேன்."

புரொபஸர் : "என் விஷயமா? அது ரொம்ப ஸாமான்ய சங்கதி. நானோ ஒரு கணித நிபுணன். கணிதத்திலே, 'ப்ராபபிளிட்டீஸ்' (ஸம்பாவித விகித கணனம்) என்னும் ஒன்று உண்டு. பல குண்டுகள் போட்டால், ஒன்றுதான் நம்மீது விழக்கூடும். அந்த ஸம்பாவித விகிதம் எனது கணித சாஸ்திர கணனப்படி மிக அற்பமாகும். இந்த உண்மை எனக்குத் தெரியுமாதலால், நான் இருந்த விடத்தை விட்டு அசைவதில்லை; கவலைப் படுவதுமில்லை."

வனவாசியின் ஆச்சர்யம்

சென்ற ஐரோப்பிய மகா யுத்தம் நடந்துகொண்டிருந்ததே அப்போது, பிரானிஸ்டா மலினோஸ்கி என்ற ஒரு ஐரோப்பியர் ஒரு வனவாசியைச் சந்தித்தாராம்.

"ஆமாம். இத்தனை மனிதர்களை வெள்ளைக்காரர்கள் எப்படிச் சாப்பிடுகிறார்கள்?" என்று அவன் ஆச்சரியத்தோடு இவரைக் கேட்டான்.

"சாப்பிடுவதா? தங்களால் கொல்லப்பட்ட பகைவர்களை வெள்ளைக்காரர்கள் சாப்பிடுவதில்லை" என்று இவர் பதிலளித்தார்.

"அப்படியா! என்ன காட்டுமிராண்டிகள் இந்த வெள்ளைக்காரர்கள்! பிரயோசனமில்லாமல் எதற்காகக் கொல்லுகிறார்கள்?" என்று அவன் அதிசயித்தானாம்.

நடிக்க வேண்டுமா ?

பி. எஸ். செட்டியார்

பீடிகை :—எனக்கும் அந்த ஆசை இருந்தது; உங்களுக்கும் இருக்கலாம். அதிசயமான, அழகிய சினிமாக் காட்சிகளைக் காணும் யாருக்குத்தான் இந்த ஆசை உதிக்காது? இத்தகைய ஆசை இருக்குமானால், அடியில் வரும் நடிப்புப் பயிற்சிக் குறிப்புகளைப் படித்துப் பாருங்கள்.

முதலாவது, ஒருவரும் தான் தோன்றித் தம்பிரான்களாய்த் தங்களைத் தாங்களே சினிமாவுக்குத் தகுதி வாய்ந்தவர்கள் என்று மனப்பால் குடிப்பதில் பயனில்லை. மற்றவர்களே அதை நிச்சயப்படுத்த வேண்டும்.

பின்னர், காமிரா முன் உங்கள் உருவம் செல்லுபடி யாகுமா? ஒலிக்கருவியில் உங்கள் குரல் தெளிவாகப் பதியுமா? இவற்றைச் சினிமா அநுபவமுடைய ஒருவரிடம் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

என்ன வேஷம் :—இம்மாதிரியான பீடிகைக ளெல்லாம் ஒருவாறு முடிந்த பிறகு, எத்தகைய வேடங்களை நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இயற்கை வேடங்களிலா? செயற்கை வேடங்களிலா? அல்லது இரண்டிலுமா? முன்னதைக் காட்டிலும், பின்னது கஷ்டமானது. இரண்டும் என்றால், நீங்கள் ஓய்வு ஒழிச்சலின்றி வேலை செய்ய வேண்டும்.

சினிமாவில் நடிப்பது இப்படித்தான் என்று, சில வார்த்தைகளில் கூறுதல் அசாத்தியம். முகவெட்டும், கண்ணடிப்பும், புன்னகையும், அங்க அசைவுகளும், நடைநொடி பாவனைகளும் ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டு உணர்ச்சிகளை வெளிப்படுத்த வேண்டும். பொதுவாகத் தன்னைத் தானே மறந்து நடிக்கப் போகும் பாத்திரமாகவே மாறிவிட வேண்டும். இதுதான் சிறந்த வழி.

நீங்கள் ஏதாவது உத்தியோகத்திலிருந்தால், அனுவசியமாக அதை விட்டு விட்டுத் திண்டாட வேண்டாம். சினிமா நடிப்பு என்பது மலை கல்லி எலி பிடிப்பது போன்ற அவ்வளவு கஷ்டமான காரியம். மிக மிகப் பொறுமை வேண்டும். ஓயாது உழைக்க வேண்டும். சலியாத முயற்சியும், தளராத ஊக்கமும், சிரிப்புக்கும் ஏளனத்திற்கும் அஞ்சாத திடச் சித்தமும் இருந்தாலொழிய வெற்றி பெற இயலாது.

கீழ்வரும் யோசனைகள் உபயோகமானவை.

முக ஆட்சி :—ஒரு கண்ணாடி முன் அமர்ந்து, உங்கள் இயற்கையான முகவடிவைச் சிறிது நேரம் உற்றுப் பாருங்கள். கண் பிறழாத பார்வை, அசைவற்ற சிலை போல் அந்த நிலையில் சிறிது நேரம் உட்கார்ந்திருக்க வேண்டும். அப்போது முகத்தில் உண்டாகும் சிறு சிறு நெளிவுகளையும், சுளிப்புகளையும் கவனிக்க வேண்டும். அவை நரம்புத் தளர்ச்சியால் ஏற்படுபவை. அவற்றை முதலாவது நீக்கிக் கொள்ளப் பாடுபட வேண்டும். முகத்தில் பல உணர்ச்சிகளையும் எழுதிக் காட்டுமுன், அதிலுள்ள கோணல் கிறுக்குகளை மாற்றிக் கொள்வது அவசிய மல்லவா?

முக பாவ விலாசம் :—சினிமா நடிப்பில் மிகவும் முக்கியமானது முக பாவமே. ஆகவே, நடிப்பு மாணவர்கள் இதைப்பற்றி மிகவும் அக்கரையோடு பயில வேண்டும். முதலாவதாகக் கண்ணாடி முன் அமர்ந்து குறுநகை செய்யுங்கள். அக் குறுநகை சிறிது சிறிதாய்ப் பெரு நகையாய் மாற வேண்டும். திடீரென்று கண்ணை அகல விரித்து, வாய் திறந்த ஆச்சரியப் பார்வையோடு நோக்குங்கள். பிறகு இந்த பாவத்தைப் பயத்தால் மிகுந்த ஆச்சரியமாகச் செய்யுங்கள். இவ்வாச்சரியம் வெறுப்புக் கலந்ததாக மாறட்டும்; சிறிது சிறிதாக நடுக்கத்தை முகத்தில் உண்டாக்கிக் கொள்ளுங்கள். மெல்ல உதடுகள் துடிக்கட்டும். கண்ணிமைகள் அடித்துக் கொள்ளட்டும். மெல்ல மெல்லப் புன்னகைக்கு இறங்கி விடுங்கள். இதையே மாற்றி மாற்றி மெதுவாகவும் வேகமாகவும் செய்து கொள்ளுங்கள். இவ்வப்பியாசத்தில் ஆறு உணர்ச்சி பாவங்கள் அடங்கியுள்ளன. இவை யாவும் நன்கு தெளிவாக்கப் பட வேண்டும். கண்களுக்கும், முகத்தின் தசைகளுக்கும் நல்ல பயிற்சி யளிக்க வேண்டும்.

பேச்சு :—பெரும்பான்மையான நடிகர்கள் பேசும்போது தங்கள் வாயிதழ்களை எவ்வாறு வைத்துக் கொள்ளவேண்டும் என்பதை அறிவதில்லை. சிலர் ஒரேயடியாகத் தங்கள் உதடுகளை மூடிக்கொள்ளுகின்றனர். சிலர் ஒரேயடியாகத் திறந்து கொள்ளுகின்றனர். இவை இரண்டும் தப்பு. கண்ணாடி முன் அமர்ந்து உயிர் மெய் எழுத்துக்களை ஒவ்வொன்றாகச் சொல்லிச் சொல்லிப் பழக வேண்டும். பின்னர் வார்த்தைகள். அப்புறம் சம்பாஷணை. தவிர, அவரவர் முக வெட்டுக் கேற்ப வாய்வெட்டும் காட்ட வேண்டும்.

நடை :—நடிப்பில் நடை மிகவும் முக்கியமானது. பல மாதிரி குணமுடைய மக்களின் நடை பாவனைகளை 'இமிடேஷன்' செய்து செய்து பழக வேண்டும்.

விழுதல் :—சினிமாவில் அடிக்கடி வெட்டப்பட்டு விழும் மரக்கட்டை போல் விழவேண்டி நேருகிறது. சிறிது அப்பியாசத்தின் மேல் இம்மாதிரியான வீழ்ச்சியினால் காயம் படாமல் செய்து கொள்ள முடியும். முதலில் படுக்கை விரிப்பின் மேல் செய்து பழகி, பின்னர்தான் தரையில் பழகவேண்டும். முதலில் விறைப்பாக, முழங்கால் மண்டியிட்டு, தரை மட்டமாக விழுந்து பழகவேண்டும்.

பொது :—பொதுவாக ஒவ்வொரு நாளும் சினிமாவுக்குப் போய் அக் கதையையும், நடிப்பு முறைகளையும் மனனம் செய்து கொண்டு, அம்மாதிரி யெல்லாம் நடித்துப் பழகுவது மிகவும் நலம். இவ்வாறு பலரையும் பார்த்துப் பார்த்துக் காப்பி யடிப்பதால், உங்களுக் கென்றே ஒரு நடிப்பு முறை ஏற்படும். அதற்குப் பிறகுதான் நீங்கள் சினிமாவுக்கு லாயக்காவீர்கள்.

குழந்தைகள் அறிவு:

வழக்காடுதல்

லியோ டால்ஸ்டாய்

விவசாயி.

அவன் மனைவி.

பாதிரி.

பெடார். } விவசாயியின் பிள்ளைகள்.
பேட்கா. }

விவசாயி: [குடிசைக்குள் நுழைந்து மூட்டை முடிச்சுகளைக் கீழேவைத்துக்கொண்டு] அப்பாடா! என்ன வெயில்! நான் அங்கே போவதற்குள் பிராணன் போய்விட்டது.

மனைவி: ஆமாம்; அது ரொம்பத் தூரமல்லவா! பதினைந்து மைல்கள் இருக்குமே!

விவசாயி: பதினைந்தாய்ப் போவானேன்; இருபது மைல். (பெடாரை நோக்கி) போ; குதிரையை அவிழ்த்து லாயத்தில் கட்டு.

மனைவி: சரி; தீர்ப்பு நமக்குச் சாதகந்தானே?

பாதிரி: என்னவிஷயம்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!

விவசாயி: சொல்லுகிறேன்; இதுதான் சமாசாரம். என் வீட்டுக் கொல்லையை அவெர்யான் அபகரித்துக் கட்டிக்கொண்டான். தன்னுடையது என்கிறான். என்னால் இந்த விவகாரத்தைத் தீர்த்துக்கொள்ள முடியவில்லை.

மனைவி: இதற்காக இரண்டு வருஷமாய்க் கோர்ட்டில் வழக்காடி வருகிறோம்.

பாதிரி: அது எனக்குத் தெரியும். போன ஈஸ்டருக்கு முன் உள்ளூர்க் கோர்ட்டில் கூட விசாரணை நடந்ததே. அப்போது உனக்குச் சாதகமாய்த் தீர்ப்பானதாக அல்லவா கேள்விப்பட்டேன்?

விவசாயி: ஆமாம்; அப்படித்தான் தீர்ப்பாயிற்று. ஆனால், நில காப்டன் என்ற அதிகாரிக்கு அவெர்யான் மனுப் பண்ணிக்கொண்டான். அவர் புனர் விசாரணைக்கு உத்திரவு போட்டுவிட்டார். ஆகையால் நான் ஜட்ஜிகளிடம் போனேன். அவர்களும் எனக்குச் சாதகமாகவே தீர்ப்புச் செய்தார்கள்; அதோடு விவகாரம் தீர்ந்திருக்கவேண்டும். ஆனால், இப்போது புனராலோசனைசெய்து, கொல்லையை அவெர்யானுக்குக் கொடுத்துவிட்டார்கள். என்ன அற்புதமான ஜட்ஜிகள், பாருங்கள்!

மனைவி: அப்படியானால், இனி என்ன செய்வது?

விவசாயி: என் சொத்தை அவன் அபகரித்துக்கொள்ள நான் விடப்போவதில்லை. மேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப் போகிறேன். அதற்காக ஒரு வக்கீலையும் அமர்த்தி வந்திருக்கிறேன்.

பாதிரி: சரிதான். ஆனால், மேல் கோர்ட்டும் அவனுக்குச் சாதகமாய் முடிவு செய்து விட்டால்?

விவசாயி: அதற்கும் உயர்ந்த கோர்ட்டுக்குப் போவேன். என்னிடம் உள்ள பசுமாடுகூட மிஞ்சாமல் சகலத்தையும் விற்கவேண்டி வந்தாலும் சரி, அந்தப் பருத்த தொந்திப் பிசாசிடம் என் சொத்தை நான் விடப் போவதில்லை. யாரிடம் தான் சீண்டுகிறான் என்றுணரும்படி அவனுக்குப் பாடம் கற்பிக்கிறேன்.

பாதிரி: இந்த ஜட்ஜிகள் தான் என்ன பீடைகளாயிருக்கிறார்கள்—நிஜமாகவே பீடைகள் தான்! ஆனால், அவர்களும் அவனுக்குச் சாதகமாய்த் தீர்ப்புச் செய்துவிட்டால்?

விவசாயி: ஜாரிடம் செல்கிறேன்........குதிரைக்குப் புல் போடவேண்டும்; நான் போகிறேன். [வெளியே செல்கிறான்]

பேட்கா: ஜாரும் நமக்கு விரோதமாய் முடிவு செய்துவிட்டால், அப்புறம் யாரிடம் செல்வது?

தாய்: ஜாருக்கு மேல் ஒருவரும் கிடையாது.

பேட்கா: ஏன் ஜட்ஜிகளில் சில பேர் அவெர்யான் பக்கமும் மற்றவர் அப்பா பக்கமும் தீர்ப்புச் செய்கிறார்கள்?

தாய்: அவர்களுக்கே என்ன செய்வதென்று தெரியவில்லைபோலிருக்கிறது.

பேட்கா: அப்படியானால், அவர்களுக்குத் தெரியாத விஷயத்தை அவர்களிடம் நாம் ஏன் போய்க் கேட்கவேண்டும்?

தாய்: ஏனென்றால், ஒருவரும் தனக்குச் சொந்தமான பொருளைப் பிறருக்கு விட்டுக் கொடுக்க இஷ்டப் படுவதில்லை.

பேட்கா: நான் வளர்ந்து பெரியவனாகும் போது, என்ன செய்யப் போகிறேன் தெரியுமா? யாரிடமாவது ஏதாவது எனக்கு விவகாரம் வந்தால், திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்ப்பேன். அகுல்காவோடு வேற்றுமை வந்தால், நான் எப்போதும் இப்படித்தான் செய்து வருகிறேன்.

பாதிரி: வாஸ்தவம்; அது தான் மிகச் சிறந்த வழியென்று தோன்றுகிறது! அப்படி முடிவுசெய்வதிலே பாவமே வராது.

தாய்: ஆமாம். அந்தத் துண்டு நிலத்துக்காக என்ன செலவு செய்துவிட்டோம்—அதன் விலைக்குமேல் போய்விட்டது! ஆமாம், அது பாவந் தான்—பாவம்!

எங்கள் பிரயாணம்

ஆர். கோதண்டபாணி

சென்னை ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் மாணவர்கள் சமீபத்தில் ஒரு உல்லாசப் பியாணம் செய்தார்கள். அப்போது தாங்கள் கண்ட காட்சிகளை, இந்த ஐந்தாம் பார மாணவன் தொகுத்து எழுதிய இந்த ரஸமான குறிப்புகள் யாருக்கும் பயன்படக் கூடியவை.

உபாத்தியாயர்களும் பழைய, புதிய மாணவர்களுமாகச் சுமார் 400 பேர் இந்தப் பிரயாணத்தில் சேர்ந்துகொண்டோம். அன்று புதன்கிழமை. நாங்கள் பீச் ஸ்டேஷனுக்கு பகல் 2-30 மணிக்குச் சென்றோம். அங்கே ஒரே திரளான கூட்டம் கூடியிருந்தது. சுமார் 3000 பேர் இருந்திருப்பார்கள். பீச் ஸ்டேஷனிலே ஒரு திருவிழா நடந்தாற்போல் எனக்குத் தோன்றிற்று. நாங்கள் எல்லோரும் எங்கள் எங்கள் பெட்டிகளுக்குச் சென்று ஏறிக்கொண்டோம். பெற்றோர்கள் தங்களது புதல்வர்கள் இருக்கும் பெட்டிகளுக்குச் சென்று பேசுவதும், சிரிப்பதும், புத்திமதிகள் கூறுவதும், பணம் தருவதும், சிலர் பேசாமல் இருப்பதும், மற்றுஞ் சிலர் 'இதை வாங்கிக்கொண்டுவா, அதைக் கட்டாயம் வாங்கி வா' என வார்த்தை யாடுவதுமாயிருந்தனர். ரயிலும் 3-மணிக்குப் புறப்பட்டது. எங்கள் தலைமை உபாத்தியாயர் ஆனந்த மிகுதியால் தமது தலையை வண்டிக்கு வெளியே நீட்டி எல்லோருக்கும் அஞ்சலிசெய்து விடை பெற்றார். ஆனால், பக்கத்தில் ஓர் கம்பம் வந்தது. "தலையை உள்ளுக் கிழுங்கள்" என்று, ஸ்டேஷனி லிருந்தோர் கூச்சலிட்டார்கள். தலைமை உபாத்தியாயர் தலையும் தப்பியது. ஆனால், செங்கற்பட்டுக்கு அருகே ஒரு சிறு விபத்து நேர்ந்தது. எங்கள் ரயில் ஒரு கழுதைமீது ஏறிவிட்டது!

அடுத்த நாள் மணியாச்சி, திருநெல்வேலி ஆகிய ஊர்களைக் கடந்து, திருச்செந்தூர் போய்ச்சேர்ந்தோம். அங்குள்ள மக்களின் பேச்சும் நடையுடை பாவனைகளும் சென்னையி லுள்ளது போல் இல்லாமல் மாறுபட்டிருந்தன. நாங்கள் முதலில் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்குச் சென்றோம். அங்கே சமுத்திரம் கோயிலை மோதிக் கொண்டிருக்கிறது. நாங்கள் எல்லோரும் குளிப்பதற்காகச் சமுத்திரத்தில் இறங்கினோம். ஆ! என்ன ரம்யம்! சில பிள்ளைகள் சிரிப்புடன் குளிப்பதும், சிலரை உபாத்தியாயர்கள் நிர்ப்பந்தமாய்க் குளிக்க வைப்பதும், சிலர் குளித்துத் தங்களது சவுக்கங்களைக் கொடை போல் பிடித்து உலரவைப்பதும், சிலர் வேஷ்டிகளை அணிவதும் இவ்விதமாகக் கொஞ்ச நேரம் கழிந்தது. பிறகு எல்லா மாணவர்களும், அங்கு எழுந்தருளி யிருக்கும் ஆறுமுக வேலனை வணங்கச் சென்றோம். கோயில் மிக உறுதியான கருங்கல்லால் கட்டப்பட்டிருக்கிறது. கவர்ச்சி மிக்க அநேக சித்திரங்கள் கோயிற் சுவர்களில் செதுக்கப்பட்டுள்ளன. அவ்வாலயம் மிகப் பழமையான தாகும். கோயிலின் தர்மகர்த்தா, எங்கள் எல்லோரையும் உட்காரவைத்து ஸ்தலத்தின் விசேஷத்தை விளக்கிச் சொன்னார்; மேலும், முருகனது கவசத்தையும், நவரத்தினத்தினால் மிக அழகாய் ஆக்கப்பட்டிருந்த வேலாயுதத்தையும், பொன்னால் செய்யப்பட்ட சேவலையும் காண்பித்தார்.

அங்கிருந்து புறப்பட்டு, ஆழ்வார் திருநகரியை அடைந்தோம். அங்கே ஒரு பக்கத்தில் நம் முன்னோர்களால் கட்டப்பட்ட இடிந்த கோயில்கள் தென்படுகின்றன. மற்றோர் பக்கத்தில் பழைய காலத்துப் பாழடைந்த மண்டபங்களும் வீடுகளும் காண்கின்றன. வேறோர் திசையில் கல்லிலே செதுக்கப்பட்ட புராதன ரதங்கள் காட்சி யளிக்கின்றன. மற்றுமோர்புறம் சிற்ப உருவிலே வானரப் படைகள் நிற்கின்றன. இன்னொரு பக்கத்தில் புன்முறுவல் பூத்த இளமாதர்களின் சிலைகள் கொஞ்சுகின்றன. அது வைஷ்ணவ க்ஷேத்திரம். ஆனதினால், எங்கே பார்த்தாலும் நாமங்கள் பொலிகின்றன. அங்கேதான் வைஷ்ணவ ஆழ்வார்களிலே சிரேஷ்டரான நம்மாழ்வார் அவதரித்து, வாழ்ந்து, பரமபதம் அடைந்தார். நாங்கள் அச்சிறு கிராமத்தி லுள்ள கோவிலுக்குள் சென்றோம். கோயிலிலே முதலில் ஆதிநாயகியும் அவளுக்கு எதிர்ப்புறத்தில் துர்க்காதேவியும் எழுந்தருளி யிருக்கிறார்கள். கோயிலின் சுற்றுப்புறம் ஏறக்குறைய ஒரு மைல் நீளம் இருக்கும். உட்புறத்தில் ஒரு படிக்கட்டு இருக்கிறது. அதன் வழியே மேலே சென்றால், ஓர்புளியமரம் தென்படுகிறது. அந்தப் புளியமரம் இரண்டு பிளவாகப் பிளந்திருக்கிறது. அந்தப் மரத்தின் இலைகள் இரவில் மூடிக் கொள்வதில்லையாம்! அதன் பட்டையைக் கிள்ளினால் ரத்தம்போல் ஓர் நீர் வழிகிறது. இது ஓர் ஆச்சர்யம். அந்தத் திருப் புளியமரத்தின் கீழேதான் நம்மாழ்வார் தவம் புரிந்து பகவான் திருவடிகளை அடைந்தாராம். அந்தப் புளியமர இலைகளை வீட்டில் வைப்பது அதிர்ஷ்டமாகும் என்று சொன்னார்கள். நாங்கள் எல்லோரும் அந்த இலைகளில் கொஞ்சம் கொஞ்சம் வாங்கிக் கொண்டோம். கோயிலின் முற்றத்தில் ஓர் வீரன் ரதம் செலுத்துவது போல் கருங்கல்லில் செதுக்கப்பட் டிருக்கிறது. அழகழகாகவும், வித விதமாகவும், ஆச்சரியப்படத்தக்கனவாகவும் உள்ள பல சித்திரங்களும் அவ்விடத்தில் வரையப்பட் டிருக்கின்றன.

மீண்டும் திருநெல்வேலிக்குத் திரும்பி வந்து, அங்கிருந்து குற்றாலத்துக்குப் போனோம். இயற்கை யழகு அங்கே சிறந்து பொலிகிறது. செங்குத்தான உயர்ந்த மலையொன்று அங்கே நிற்கிறது. அம்மலையின் உச்சியில் சிறு கால்வாய் போல் குற்றால நீர்வீழ்ச்சி தென்படுகிறது. பின்பு அது ஒரு பாறையின் அடியில் சென்று இரண்டாகப் பிரிகிறது. அதன் பிறகு பல கிளைகளாகச் சிதறுகிறது. அந்தக் கிளைகள் பிரம்மாண்டமாகப் பார்ப்போர் கண்களுக்குத் தோன்றுகின்றன. அந்தக் காட்சியைப் பார்க்கையில் மனம் கலங்குகிறது. எல்லோரும் இந்த இடத்தில் குளிப்பதற்கேற்றவாறு கம்பிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே எண்ணெய் தேய்த்துக்கொள்ளாமல் ஸ்நானம் செய்ய முடியாதென்று சொல்லி, எங்கள் எல்லாருக்கும் எண்ணெய் கொடுத்தார்கள். ஆனால், சிலர் 'எண்ணெய் தேய்த்துக் கொள்ளாமல் குளித்தால் என்ன ஆகிறது, பார்ப்போம்' என்று வீம்புபேசி, பரீட்சை செய்தார்கள். பாவம்! தண்ணீரின் வேகம் அவர்களது தலைகளில் யாரோ கற்களை எறிந்தூ ரகளை செய்வதுபோல் தோன்றிற்று! ஒருபுறம் யாரோ சில பைத்தியக்காரர்களைக் கொண்டுவந்து குளிப்பாட்டிக் கொண்டிருந்தார்கள். பைத்தியம் தீருமென்ற நம்பிக்கைபோ லிருக்கிறது. பைத்தியங்கள் குளித்த காட்சி மிக வேடிக்கையா யிருந்தது. நீர்வீழ்ச்சியின்

அடியில் ஒரு விநாடிகூடக் கால் பாவி நிற்க முடியவில்லை. சதா மழை பெய்வதுபோல் ஒரு சப்தம் அங்கே கேட்டுக்கொண்டே யிருக்கிறது. ஜலம் எங்கிருந்து வருகிறது என்று அங்கே யிருப்பவர்களுக்குக் கூடத் தெரியவில்லை. ஜலம் பனி நீர்போல் குளிர்ச்சியா யிருக்கிறது. நீர்வீழ்ச்சியில் ஸ்நானம் செய்து முடிந்ததும், பக்கத்திலே யுள்ள மௌன குரு ஆலயத்துக்குச் சென்று நாங்கள் வணங்கினோம்.

திருக் குற்றாலத்தை விட்டு ஸ்டேஷனுக்கு வந்து ரயிலில்திருவனந்தபுரத்துக்குப் பிரயாணமானோம். இங்கிருந்துதான் மேற்குத் தொடர்ச்சிமலையின் ஒரு கிளையான ஏலக்காய் மலை பிரிய ஆரம்பிக்கிறது. மலையைக் குடைந்த கணவாய் வழியாக எங்கள் ரயில் செல்லப் போவது பற்றி மாணவர்களுக்கெல்லாம் ஆனந்தம். ரயில் கொஞ்சதூரம் சென்ற பின்னர், மெதுப்பட்டு மெல்ல நகரத் தொடங்கியது. மலைப் பாறைகள் ஒட்டைச் சிவிங்கியின் கழுத்தைப்போல் நீட்டிக்கொண் டிருந்தன. ஒரு பக்கத்தில் அடர்ந்த காடுகள் ; மறுபக்கத்தில் பாதாளம் போன்ற பள்ளம்! ஓர் இடத்தில் சிற்றாறுகள் ; மற்றோர்புறம் அருவிகளின் சப்தம்! அந்த இயற்கைக் காட்சியை வர்ணிக்குந் தரமன்று. இப்படிப் பல குன்றுகளுக்கும் பள்ளத்தாக்குகளுக்குமிடையே வளைந்து சென்ற எங்கள் வண்டி, கடைசியில், மலையைக் குடைந்த கணவாய்க்குள் புகுந்தது. ஒரே இருள்! வெளியே ஒன்றும் தெரியவில்லை. ஒரு மைல் நீளமாம் அந்தக் குகை! மகா வேகமாய்ச் சென்றது எங்கள் வண்டி. அதன் அதிர்ச்சியும் மாணவர்களின் ஆரவார எதிரொலியும் ஒன்றுசேர்ந்து, கொந்தளித்த கடலின் பேரிரைச்சல் போலிருந்தது. இதை யன்றி மேலும் மூன்று குகைகள் வந்தன. இந்தப் பாதையில் ஓர் இடம் மிகக் கவர்ச்சியா யிருந்தது. அடியில் புனலூர் ஆறு, மேலே மோட்டார்ச் சாலை, அதற்கும் மேலே ரயில் பாதை! பக்கத்திலே அண்ணாந்து நிற்கிறது ஓர் அழகான மலை.

கொல்லத்திலே அரபிக் கடலைப் பார்த்துவிட்டு, திருவனந்தபுரம் போய்ச் சேர்ந்தோம். அங்கே மிருகக் காட்சியையும் பொருட் காட்சியையும் பார்த்தோம். இந்நகரின் மிருகக் காட்சிச்சாலை, சென்னை மிருகக் காட்சிச்சாலையை விடப் பன்மடங்கு பெரிசா யிருக்கிறது. பொருட் காட்சிச்சாலையில், எவர் மனத்தையும் கொள்ளை கொள்ளக்கூடிய பல சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இந்நகரைப் பார்த்துவிட்டு, இங்கிருந்து, கன்யாகுமரி முனைக்கு, பஸ்களிலே புறப்பட்டோம். திருவனந்தபுரத்திலிருந்து கன்யாகுமரிக்கு 54 மைல் தூரம் இருக்கிறது.

வழியிலே நாகர்கோவிலில் சற்றுத் தங்கிவிட்டு, இரவு குமரி முனையை அடைந்தோம். மறுநாட் காலை சமுத்திர ஸ்நானம் செய்யப் போனோம். கடற் காட்சி மகா அருமையா யிருந்தது. குமரி முனையில் மூன்று கடல்கள் சங்கமமாகின்றன ; கிழக்கில் வங்காள விரிகுடாவும், தெற்கில் இந்துமகா சமுத்திரமும், மேற்கில் அரபிக்கடலும் வந்து மோதுகின்றன. சூரியன் கடலிலே உதயமாகி, கடலிலேயே அஸ்தமிப்பதை, உலகிலேயே மிகச் சில இடங்களில்தான் காண முடியுமாம். அப்படிப்பட்ட அபூர்வ ஸ்தங்களில் குமரிமுனையும் ஒன்றாகும். இங்கே கடலுக்கு நடுவே அங்கங்கே குன்றுகள் முளைத்து நிற்கும் காட்சியும் விநோதமா யிருந்தது. மூன்று கடல்களும் கூடும் முனையிலே நாங்கள் ஸ்நானம் செய்தோம். பிறகு, எங்களில் பல மாணவர்கள், அங்கே கிடைக்கும் கிளிஞ்சல்கள், சங்குகள், சோழிகள் முதலியன வாங்கினார்கள். அதன் பின்னர், 'நீலக் கடல்திரை யோரத்திலே நித்தம் தவம் செய் குமரி அன்னை'யாய்க் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பராசக்தியின் ஆலய தரிசனத்துக்குச் சென்றோம். அவ்வாலயத்துக் குள்ளே, மனங்கவரும் பற்பல சித்திரங்களைக் கண்டோம்.

கன்யாகுமரிக்குப் பிறகு, சுசீந்திரத்துக்குப் போனோம். அங்கே ஆறுகளில் தண்ணீர் இல்லை. சுசீந்திரநாதர் ஆலயத்துக்குச் சென்று தரிசித்தோம். அந்தக் கோயில் தூண்கள் கருங்கல்லால் செய்யப்பட்டிருந்தும், தட்டினால் வெண்கலம் மாதிரி சத்தம் கேட்கிறது. சுசீந்திரத்தில்தான் சதி அனசூயை தனது கற்பின் மேன்மையை நிரூபித்தாளாம். இங்கேயுள்ள கற்சிலை ஹனுமானும் நந்தியும் மிகப் பெரியவை. அப்படி யிருந்தும் ஒவ்வொரு சிலையும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறது. அடுத்தநாள் மீண்டும் திருவனந்தபுரம் சென்றோம். அந்நகரில் அவரவருக்கு விருப்பமான இடங்களுக்குச் சென்று, அந்நகரின் விசேஷப் பொருள்களான தந்தச் சாமான்கள், படங்கள், துணிமணிகள் முதலியன வாங்கினோம். மாலையில் அனந்த சயன பத்மநாபனை வணங்கினோம்.

திரும்பு காலையில் அழகான வர்க்கலைப் புஷ்கரணியில் ஸ்நானம் செய்தோம். பின்னர், ஜனார்த்தன மடைந்து, பகவான் ஜனார்த்தனரைத் தரிசித்தோம். இந்தக் கோயிலை ஒரு பாண்டியன் தனது பிரம்மஹத்தி தோஷம் தீர்வதற்காகக் கட்டினானும். பின்னர், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாளை ஸேவித்தோம். அங்கிருந்து நேரே திருச்சி வழியாய்ச் சென்னைக்கு வந்து சேர்ந்தோம். எங்கள் பிரயாணம் நிர்விக்கினமாய் அழகாய் நடந்ததுபற்றி ஆண்டவனுக்குப் பிரார்த்தனை செய்துவிட்டு, அவரவர் வீடுகளுக்கு விரைந்தோம்.

போர்க்கள மரியாதை

'போர் முனையிலே ஒப்பாரியாவது!' என்று பழமொழி சொல்வார்கள். ஆனால் போர் முனையில் சிலசமயம் இது நடந்து விடுவதுண்டு. நடந்தால், அதுவே மகா உருக்கமான சம்பவம்.

1745-ஆம் ஆண்டு பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் நடந்த பாண்டினாய் யுத்தத்தின்போது, "நீங்களே முதலில் சுடுங்கள் ; அப்புறந்தான் நாங்கள் சுடுவோம்" என்று பிரஞ்சுக்காரரை ஆங்கிலேயர் அழைத்தார்கள்.

"இல்லை ; நீங்களே முதலில் சுடுங்கள்" என்று சொல்லிச் சும்மாவிருந்தார்கள் பிரஞ்சுக்காரர்கள்.

கொஞ்ச நேரம் வரை இந்த மரியாதைப் பரிமாற்றம் நடந்தது. கடைசிவரையில் பிரஞ்சுக்காரர் மசியவில்லை. இங்கிலீஷ்காரர் சுட ஆரம்பித்து, 50 உத்தியோகஸ்தரையும் 760 வீரரையும் கொன்ற பிறகுதான், பிரஞ்சுக்காரரும் பதிலுக்குச் சுடத் தொடங்கினார்கள்!

பாரத சக்தி மஹாகாவியம்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

௧௫. பொறுமைப் படலம்

நன்மையுந் தீமையு நட்புஞ் சண்டையும்,
புன்மையும் பெருமையும், புகழும் வீழ்ச்சியும்,
இன்மையும் உண்மையும் இருவகை மனத்
தன்மையின் பரிசெனச் சாற்று வாமரோ!

உலக வாழ்வில் நன்மை தீமை, நட்பு பகையால் விளையும் போர், அற்பத்தனம், பெருந்தன்மை, புகழ், நிலைகெட்டு வீழ்ச்சியடைதல், சொத்து சுகமில்லாத வறுமை, வேண்டியதெல்லாம் உளவாகும் செல்வச்செழிப்பு இவையெல்லாம் அவரவர் மனத்தின் இயல்பைப் பொறுத்து வருவன. மனம், நலம் தீது ஆகிய இரண்டு வகையானது. ஆதலால், உலகில் மாந்தர்நிலையிலும் நன்மையும் தீமையும் கலந்து வருகின்றன. மனம போல மங்கலம். மனமே மனிதன். மனத்தால் எது நினைத்தோமோ அது செயலாகும். நாம் வாழ்வதும் தாழ்வதும் நமது மனமே நமக்குத் தரும் பரிசு, நமது நினைப்பின் பலன். இந்த உண்மையை உலகிற்குச் சொல்லுவோம். ௨௬௦

நல்லது நினைத்திடின் நன்மை யாகிடும்;
அல்லது நினைத்திடின் அல்ல லாகிடும்;
இல்லதும் உள்ளதும் இம்மை யம்மையும்,
செல்வதும் வருவதும் நினைப்பின் செய்கையே.

மனத்திலிருந்து நினைப்பு (சங்கற்பம்) உண்டாகிறது. நல்லன நினைத்தால் நமக்கும் பிறருக்கும் நன்மை விளைகிறது. தீமை நினைத்தால் அந்த நினைப்புச் சுழல் சுற்றிலும் பரவித் தீமை விளைக்கிறது; அல்லல் செய்கிறது. உலகில் நினைப்பினாலேதான் உள்ளவை உள்ளன. மற்றவை நீங்குகின்றன. நினைப்பினாலேதான் இகபர சுக துக்கங்கள் உண்டாகின்றன. நினைப்பே விண், மண், பந்தம், விடுதலை, சுவர்க்கம், நரகம் எல்லாம். நினைப்பினாலேதான் ஜீவன் பிறப்பிற்கும் இறப்பிற்கும் போக்குவரவு செய்கிறது. உலகத்தில் உண்டான கலையற்புதங்களெல்லாம் நினைப்பின் செயலே. உயிர்கள் வளரும் காதல் சக்தியும் நினைப்பின் செயலே. ௨௬௧

பழிப்பறு புகழ்பெறும் பரத நாட்டிலே,
செழிப்புறு சித்தியின் சீர்த்தி யாவையும்
அழிப்பனென் றெழுந்தனன் அகந்தை கொண்டொரு
முழுப்பதர் கலியனும் மோகி கேள்வனே.

பாரதநாடு பழிப்பற்ற புண்ணிய பூமி. அதில் செழிக்கும் சித்தி மரபு செங்கோலால் எங்கும் புகழ் பெற்றது. அதன் சீர்த்தியெல்லாம் அடியோடு அழிக்க ஒருவன் எழுந்தான். அவன் நினைப்பெல்லாம் 'யான் எனது' என்னும் அகங்காரம் நிறைந்தது. அவன் சுத்தப் பதர்; பெயர் கலியன்; மோகியென்னும் அரக்கியின் கணவன். ௨௬௨

விடந்தரு நோயென, வேந்தன் சத்தியன்
உடன்பிறந் தானவ னுடன்பொ றாமையும்
இடர்செயுந் தீமையும் இகலும் வெம்மையும்
படர்ந்தன புதருடன் பாம்பு மென்னவே.

நஞ்சாகிய நோய் நமது உடலிலிருந்தே நம்மைக் கொல்லுகிறது. அதுபோலவே இந்தப் பதர் கலியன், சத்திய ராஜனுக்குத் தம்பியாகப் பிறந்தான். பொறாமை, பிறருக்குக் கெடுதலே செய்யும் தீயகுணங்கள், நல்லோரை வெறுக்கும் பகை, இரக்கமற்ற கொடுமை முதலியனவும், புதருடன் பாம்பு போல், அவனது பொல்லா மனத்தில் அடர்ந்தன. ௨௬௩

வாளெனப் பாய்வது; வஞ்சந் தீர்த்திட
நீளெரி புகுந்தென நெஞ்சில் வேவது;
கோளினை யுயிர்ப்பது; கொடுமை செய்துபின்
ஆளினை யுண்பது பொறாமை யாகுமே.

பொறாமை ஒரு தீய நோய். அது பிறர் நலத்தைக்கண்டு பொறுக்காது. அது ஆசை யாணவம் கொதிக்கும் நெஞ்சில் வாள்போலப் பாயும். எதிரியைக் கெடுத்து, வஞ்சந் தீர்க்க நீண்ட காலாக்கினிபோல் புகுந்து, நெஞ்சில் வேகும் தன்மை யுடையது. குண்டுணிகள் சொல்லும் கோள்களால் அது பெருகி உயிர்த்திருப்பது. பல சூழ்ச்சிகளால் எதிரிக்குக் கொடுமைகள் செய்து, முடிவில் ஆளையே உண்டுவிடும். அப் படிப்பட்ட தீமை பொறாமையாகும். ௨௬௪

திசைதொறும் அண்ணலின் சீர்த்தி கேட்டுளம்
பிசைதுயர் கொண்டவன், பிள்ளை சுத்தனின்
இசையினைக் கேட்டதும் எரி மிகுந்தனன் ;
விசையினில் இவர்களை வீழ்த்த வெண்ணினன்.

எட்டுத் திசையிலும் அவனுடைய தமையன் சத்தியன் புகழ் பரவியிருந்தது. அதைக் கேட்கக் கேட்க அவன் தனது நெஞ்சைப் பிசைந்துகொண்டு பெருந்துய ரெய்தவான். அண்ணன் வாழக்கண்டால் தம்பிக்கு உள்ளத்தை முறுக்கிப் பிழிவதுபோல் இருக்கும். அத்துடன் சத்தியன் மரபு விளங்க ஒரு சுத்தன் பிள்ளையாகப் பிறந்தான். அவன் சாமானியப் பிள்ளை யல்லன். எங்கும் தனது தெய்வ வீரத்தால், அறி வாற்றல்களால், இசைபெற்ற பிள்ளை. அதைக் கேட்டதும் "ஐயோ, நமது எண்ணம் மண்ணானதே!" என்று எரிச்சல் அதிகமாகி, விரைவாக இந்த இருவரையும் வீழ்த்தி நாட் டைக் கைப்பற்ற எண்ணினன். ௨௬௫

வலிகொளும் சித்தியின் மரபைக் கண்டதும்
கிலிகொளு நெஞ்சினன், கேடு சூழவே
புலிகொளும் புதரெனப் பொல்லர் வாழ்ந்திடும்
கலிநகர் கண்டனன் காலன் அஞ்சவே.

சுத்தன் பிறந்ததால், சித்திமா மரபு பலமாக வேரூன்றி வலிமை பெற்றது. அதைக் கண்டு கலியன் நெஞ்சிற் கிலி பிறந்தது. சுத்தனை நினைக்கும்போதே அவன் உள்ளம் அஞ்சி நடுங்கியது. அவனுக்குக் கேடு சூழவே அவன் கொடியர் படை சேர்த்தான்; கலிநகர் என்றொரு பெரிய நகரத்தை அமைத்தான். அந்த நகரம் ஒரு சூழ்ச்சிப் புதர் போன்றது. அதில் பொல்லாத கொடியர் புலிபோலப் புகுந்து அவனுடன் வசித்தனர். அந்த நகரையும், கலியனையும், அவன் படைகளை யும் கண்டு எமன்கூட அஞ்சினன். ௨௬௬

இந்திர சாலங்கள் இருட்பொய் வித்தைகள்,
மந்திர மாயங்கள் மாறு பாடுசெய்
தந்திரச் சூதெலாந் தரும நீதியைத்
தொந்தரை செய்திட, துணிந்து வீழ்ந்தவே.

கலியன் மந்திரவாதிகள், சூனியக்காரர்கள், கொலையாளி கள் முதலியோரை ஏவி, சுத்தனையும் சத்தியனையும் கெடுக்கப் பார்த்தான். இவர்கள் செய்த இந்திர சாலங்கள், காசு பறிக் கும் பொய்யான குப்த வித்தைகள், அஞ்ஞானத்தால் செய்யும் சூனிய வித்தைகள், மந்திரம்போட்டுப் புத்தியை மயக்க முயன்ற மாயங்கள், காரியங்களுக்கு எதிர்செய்யும் தந்திரமான சூழ்ச்சிகள் இவை யனைத்தும், தரும நீதியே அவதாரமான சுத்தனையும் சத்தியனையும் தொந்தரைசெய்யத் துணிந்தன. ஆனால் அவற்றின் பாய்ச்சல் பலிக்கவில்லை. எல்லா மாயங் களும் வீழ்ச்சி யடைந்தன. ௨௬௭

இணைகரும் பூனையின் எரி விழிகளும்,
பணியுடன் காகமும், பச்சை யோந்தியும்
பிணங்களின் மூளையும் பெண் கருக்களும்,
புணைகரு மைசெயப் புகுந்துந் தோற்றனன்.

சத்தியனையும் சுத்தனையும் வசப்படுத்திக் கொள்வதற் காக, கலியன் பில்லி சூனியம் வைத்தான்; வசிய மைகள் செய்தான். அந்த மைகளில் இரவில் தீபம்போலக் காந்தும் கரிய ஜோடிப் பூனைகளின் விழிகள், ஜோடிப் பாம்பின் வீரியம், அண்டங்காக்காய்த் தலைகள், பச்சையோந்தி, பிணங் களின் மூளைகள், இறந்த பெண்களின் கருக்கள் ஆகிய எல் லாம் சேர்ந்தன. இப்படி எல்லாம் இடுமருந்துகள் செய்தும் ஏவல் விட்டும் அவனது சூழ்ச்சி பலிக்காமல் தோற்றான். ௨௬௮

கலியன்

கருவினைக் கலைத்திடக் கருவினை செய்தேன்
உருவினைக் குலைத்திட, வுளத்தை மாற்றிடப்
பெருநிணப் பேய்களை ஏவினே னந்த
ஒருவனைச் சிறுவனை உம்ப ரேற்றவே.

அந்த ஒருவன் சிறுவன் சுத்தன்-அவன் என் கண்களில் உறுத்துகிறான். அவனை ஒழித்து மேலுலகிற்கு அனுப்ப எவ்வளவோ சூழ்ச்சி செய்தேன் : இந்திரையின் கருவைக் கலைக்க மருந்து வைத்தேன், சூனியஞ் செய்தேன். பிள்ளை பிறந்ததும் அதன் உருவைக் குலைக்க முயன்றேன் ; பையன் சுத்தனின் உள்ளத்தைக்கெடுத்துப் புத்தியைக் கலக்கிப் பித்தனாக்க முயன்றேன் ; பேய்களை உபாசித்தேன் ; அவற்றிற்கு ஏராளமான மதுமாமிசங்களைத் தந்தேன் ; ஏவினேன். ஐயோ ஒன்றும் அந்தச் சிறுவனைத் தாக்கவில்லையே! உசுக

ஆளத்தான் உலகினை அண்ண னுக்குப்பின்
நீளத்தான் கருதிய நெஞ்சம் புண்ணுற்றேன் ;
மூலத்தான் வந்தனன் ; மூன்று லோகமும்
வாழத்தான் வாழ்ந்தனன். வயிறு வேகுதே!

என் அண்ணன் சத்தியனுக்குப் பிள்ளை யில்லை. வயதாயிற்று. இனி இந்திரைக்கு மகப்பே றுண்டாகாது. இவருக்குப் பிறகு நானே சித்தி யாசை ஆளுவேன்" என்று நீண்ட காலம் நீண்ட கனவுகண் டெண்ணினேன். அப்படி யெண்ணிய நெஞ்சம் புண்ணானது. சுத்தன் மூலநட்சத்திரத்தில் பிறந்தான். 'ஆண்மூலம் அரசாளும்' என்பர். அவன் இல்வுலகு, நடுவுலகு, விண்ணுலகு ஆகிய மூன்றும் சேமமாக வாழவே வந்து வாழ்கிறான். இதைக் கண்டு எனது வயிறு எரிகிறதே...! பொறுமை, பொறுமை! உஎ0

தேனெனப் பேசிய தீய சூனியர்,
ஊன்மது வுண்டவன் உயிரை உண்கிலார்
யானினி யென்செய்வேன் ; அடவிப் பேய்க்குலம்
ஏனெனை யேளனம் செய்த! வஞ்சமே!

கொடிய சூனியக்காரர்களுக்கு ஏராளமான பணம் கொடுத்தேன். அவர்கள் எல்லாம் "தங்கள் விருப்பப்படியே செய்கிறோம்" என்று தேன்போல இனிமையாகப் பேசினர். என்னிடம் புலாலும் கள்ளும் ஏராளமாக வாங்கி யுண்டனர். அந்த ஒருவனது, உயிரைப் போக்க அவர்களால் முடியவில்லையே! நான் சுடுகாட்டுப் பேய்களை யெல்லாம் உபாசித்தேன் ; அவற்றை மந்திரவாதிகள் மூலம் ஏவினேன். அவை சுத்தனை ஒன்றுமே செய்யவில்லை. "அட பைத்தியக்காரா, அவனிடம் உனது சூழ்ச்சி பலியாது!" என்று என்னையே ஏளனம் செய்தன. ஆ! வஞ்சம்...இனி நான் என்ன செய்வேன்! உஎக

புயலெழு மனத்தினன் புன்வ லைப்படுங்
கயலெனத் துடித்ததைக் கண்டு, நீள்விழி
மயலெழ வீசித்தன் மாய வித்தையாற்
செயம்பெறு மோகியும் சிரித்து வந்தனள்.

கலியன் மனத்தில் புயல் வீசுகிறது. அப்புயலில் ஒரு வஞ்சச் சிறுவலை வீசப்பெற்றது. அதில் அகப்பட்ட மீன் போல் அவன் உயிர் துடித்தது. அதைக் கண்டாள் அவன் மனைவி மோகி. அவள் மகா மாயக்காரி. அவளது நீண்ட வாள்விழிகள் மையலை வீசும். அவளிடம் பல மாய வித்தைகள் உண்டு. அவற்றால் அவள் தனது காரியத்தில் வெற்றி பெறுவாள். அவள் சிரித்துக்கொண்டே கணவனிடம் வந்தாள். உஎஉ

கொஞ்சுமென் மொழிசொலிக் குமுதக் கைகளால்
துஞ்சறு விழிகளைத் துடைத்து நோக்கிடும்
அஞ்சன விழியளை யணைத்துத் தன்மனம்
சஞ்சலக் கலியனுஞ் சாற்றி னன்கொலோ.

மோகி கொஞ்சும் கிளிமொழிகளால் ஆறுதல் கூறி, நீர் பெருகும் நாதன் விழிகளைத் தன் குமுதம் போன்ற மென் கைகளால் துடைத்து, அவனை அன்புடன் பார்த்தாள். அஞ்சனம்போன்ற விழிகளுடைய அவளை மார்புறத் தழுவிக் கொண்டு, சதா சஞ்சலப் பட்டுக்கொண்டிருக்கும் கலியன் தனது மனத்தைத் திறந்து கூறினன் : உஎரு

கலியன்

அரியணை யிருந்துநான் சித்தி யாண்டிடும்
உரிமையை யிழந்தனன் ஒருவன் வந்ததால்
பெரியசிந் தனையெலாம் பேச வாயிலேன்.......!
பரிந்தெனக் கிதமொழி பகர வல்லையோ ?

"கண்ணே, மோகி! நான் எனது அண்ணனுக்குப் பிறகு அவனது அரியணையை வகித்துச் சித்தியை ஆள நினைத்தேன். எனக்குச் சத்துருவாக வந்தான் மகன் சுத்தன். அவனால் எனது உரிமையை இழந்தேன். அவனை ஒழித்து, அவன் அப்பனையும் ஒழித்து ஆளப் பெரிய பெரிய சூழ்ச்சிகளை யெல்லாம் செய்தேன் ; சிந்தித்தேன். அவற்றை இனிப் பேசவும் வாயில்லேன் ; படுதோல்வி யடைந்தேன். இந்த நிலையில் எனக்கு நீஆறுதலாகும் இதமான வார்த்தை சொல்ல முடியுமா?" என்றான் கலியன். உஎச

மோகி

நோயுறு கலியிவை நுவல, மோகியும்
ஓயுக கவலைகள்; உலகை வென்றிடப்
பாயுறும் அரக்கரின் படையைத் தூண்டுவேன்
ஏயெனு முன்னுன திச்சை யாமென்றாள்.

மனவேதனைப்பட்ட கலியன் சொன்னதைக் கேட்டவுடனே மோகி ஆவேசமுற் றெழுந்தாள். "உன் கவலைகள் ஓயட்டும்! இதோ செல்கிறேன். உலகையே வெல்லக்கூடிய அரக்கர் படையைத் தூண்டிக்கொண்டு வருவேன். அவை 'ஏய்' என்று பாய்ந்து தாக்குமுன், சத்தியன் படை நொறுங்கிப்போகும். உடனே உனது விருப்பம் நிறைவேறும்" என்றாள். ௨௭௬

ஏனினி யோசனை; யெவனை யஞ்சினை
யானவன் அழியவென் அண்ணல் மாவலி
சேனையைத் தூண்டிடச் செல்கின்றே னின்றே
தானவத் தீவெனச் சபதஞ் சாற்றினாள்.

"இனி யென்ன சிந்தனை? நீ யாரைக்கண்டு அஞ்சினாயோ அந்தச் சித்தி மன்னனை நான் அழிப்பேன். 'தானவம் என்னும் அரக்கர் தீவிருக்கிறது. அதன் அரசன் மாவலி. அவன் என் அண்ணன். அவனது சேனைக்கு வெறியேற்றித் தூண்ட நானே இதோ தானவம் செல்கிறேன்" என்று சபதமிட்டுக் கூறினாள். ௨௭௭

கலியன்

கவலையும் ஒழிந்தது கனவு மெய்த்தது
புவியுங்கை வந்ததுன் பொன் மொழிகளால்
எவருமென் னிகரிலை என்று விம்மினான்
அவஞ்செயும் தீயருக் கரச னாயினான்.

நாட்டிற்குத் துன்பம் செய்யும் துஷ்டர்களுக்கு அரசனான கலியன் "கண்ணே மோகி! உன் பொன் மொழிகளால் எனது கவலை யொழிந்தது. கனவு மெய்யானது. உலகமும் எனது கைக்கு வந்தது. இனி எவரும் எனக்குச் சமானரில்லை" என்று செருக்கால் விம்மிதமுற்றான். ௨௭௮

வருகுது சித்தியை வீழ்த்தும் வன்படை!
பெருகுதுன் புகழெனப் பெரிய பாதகி.
வெருவுறு மரக்கரை விளைத்த தானவம்
இருமுழு மதியுடன் ஏகி னாள்கொலோ.

"சித்தியை வீழ்த்தி வெல்லும் வலிய தானவர்படை வருகிறது பார்; உனது புகழ் பெருகுவதைப் பார்!" என்று பெரிய பாதகியான மோகி, இரண்டு பூரண சந்திரனுடன் அதாவது இரண்டு மாதத்தில், அரக்கரை உண்டாக்கிய தானவத் தீவிற்குச் சென்றாள். ௨௭௯

நகையினை யுதட்டிலு, நஞ்சை நெஞ்சிலும்,
பகையினைச் செயலிலும், பரிவை நாவிலும்,
வகையுறக் கலியனும் வைத்து நாட்டிலே
மிகையுறு பிரிவினை விரைவிற் செய்தனன்.

இங்கே கலியன் சும்மா இருக்கவில்லை. சத்தியன் சந்தேகப்படாமல் வெளிக்கு அன்பு காட்டினான். உதட்டில் புன்னகைகாட்டி உள்ளத்தில் நஞ்சுபோன்ற பொறாமையை வளர்த்தான்; நாவினால் மிகப் பரிவாகப் பேசினான்; செயலில் கடும்பகையைக் காட்டினான்; தன் தந்திரங்களையும் பாசாங்குகளையும் எந்தெந்த வகையாகக் காட்டவேண்டுமோ அந்தந்த வகையாகக் காட்டினான். சத்தியராஜன் ஆளும் புண்ணிய பூமியிலே பல சிற்றரசர்கள் அவன் கீழ் இருந்தனர். அவர்களிடையே விரைவாகப் பிரிவினை செய்தான். அந்தப் பிரிவினைகள் நாளுக்கு நாள் மிகுந்தன. ௨௮௦

பதரெனும் பதகனின் பழியி னால்விளை
அதர்மங்க ளனைத்தையும் அறியு முன்னரே,
கதிர்மணி போல்வளர் கடவுட் சுத்தனின்
புதியநல் வாழ்வினைப் புகலு வாமரோ!

கலியன் மனிதப் பதர்; பாதகன். அவன் செய்த பழிகளால் நாட்டில் அதர்மம் பரவியது. அதை நாம் பிறகு அறிவோம். அதற்கு முன்பே கதிர்மணிபோல் ஒளிபெற்று வளரும் தெய்வப் புதல்வனாகிய சுத்தன் புதுப்புது வனப்புடன் கூடிய நல்வாழ்க்கையுடன் பொலிந்தான். அவனைப்பற்றி இனிச் சொல்வாம். ௨௮௦

௧௫. பொறாமைப் படலம் முற்றிற்று.

கனவு விடு தூது

வே. நாராயணன்

நள்ளிராப் பொழுது; பள்ளியறையிலே காதலி தனிமையிற் படுத்திருக்கிறாள். ஊரெல்லாம் துஞ்சியது; உலகெல்லாம் நள்ளிருளாகிவிட்டது; "அன்னையரும் தோழியரும், 'என்னே!' என்னுடைய தூங்குகிறார்களே; எனக்கு உசாத்துணை ஒருவரும் இல்லையே" என்று ஏங்குகிறாள் தலைவி. அத்தருவாயில் அவளது கண் முன்பு ஒரு உருவம் தோன்றுகிறது. "காவலைக் கடந்து பள்ளியறையிற் பிரவேசித்தவன் யார்?" என்று தலைவி உற்று நோக்கி, வினவுகிறாள்.

அவ்வுருவம் பின்வருமாறு விடை கூறுகின்றது: "உன் தலைவன் உன்னிடம் வர விடுத்த தூது நான்; என் பெயர் கனவு என்பார்கள். உன் தலைவன் பிரிவாற்றாமையினால் ஏங்கி யிளைத்திருக்கிறான். சதா உன்னைப் பற்றிய நினைவேதான். நள்ளிரவிலும் துயில் கொள்வதில்லை; சற்றுக் கண்ணயர்ந்தாலும், திடுமென விழித்துக் கொண்டு உன் பெயரையே கூறி அழைக்கிறான். நல்லுணவு உண்பதில்லை; குளிப்பதில்லை; நல்லாடை தரிப்பதில்லை. எப்படியோ என்னைக் கண்டறிந்தான். என்னோடு நட்புக் கொண்டு 'நண்பா! நீ தான் எனக்கு உதவ வேண்டும். நான் தவிப்பதைக் கண்டு இரங்கியது போல, என்னைப் பிரிந்து தவித்துக் கொண்டிருப்பவளை நீ சென்று கண்டு தேற்ற வேண்டும்' என்று எனக்கு வழிசொல்லி அனுப்பினான். அவன் சொன்ன வார்த்தையைக் கேட்பாயாக: 'காதலி! உன்னைப் பிரிந்து நான் இருக்கவேண்டிய காலம் இன்னும் சிறிது எஞ்சியிருக்கிறது. ஆயினும், இனி ஒரு கணமேனும் வாழக் கூடுமென்று எனக்குத் தோன்றவில்லை. என் தூதன் உனக்கு என் நிலையை உணர்த்துவான். நீ ஆற்றியிருக்கிறாய் என்று அறிந்தால் மட்டுமே நான் ஒருவாறு ஆற்றி யிருக்கக் கூடும். அதனை அறியவே நான் தூது விடுத்திருக்கிறேன். குறித்த காலத்திலே எப்படியும் நான் அங்கே வந்து குதித்து விடுவேன் என்று உறுதி கொண்டு இருப்பாயாக!' என்று உன் நாதன் கூறினான்."

தலைவிக்கு அமுதத்தோடு சிறிது விஷங் கலந்து ஊட்டினாற் போலிருந்தன தூதன் உரைத்த வார்த்தைகள். நாயகனுடைய உடலும் மனமும் இளைத்து வருந்துகின்றன என்று கேட்டால், நாயகிக்கு வருத்தம் இருப்பது இயல்பேயாம். ஆயினும் அவ்வருத்தத்திலும் அதிகமான ஓர் இன்ப உணர்ச்சியே மேலிட்டது. 'தன் நாயகன் தன்னை மறந்து விட்டானோ?' என்ற அச்சம் நாயகிக்கு இருந்தது. 'தன்னையே நினைந்து அவன் மனமுளைந்து வருந்துகிறான்' என்று கேட்டதும் நாயகியின் உடல் பூரித்தது; அமுதமுண்டது போலாயிற்று. 'நாயகனை மீண்டும் கண்டு கலந்து களியாது இப்படியே நசித்துப் போவேனோ?' என்று ஐயமுற்று ஏங்கியவளுக்கு உயிர் பெய்தது போலாயிற்று, நாயகனுடைய பிரிவாற்றாமையை விளக்கிக் கூறிய சொற்கள். இவ்வாறு இன்பச் செய்தி கொணர்ந்து தந்து தன்னை உயிர்ப்பித்த தூதனுக்கு நல் விருந்திட்டு உபசரிக்க வேண்டாமா?

இன்பச் செய்தியைக் கேட்ட களிப்பிலே சற்றே மூடிய கண்களைத் திறந்து பார்த்தாள் நாயகி. தன் முன் தோன்றித் தூதுரைத்த உபகாரியைக் காணவில்லை. 'ஆ! அதற்குள் மறைந்து போய் விட்டானே!' என்று தன் அருகிலே உறங்கிக்கிடந்த தோழியை எழுப்புகிறாள்: "தோழி, எழுந்திராய்! சற்று முன் என் நாதனிடமிருந்து வந்த ஒரு தூதன் இங்கு வந்தானே, அவனைக் கண்டாயோ? நான் விடை கூறுமுன்பே, அவன் மறைந்து விட்டான்; நான் என் செய்வேன்! இராம தூதனைச் சீதை, 'சற்று இருந்து இளைப்பாறி நாளைப்போகக் கூடாதா?' என்று வேண்டினாள் அல்லவா? அது போல, நானும் வேண்ட நினைந்தேன். இனி அத்தூதனுக்கு எவ்வாறு விருந்தாற்றுவது?" என்று வருந்துகிறாள். இவ்வாறு தலைவி வருந்துவதாகக் கூறுவது

> காதலர் தூதொடு வந்த கனவினுக்
> கியாதுசெய் வேன்கொல் விருந்து

என்னும் குறள்.

இதனால் விளக்கப்படும் கருத்தினைச் சற்றுக் கவனிப்போம்.

தலைவனைப் பிரிந்த தலைவி அப் பிரிவுக்கு ஆற்றாது மிகவும் வருந்துகிறாள். நள்ளிரவிலே, தன்னை விட்டுப் பிரியாத தோழி துயின்ற பின்னும், தலைவிக்குத் தூக்கம் வரவில்லை. 'நாயகன் தன்னைப் பிரிந்ததால் எவ்வாறெல்லாம் வருந்துகிறானோ' என்ற நினைப்பும் கவலையுமே அவளைத் துன்புறுத்துகின்றன. மெய் சோர்ந்து கிடக்கும் அவள் சற்றே கண்ணயர்ந்த போது, நனவிலே தன் காதலன் தன்னையே நினைந்து வருந்துவதாக உருவகப்படுத்திக் கொண்டிருந்ததாலே, கனவிலேயும் காதலன் தன்னை நினைந்து உருகுவதாகவே அவளுக்குத் தோன்றுகிறது. தான் இவ்வாறு கனவிலே கண்டதைத் தான் தோழிக்கு உரைக்கிறாள். "தோழி! நான் இதுவரைச் சற்றும் கண் துயின்றதில்லை; கண் துயிலாது எவ்வாறு கனக் காண இயலும்? அதனால், இப்பொழுது நான் கண்ட கனா, தானாகவே என் கண் முன் தோன்றியதன்று. என் நாயகன் அனுப்பிய தூதாதல் வேண்டும். நான் கனா என்பான் உரைத்த தூது மொழிகளாலே என் நாயகனுடைய அவஸ்தைகளைக் கண்கூடாகக் கண்டேன். என்னையே நினைந்து அவர், பெரிதும் இடர்ப்படுகிறார். என்ன விபரீதம்! அவர் பிரிவாற்றாது வருந்துவது எனக்கு இன்பம் பயப்பதாகின்றது. கனவிலே அவர் என்னைப்

பிரிந்து வருந்துவதைக் கண்டதாலேயே நான் ஒருவாறு மனதைத் தேற்றிக் கொண்டிருக்கிறேன்" என்கிருள்.

இவ்வாறு தோழிக்குத் தலைவி கூறுவதாக வருணிப்பதினின்றும் கவி தலைவியின் நிலைமையை விளக்குகிருர். பிரிவாற்ருத நிலையிலே, தலைவி தன்னை எவ்வாறு தேற்றிக் கொண்டிருக்கிருள் என்ருல், அவள் தன் மனக் கண்ணுல் தன்னைப் பிரிந்து வருந்தும் காதலனின் நிலைமையைக் காண்கிருள் ஆதலின், என்னலாம். இவ்வாறு அவனை எப்பொழுதும் காண்பதால், கனவிலே கூட, தலைவனுடைய பரிதாப நிலையே தலைவியின் கண் முன் நிற்பதாகின்றது. தலைவி பிரிவாற்ருது உயிர் நீத்தால், பின்பு எதைக் கொண்டு தலைவன் பிரிவாற்றியிருக்கக் கூடும்? அவன் உயிர் நிலைப்பதற்காகவே, தலைவி அரிதில் ஆவி காத்து ஆற்றியிருக்கிருள். இது போலவே, தலைவனும் தலைவியின் பொருட்டே உயிர் போற்றுகின்ருன் என்பதையும், இருவரும் ஒத்த அன்பினர் என்பதால் ஊகித்துக் கொள்ளலாம். எனவே, காதலர் பிரிந்திருக்க நேரிட்டால், அவர்கள் பிரிவாற்ருது உயிர் துறக்கவேண்டியதா யிருக்க, உயிர்தாங்கி யிருப்பதற்குக் காரணம், அவளும் அவனுமே தான் உயிரிழந்தால் தன்னைக் காதலிக்கும் உயிரும் மாய்ந்து போகுமே என்று நினைத்து அவ்வுயிர் நீங்கா திருப்பதற்காகவே தன்னுயிரைப் போற்றிப் பாதுகாத்தலேயாகும்.

காதலிக்கும் காதலனுக்கும் இடையே இவ்வாறு நன் கமைந்த மனோபாவங்களை விளக்கும் அரிய பாடல் ஒன்று வால்மீகி ராமாயணத்திலே யுள்ளது. அதன் பொருள் வருமாறு: "என் மட நல்லாள் சீதையினல், என்னைப் பிரிந்து உயிர் தரிக்க இயலாது. எனினும் அந்த வைதேகியின் மனோபாவம் என்னுட் பொதிந்துள்ளது; என் மனோபாவமும் எப்பொழுதும் அவளிடத்தே பொதிந்திருக்கின்றது" என்று. பம்பா தீரத்திலே பிராட்டியைப் பிரிந்து வருந்தும் இராமன் தன் தம்பியிடம் கூறுவதாகஉள்ளது இவ்வாக்கியம். "என் இன்துணைவி யாவாள் என்னைப் பிரிந்து உயிர் வாழமாட்டாள்; ஆயினும், உயிர் வாழ்வாள் என்றே நினைக்கிறேன். அவளைப் பிரிந்த நான் உயிர் வாழ்கின்றேனே, அது போல அவளும் வாழ நேரும். என் நினைவுகள் எல்லாம் அவளைப் பற்றியனவாக இருக்கின்றன. அவள் எவ்வாறு வருந்துகிருளோ, அவள் வருத்தத்தைத் தீராது உயிர் நீத்தல் கூடாது என்று நான் உயிர் போற்றியிருப்பது போலவே, அவளும் என்னையே நினைந்து என் உயிரை யோம்புதற்கே போகுமுயிரைத் தடுத்துப் பிடித்துக் கொண்டிருக்கிருள்" என்று ஸ்ரீராமன் கூறு முகத்தால், காதலர் தமக்கென வாழாது தம்மைக் காதலிப்பவர்க்கென்றே வாழ்பவர்கள் என்னும் அரிய கருத்து நன்கு விளக்கப் பெறுகின்றது.

பலமத உண்மை

ஒரு பெரிய தடாகத்தில் குளிக்கும் துறைகள் அநேகம் இருக்கின்றன. ஸ்நாநம் செய்யவோ ஜலம் மொள்ளவோ, யாராயிருந்தாலும், எந்தத் துறை வழியாக இறங்கின போதிலும், நீர் மட்டத்துக்குப் போகக்கூடும். ஒருவனுடைய துறை நல்லது மற்றவனுடைய துறை கெட்டது என்று சண்டைபோடுவது வீண். அதுபோலவே நித்யானந்தமாகிய நீர்த்தடத்துக்குப் போகும் துறைகளும் பல. உலகத்திலுள்ள ஒவ்வொரு மதமும் அப்படிப்பட்ட துறைகளில் ஒவ்வொன்ருகும். இந்தத் துறைகளில் ஏதாவதொன்றின் வழியே நேராகத் திடபக்தியுடன் சென்ருல், நீ நித்யானந்த நீர்த்தடத்தை யடைவது நிச்சயம். ஆனல் உனது மதம்தான் உயர்ந்தது, மற்றவை தாழ்ந்தவை என்று மட்டும் சொல்லாதே.

—பரமஹம்ஸர்

ரயில் பாதைகள் நீளம்

உலகின் பல நாடுகளிலுமுள்ள ரயில் பாதைகளின் நீளம் பின்வருமாறு:

நாடு	மைல்கள்	நாடு	மைல்கள்
பிரிட்டன்	20,121	நார்வே	2,600
பிரான்ஸ்	26,000	ஜப்பான்	14,612
தென் ஆப்பிரிக்கா	13,213	ஆர்ஜெண்டைன்	26,000
ஆஸ்திரேலியா	27,900	கிரீஸ்	1,993
கானடா	56,692	பிரேஸில்	20,885
ஸோவியத் ரஷ்யா	52,000	போலந்து	12,500
பெல்ஜியம்	6,400	நியூஜிலந்து	3,320
ஐக்கிய அமெரிக்கா	2,52,871	எகிப்து	3,422
இதாலி	10,672	சிலி	5,434
இந்தியா	43,118		

இது திருச்சி — 'கோணல்'

'பாட்டுக் கீட்டு'த் தெரியுமா என்று நண்பரை யாரோ கேட்டு விட்டார்கள் போல் இருக்கிறது. பாட்டுத் தெரியாவிட்டாலும் 'கீட்டு'த் தெரியும் என்று அவர் ஸ்தாபித்து விட்டார். திருச்சியைப் பற்றி இந்தக் 'கோண'லின் கோணல் வர்ணனை ஒரு தாப்பானது தான். என்றாலும், தத்ருபம். அதிலும் ஒரு சுவை. ஆகையால், சீர், தளை, ஓசை யினிமைகளைப் பற்றிக் 'கோண'லுக்கு என்ன கவலை ?

1. தொலையாப் புழுதியும்
அலையும் கழுதையும்
மலையும் கோட்டையும்
—இது திருச்சி.

2. தெப்பக்குளம் ;
வெப்பக் கொடுமை
எப்பத் தணியும் ?
—இது திருச்சி.

3. கோட்டை விளக்கு ;
கூண்டு மணி ;
கோயில் மகிமை.
—இது திருச்சி.

4. பாலக் கரை ;
சாலைத் தெரு ;
" வேலை இல்லை ! "
- இது திருச்சி.

5. " தென்னூர் ஜட்கா "
" துறையூர் பஸ், ஸார் ! "
" ஜங்ஷன் போகாது ! "
—இது திருச்சி.

6. உச்சிப் பிள்ளையார் ;
பச்சைப் பழங்கள் ;
பிச்சைக் காரர்கள்.
- இது திருச்சி.

7. ஒட்டை ஆஸ்பத்(தி)ரி ;
கோட்டைத் தெருக்கள் ;
" வீட்டைப் பாரேன் ! "
—இது திருச்சி.

8. - கறையான் வாசம் ;
காலி பங்களா ;
கண்டோன் மெண்டு.
—இது திருச்சி.

9. சுருங்கிய சந்துகள் ;
நெருங்கிய வீடுகள் ;
நெருக்கும் வாடகை.
—இது திருச்சி.

10. மார்க்கெட் மரக்கடை ;
மணிக்கூண்டு மங்கம்மா ;
பார்க்கும் புலிவா ரோடு.
- இது திருச்சி.

11. சூதுக் கடைகளும்
வாதுக் கூட்டங்களும் ;
காதுக்குச் சேதம்.
- இது திருச்சி.

12. வண்டியூர் மாடும்
வழியை மறைக்கும் ;
அண்டவும் கூடுமோ !
—இது திருச்சி.

13. பாதிரி ஸ்கூல்கள் ;
பலத்த ஜெயிலாம் ;
பாடும் ஸ்டுடியோ.
—இது திருச்சி.

14. வீடெங்கும் ரேடியோ ;
வைப்பதும் திருச்சி ;
வேறில்லை போலும் !
—இது திருச்சி.

15. ஹால் என்ற கொட்டகை ;
" ராஜாவில் என்ன ? "
" கெயிட்டியில் கார்போ ! "
- இது திருச்சி.

16. ரயில் அதிகாரிகள் ;
மயிலஞ் சந்தை ;
" டயிரிப் பால்தான் ! "
—இது திருச்சி.

17. சநாதனக் கோட்டை ;
ஹரிஜனத் தலைநகர் ;
சு. ம. சொந்தவூர்.
—இது திருச்சி.

18. காலையில் காவிரி ;
குழாயில் அதுவே ;
கிளப்பிலும் அவளே !
—இது திருச்சி.

19. அம்மா மண்டபம் ;
அரங்கக் கோயில் ;
ஆனைக் காவு.
—இது திருச்சி.

20. பக்திப் பெருக்கு ;
பட்டைச் சாதம் ;
பத்தினி வேசியர்.
- இது அரங்கம்.

21. நாம தாரிகள் ;
வேஷ தாரிகள் ;
மோச தாரிகள்.
—இது அரங்கம்.

22. வம்புப் பெண்கள் ;
அம்புக் கண்கள் ;
கும்பலில் கோவிந்தா !
—இது அரங்கம்.

23. கோயிற் சிற்பம் ;
ராய கோபுரம் ;
வாய்வே தாந்தம்.
—இது அரங்கம்.

24. என்றும் திருவிழா !
என்றும் தரிசனம் !
என்றும் பெருவிழா !
—இது அரங்கம்.

தலைகீழ்ப் பாடம்!

நாமெல்லாம் புத்தகத்தை முதலில் இருந்து படிக்க ஆரம்பிக்கிறோம். ஆனால் ஜப்பானியர், கடைசிப் பக்கத்திலிருந்துதான் தொடங்குவார்கள். நமது எழுத்துக்களெல்லாம் ஒன்றக்கு அடுத்து ஒன்று இருக்கும். ஆனால் ஜப்பானியரோ ஒன்றன்கீழ் ஒன்றாகத்தான் எழுதுவர். அதோடல்ல; அவர்கள் படிப்பதும் வலது பக்கமிருந்து இடப்பக்கமாகத்தான். அநேகமாக எல்லாமே நமக்கு எதிரிதான். தபால் உறையில் விலாசம் எழுதவேண்டுமானால், முதலில் ஊர்ப் பெயரை எழுதி விடுவார்கள். கடைசியாகத்தான் ஆளின் பெயரும். " போய்வருகிறேன் " என்பதற்கு அவர்கள் காட்டும் சமிக்ஞை 'இங்கே வா' என்பதற்கு நாம் செய்யும் சைகைபோல இருக்கும்.

கிளப்பில் புருஷனும் மனைவியும் சாப்பிட்டால் மனைவிதான் பணம் கொடுப்பது வழக்கம். அவள்தான் பணப்பையை வைத்திருப்பாள். பின்னால், தையல் முதலிய வேலைகளெல்லாம் ஆண்களுக்குத்தான் தெரியும். பெண்கள் நூல் கோப்பதைப் பார்த்தால் மிகவும் வேடிக்கையாக இருக்கும். அவர்கள் ஊசியில் நூலைக் கோக்கமாட்டார்கள் ; நூலில்தான் ஊசியைக் கோப்பார்கள் ! இதெல்லாம் நமக்குத் தலைகீழ்ப் பாடமாயிருக்கிறது. ஆனால், ஜப்பானியரைக் கேட்டாலோ ?

வாசனை சினிமா

'உல்லாஸி'

சினிமா ரஸிகர்களுக்கு, வரும் காலத்தில் ஓர் பெரிய ஆனந்தம் கிட்டப் போகிறது. அதாவது, சினிமாப் படங்களின் இன்பத்தைத் தங்கள் கண்கள், காதுகளால் மட்டிலும் அனுபவிப்பது போக, வருங்காலத்தில் மூக்கினுலும் அனுபவிக்கலாம். சில நிபுணர்கள் சினிமாப் படங்களுக்கு வாசனை யூட்டும் ஆராய்ச்சியில் தற்போது தீவிரமாக ஈடுபட் டிருக்கிறார்கள். முதலில் அசையும் படங்கள் வந்தன; பின்னல் பேசும் படங்கள் வந்தன. இனிமேல் வாசனைப் படங்கள் வரப் போகின்றன. இது எப்படி யென்றல், கதாநாயகன் தோன்றுகிறன் என்று வைத்துக்கொள்ளுங்கள். கதாநாயகன் தோன்றினல், கதாநாயகியும் ஆஜராகாமல் விடமாட்டாள். இருவரும் தோன்றினல், காதல் பண்ணுமல் முடியாது. அதற்கு மிகவும் ஏற்றது ஓர் மலர்த் தோட்டந்தான். "மல்லிகை மணம் வீசுது பார், மனேஹரி நீயே" என்று பிலஹரியில் நமது கதா நாயகன் கம்பீரமாக ஓர் பாட்டுப் பாடுகிறன். கதாநாயகன் சொல்லுவது நிஜந்தான என்பதை நாம் எப்படி அறிந்து கொள்ளுவது? அந்தச் சமயம் 'கமகம' வென்று மல்லிகையின் பரிமளம் நம்மிடம் வீசுமானல், "கதாநாயகன், கதா நாயகியிடம் பொய் சொல்ல வில்லை; நிஜந்தான் பேசுகிறன்" என்று நமக்கு நிச்சயம் ஏற்படும். மல்லிகை யென்றல் மல்லிகை மாத்திரமல்ல; 'மல்லிகை, ரோஜா, மணமுள்ள முல்லை, மகிழம் பூவும், பாரிஜாதமும்' இப்படியாகத் தானே பல விதப் புஷ்ப வகைகள், மா, பலா, புளி, தென்னை என்ற நானஜாதி விருட்ச வகைகள் ஆகியவை நிறைந்த அநேக விதத் தோட்டங்களையும், கண்ணில்லா விட்டாலும், மூக்கினல் படங்களில் நாம் அறிந்து கொள்ளலாம்.

இந்த வாசனை ஏற்பாட்டை வெகு ஜாக்கிரதையாகத்தான் அமைக்கவேண்டும் என்பதை நாம் கவனிக்க வேண்டும். இல்லா விட்டால், இப்போதே பல சினிமாக் கொட்டகை முதலாளிகள் இதைச் செய்திருக்க மாட்டார்களா? இதில் ஒரு சிரமம் இருக்கிறது; ஒரே சிரமம் தான். ஒரு காட்சியில் ஒரு வாசனையைக் கிளப்பி விட்டோமானல், அடுத்த காட்சி வரும் போது புதிய வாசனை வேண்டும். அப்போது முதல் காட்சியில் கிளம்பிய வாசனை கொட்டகையிலேயே சுற்றிக் கொண்டிருக்கும். அதை எப்படி விரட்டுவது என்பதுதான் அந்தச் சிக்கல். முதல் காட்சியின் வாசனையை விரட்டாமல், இரண்டாவது காட்சியின் வாசனையைக் கிளப்பி விட்டோமானல், கதம்ப வாசனை யேற்படுமேயன்றி, இரண்டாவது காட்சியின் சுத்தமான வாசனையை நாம் அடைய முடியாது. மேலும் பல காட்சிகளின் வாசனைகள் ஒன்றின் பின்னென்றுகத் தொடருமானல், படம் முடியும் போது நாம் வீட்டுக்குக் கிளம்ப முடியாது; ஒரேயடியாக நாம் மயக்க மடைந்து கிடப்போம்! ஆகையால் இந்தச் சிக்கல் தீர்ந்ததும், வாசனை சினிமாக்கள் வந்து நம்மை மகிழ்விக்கத் தொடங்கி விடும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

வாசனை சினிமா வருமானல், இன்னும் சில நன்மைகள் உண்டு. கதா நாயகி பளபளப்பான கட்டுக் கூந்தலுடன் தோன்றுகிறள். நிஜமாகவே அவளுக்குக் கட்டுக் கூந்தலுண்டா அல்லது 'டோபா' வைத்துக் கட்டிக் கொண் டிருக்கிறளா என்று நமக்குத் தெரியாமல் போய் விடுகிறது. வாசனை சினிமா வந்தால், உண்மை தெரிய மார்க்க மிருக்கிறது. நிஜமான தைலத்தைப் பெரும்பாலும் 'டோபா'வுக்கு யாரும் பூசுவதில்லை. கதாநாயகி தைலம் பூசிக் கொள்ளாமல் வரமாட்டாள். ஆகையால் எப்படியும் உண்மை வெளிப் பட்டுவிடும். வாசனை சினிமாவைத் தயார்செய்யும் முயற்சியில் வெற்றி உண்டாகுமானல், வேறு சில துறைகளிலும், பல அபூர்வப் பலன்கள் ஏற்பட்டு விடும். உதாரணமாக, 1200 பக்கங்களுள்ள ஒரு பிரமாண்டமான நாவலை எடுத்துக்கொள்ளலாம். பெரிய நாவல்களைப் படிப்பதென்றல் கொஞ்சம் சலிப்பு ஏற்படுவது யாருக்குமே சகஜம். பக்கத்துக்குப் பக்கம் கதையின் காட்சிகளுக்குத் தக்கவாறு வாசனையூட்டியிருந்தால், 'கம்' என்ற வாசனை நம்மை மேலும் மேலும் கடைசி வரையில் உற்சாகப் படுத்திக் கொண்டே யிருக்கும். அதோடு 'சாக்கடை' நாவல்கள் தோன்றுமலு மிருக்கும். தோன்றினலும் யாரும் வாங்க மாட்டார்கள்.

சமாசாரப் பத்திரிகைகளிலும் வியக்கத்தக்க மாறுதல்கள் ஏற்படும். முக்கியமாக மார்க்கட் நிலவரப் பத்திகளில் அந்த மாறுதல் தலை சிறந்து விளங்கும். ஏதோ சில வியாபாரிகளைத் தவிர, பிறர் எவரும் தற்காலம் அந்தப் பத்திகளைப் படிப்பது கூட இல்லை. அந்தப் பத்திகளில், குறிப்பிட்ட சரக்குகளின் வாசனையை ஏற்றி விட்டால் யாரையுமே அவை கவர்ந்து தீரும். மேலும், உபயோகமற்ற தைலம், செண்டுகளை மகா உயர்ந்த மணமுடையவை யென்று விளம்பரம் செய்து எந்த வியாபாரியும் அக்காலத்தில் ஏமாற்ற இடமில்லாமல் போகும். பல தொழில் முதலாளிகளும் தங்கள் தொழிற்சாலை வேலைகளை விளக்கும் படங்கள் தயாரிப்பதுண்டு. அவை யெல்லாம் தற்போது ஜனங்களால் அவ்வளவு ரஸிக்கப் படவில்லை. வாசனை சினிமா வந்து விட்டால், அவற்றிடம் ஜனங்களுக்குக் கட்டாயம் மிகுந்த பிரியம் ஏற்படும். உதாரணமாக, ஓர் பிரபல காப்பி ஓட்டல்காரர் தமது ஓட்டலின் சிற்றுண்டிப் பெருமைகளை விளக்க ஒரு விளம்பர சினிமாத் தயார் செய்வதாக வைத்துக் கொள்ளுவோம். நம்மில் யாராவது அதைப் பார்க்கத் தவறுவோமா?

"மூடர்களில் இரண்டுவித முண்டு. தன்னிடம் சொன்ன எதையும் செய்யத் தெரியாதவன் ஒரு மூடன்; தன்னிடம் சொன்னதைத் தவிர வேறெதையும் செய்யத் தெரியாதவன் இன்னெரு மூடன்."

—டாக்டர் தாம்ஸன்

சிறு கதை

எமனை ஏய்த்த கிழவன்

ஆர். திருஞான சம்பந்தம்

அது ஒரு சின்னஞ் சிறு கிராமம். கிராமத்தின் கோடியிலே ஒரு சிறு குடிசை இருந்தது. அந்தக் குடிசையிலே ஒரு கிழவன் வெகு காலமாக வாழ்ந்துவந்தான். ஆம், வெகு காலமாகத்தான்! அவனுடைய வெண்மையான தாடியும், கூனிக் குறுகிய முதுகும், சுருக்கம் விழுந்த அவயவங்களும், ஆழ்ந்த பார்வையும் சேர்ந்து, பார்ப்போருக்கு அவனைத் 'தாத்தா' வென்று அழைக்கத் தோன்றும். ஊரிலுள்ள 'தாத்தா'க்களுக்கெல்லாம் தாத்தாவாக விளங்கினான் அவன்,

அவனுக்குச் சொந்தமான 'கையகல' நிலம், குடிசைக்குப் பின்புறத்தில் இருந்தது. அங்கு ஒரு மாமரம் செழிப்புடன் வளர்ந்து நின்றது. அம் மரத்தின் இளந் தளிர்களும், பிஞ்சும், கனியும் சதா காற்றில் குலுங்கிக்கொண்டு காண்பதற்கு ஒரே ஆனந்தமயமாக இருந்தது. அந்த மாமரத்திடம் கிழவன் உயிராக இருந்தான். தன் ஆசை அனைத்தையும் அதிலேயே செலுத்தி அன்பு நீர் பாய்ச்சினான். அம்மரமும் குடை போன்று குடிசைக்கு மேல் கவிழ்ந்து, அவனுக்கு நிழல் தந்துகொண்டிருந்தது.

கிழவன் அந்த மரத்திடம் அன்பு வைத்திருந்தது போல, தான் வளர்த்து வரும நல்ல நாயிடமும் ஆசை வைத்திருந்தான். வயிற்றுப் பாட்டுக்காகப் பிச்சை யெடுக்கத் தான் வெளியே செல்லும்போது, அந்த நாயை மாமரத்தின் கீழே கட்டிவிட்டுப் போவான். துஷ்டப் பையன்கள் திருட்டுத்தனமாகப் பழம் பறிக்க வந்து, தொல்லை கொடுப்பதைத் தடுத்து மிரட்டவே, அந்த வழியைக் கையாண்டான். ஆனாலும், 'மாம்பழத் திருடர்' தொல்லை இருந்துகொண்டுதான் இருந்தது!

இருந்தாற்போலிருந்து அந்த வட்டாரத்திலே பஞ்சம் ஏற்பட்டது. எங்கும் துன்பமும் துயரமும் குடிகொண்டது. மக்களின் உள்ளத்திலிருந்து மகிழ்ச்சி மறைந்தது. ஆனந்தக் கண்ணீருக்குப் பதில் சோகத் துளிகளே சிந்தின. நெல் நிறைந்த களங்களிலே புல் மூண்டது.

கிழவன் தன் குடிசையிலே படுத்து அரைத் தூக்கத்தி லிருந்தான். அப்போது வெளியிலே சூழ்ந்த அந்தகாரத்தைக் கிழித்துக்கொண்டு ஒரு குரல் கேட்டது: "ஐயோ! உயிர் போறதே. நிக்க முடியலையே. குடிசைக் கதவு திறக்காது போனால் சாக வேண்டியதுதான்."

சட்டெனக் கிழவன் கதவைத் திறந்தான். மிகுந்த பரிவுடன், "அப்பனே! நீ யாராயிருந்தாலும் உள்ளே வா; குளிரைப் போக்க முதலிலே இந்தக் கணப்புக்குப் பக்கத்திலே உட்கார்ந்து சற்றுக் காய்ந்து கொள்ளப்பா" என்றான்.

புதிதாக வந்தவனும் கிழவனைப் போல, இல்லை, கிழவனை விட வயதானவனே. அவனுடைய துணிகளெல்லாம் ஒரே கந்தலாயிருந்தன. அவன் 'வெடவெட' வென்று நடுங்கிக் கொண்டிருந்தான். கிழவன் அன்புடன், "நல்ல வேளை. கொஞ்சம் நெருப்பும், குச்சியும் இருந்தது. அதோடு இரண்டு வாழைப்பழம் கூட மிச்சம் இருக்கிறது. இதைச் சாப்பிடு. பசி தீர்த்துக்கொள்ளப்பா" என்று பழத்தை எடுத்துவந்து கொடுத்தான்.

அதே சமயம் தன் அருமை நாய், புதியவன் காலை நக்கிக் கொண்டிருப்பதைக் கிழவன் கண்டான். அவன் ஆச்சரியத்துக்கு அளவில்லை.

மறு நாள் காலை, புதியவன் புறப்படத் தயாராகிக்கொண் டிருந்தான்.

"ரொம்ப சீக்கிரமாக என்னை விட்டுப் போகிறாயே?" என்று கேட்டான் பெரியவன்.

"ஆமாம்" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே புதியவன் சொல்லலானான்: "நீ நினைக்கிறபடி நான் ஒரு தரித்திரம் பிடித்தவன் அல்ல; நான் ஒரு சித்தன். ஆண்டவன் என்னைப் பூமிக்கு அனுப்பி வைத்தார். இந்த உலகத்திலுள்ள உண்மையான மனிதனைத் தேடிப் புறப்பட்டேன் நான். எங்கெங்கோ சுற்றினேன். ஏழை பணக்காரன், அரண்மனை அந்தப்புரம் எல்லாம் சென்றேன். ஆனால், யாரும் என்னை வரவேற்க வில்லை. நீ ஒருவனே, ஒண்டியாக இருக்கும் நீ ஒருவனே, அன்புடன் என்னை உள்ளே அழைத்தாய்; உன் நடத்தை என்

"நீ அங்கே நன்றாகத்தான் இருக்கிறாய்; அங்கேயே இரு........"

மனசை அள்ளிக் கொண்டது. உனக்குத் தகுந்த வெகுமதி கிடைக்கும். கேள்; என்ன வேணுமானாலும் கேள். நீ கேட்டதெல்லாம் கிடைக்கும்."

வயோதிகன் அவருடைய பாதங்களிலே சிரம் வைத்து வணங்கினான். "என் ஐயனே, மன்னித்தருளவேண்டும். என்னால் முடிந்ததைச் செய்தேன். குற்றம் குறை இருந்தால் பொறுத்தருள வேண்டும். தாங்கள் மகானாயிருக்கக் கொண்டுதான் என் நாய் கூடத் தங்கள் பாதத்தைத் தடவிக் கொடுத்த தாக்கும்.

"அது சரி. நீ இஷ்டப் பட்டதைக் கேளப்பா" என்றார் அந்த மகான்.

"எனக்கு வேண்டியது ஒன்றும் இல்லை. ஒன்றும் வேண்டாம்" என்றான் விருத்தன்.

"என்ன? ஒன்றுமே வேண்டாமா? இந்தத் துன்பமும் துக்கமும் தொலைய, நிறையப் பணம் வேண்டாமா? விசாலமான நிலங்கள் கூடவா வேண்டாம்? சொல்லு, நீ இஷ்டப் பட்டால் உன்னை ஒரு பணக்காரனாக, இல்லை, ஒரு அரசனாக வேண்டுமானாலும் ஆக்கி விடுகிறேன். நீ வாய் மூடி மௌனமாயிருந்தால், எனக்குப் பொல்லாத கோபம் வந்து விடுமாக்கும்! உன்னை ஒரு 'கர்வக்காரன்' என்று குற்றம் சாட்டவும் இடம் மேற்படும்."

"நீங்கள் இவ்வளவு தூரம் சொல்வதால், நானும் ஒன்று கேட்கிறேன்" என்று கிழவன் ஆரம்பித்தான்: "எனக்கு வேண்டிய வரம் இது தான். இந்த மாமரத்தில் யார் ஏறினாலும் அங்கேயே ஒட்டிக்கொண்டு விட வேண்டும். என் அனுமதி கிடைக்காத வரை அவர்கள் இப்படி அப்படி நகர முடியாமல் போகவேண்டும். இது ஒன்றே என் ஆசை!"

"அப்படியே ஆகுக" என அவர் கூறிப் பின் மறைந்து விட்டார்.

இதற்குப் பிறகு கிழவனுக்குச் சுக்கிரதசை அடிக்கத் தொடங்கியது. இப்போதெல்லாம் வெளியே போகும்போது நாயையும் தன்னோடேயே அழைத்துப் போகத் தலைப்பட்டான்.

வஸந்த காலம். கொத்துக் கொத்தாக மாங்கனிகள் பழுத்துத் தொங்கின. வழக்கப்படியே சிறுவர்கள் வந்தார்கள். ஆனால், அவர்கள் மரத்தைத் தொட்டதும் ஒட்டிக் கொண்டு விட்டார்கள்! வரம் பலனளிக்கத் தொடங்கி விட்டது!

"இனி இம்மாதிரி விஷமம் செய்யாதீர்கள். இப்போது போனால் போகிறது. நான் உங்களை விட்டு விடுகிறேன்" என்று பையன்களை இறக்கி விட்டுக்கொண்டிருந்தான். அந்த மரத்தடியிலே கூச்சலும் கொம்மாளமும் அடங்கியது. போக்கிரிப் பையன்கள் 'பாச்சா' ஒன்றும் பலிக்கவில்லை. அவர்கள் கொட்டம் அடங்கியது. இதன்பின் 'மாம்பழத் திருடர்' அந்தப் பக்கம் தலை காட்டுவதில்லை!

ஒரு நாள், குடிசைக்கு வெளியேயிருந்து அவனை யாரோ உரக்கக் கூப்பிட்டார்கள். நாய்கூடப் பயத்தால் அலறியது. கிழவனும் ரொம்ப அரண்டு போனான். வெளியில் தலையை எட்டிப் பார்த்தான். அங்கே மரணதேவன் தயாராகக் காத்திருந்தான்!

"நீங்கள் எங்கு வந்திருக்கிறீர்கள்?" என்று கிழவன் கேட்டான்.

"உன்னைப் பூலோகத்திலிருந்து கூட்டிப் போக வந்திருக்கிறேன்."

"என்ன இப்போதேயா?"

"ஆமாம், உனக்கும் ரொம்ப வயதாகி விட்டதல்லவா? நீயும் கூனிக் குறுகி,மெலிந்து போனாய். அதோடு பரம ஏழை......"

"இல்லை, இல்லை. அப்படியொன்றும் ஏழை அல்ல, ஸ்வாமி; அப்படி ஒன்றும் வயதும் ஆகி விடவில்லை. போன வருஷப்பிறப்பின் போது தொண்ணூற்று ஒன்பது என நினைக்கிறேன். நீங்கள் சொல்லுகிறபடி அப்படி ஒன்றும் மெலிந்தும் போகவில்லை."

"அது விஷயம் எப்படியோ இருக்கட்டும். என்னோடு புறப்படு; அங்கே ரொம்ப சௌகர்யமாயிருக்கலாம்" என்றான் மரணதேவன்.

"சரி, ஆகட்டும். இதோ வருகிறேன். ஸ்வாமி, ஒரு காரியம் எனக்காக நீங்கள் செய்ய வேண்டும். வருகிற வழியில் சாப்பிட்டுக் கொண்டு போக, என் உயிருக்குயிரான மாமரத்திலிருந்து இரண்டு பழம் பறித்துக் கொடுங்கள். உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு" என்றான் கிழவன்.

மரணதேவன் 'சரி' யெனச் சம்மதித்து மரத்தில் ஏறினான். ஆனால், அடுத்த கணமே மரம் தன்னைப் பற்றிக்கொண்டு விட்டதைக் கண்டான். "இதென்ன இழவு! இம்மியும் நகர முடியவில்லையே? கொஞ்சம் உதவிக்கு வாப்பா" என்று கதறினான் மரணதேவன்.

"நீ அங்கே நன்றாகத்தான் இருக்கிறாய் அங்கேயே இரு; எனக்குச் சொர்க்கத்துக்குப் போக இன்னும் அவசரம் இல்லை!" என்று சொல்லி விட்டு, கிழவன் வேறு காரியங்களைக் கவனிக்க ஆரம்பித்தான்.

இதற்குப்பின் வருஷங்கள் வந்து போய்க்கொண்டே இருந்தன. அந்தக் கிராமம், அக்கம் பக்கம் எங்கும் சாவே கிடையாது. பசியும் பட்டினியும், மக்களை மாய்க்கவில்லை! பெரிய பெரிய யுத்தங்கள் நடந்தாலும், படுகாயப் பட்டார்களே தவிர, பிராணனை மட்டும் யாரும் இழக்கவில்லை; கண், காது, கால் என்ன போனாலும் உயிர் மட்டும் போகவில்லை. இதனால் பலருக்கு வெறுப்பு. ஆனாலும் என்ன செய்வார்கள்? சீவன் மட்டும், இந்தச் சடலத்தை விட்டுப் பிரியவில்லை! இப்படிச் சென்றன பல வருஷங்கள்!

கடைசியாக மரணதேவன் இந்த மரத்தில் வந்து மாட்டிக்கொண்டிருக்கிற விஷயம் தெரிந்தது. பலர் கிழவனுடைய காலில் வந்து விழுந்து வணங்கினார்கள். "எங்களுக்கு வாழ்க்கை சலித்துவிட்டது. கொஞ்சம் இங்கிருந்து தாட்டி விடப்பா" என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டார்கள்.

கிழவனுக்குத் தன்னால் நிகழ்ந்த இந்தப் 'பிரளயங்கள்' தெரிய வந்

தது. அவன் மரணதேவனிடம், "நான் உன்னை விட்டு விடுகிறேன். ஆனால் நீ எனக்கு ஒரு வாக்கு அளிக்க வேண்டும்" என்றான்.

"சரி, சொல்லு" என்றான் மரண தேவன்.

"இஷ்டப் பட்டபோதுதான் நானும், என் நாயும் வருவோம். அதுவும் நான் மூன்று தடவை உன்னைக் கூப்பிட்டால்தான் நீ இந்தப் பக்கம் கால் எடுத்து வைக்க வேண்டும்" என்றான் கிழவன்.

அதற்குப் பிறகு ஒவ்வொருவரையும், சுவர்க்கத்துக்கோ அல்லது நரகத்துக்கோ அனுப்ப வேண்டிய இடத்துக்கு அனுப்பி வைத்தான் மரணதேவன். ஆனால் கிழவனும் நாயும் தங்கள் தங்கள் வாழ்க்கையிலே திருப்திப்பட்டு, பின்னும் உயிருடன்தான் இருந்து கொண்டிருந்தார்கள்! அந்தப் பரதேசிக் கிழவன் ஒரு தடவைகூட மரணதேவனை அழைக்கவே இல்லை.......

கிரீஸிலும் ரோமிலும் முன் இருந்த மக்கள் உப்பை உட்கொள்ளுவதிலே மிகுந்த பிரியமுடையவர்களாய் இருந்தனர். இப்பொழுதும் உப்பு அந்நாடுகளில் மிக விசேஷமாயிருக்கிறது. ஒவ்வொருவரும் சராசரி ஒரு வாரத்துக்கு ¼ ராத்தல் உப்பு சாப்பிடுகிறார்கள்.

"தான் செய்வதை யாருங் கண்டு பிடிக்க முடியாது என்று தனக்கு நிச்சயமாய்த் தெரியும்போது ஒரு மனிதன் என்ன செய்வானோ அதுவே அவனது உண்மையான யோக்கியதையின் அளவாகும்."—மெக்காலே (ஆங்கில சரித்திராசிரியர்).

ரஸிகர்: நண்பரே! உங்கள் சித்திரங்களில் எதைப் பார்த்தாலும் ஆச்சர்யத்தால் நான் திகைத்துப் போகிறேன்.

சித்திரக்காரர்: எப்படி எழுதினேன் என்றா?

ரஸிகர்: இல்லை; ஏன் எழுதினீர் என்று.

"சில மனிதர்களிடம் நீங்கள் எதைச் சொன்னாலும் நம்பிவிடுவார்கள்- ஆனால், காதோடு சொல்லவேண்டும்." — ஓர் அமெரிக்கப் பத்திரிகை.

<u>கவிதை லட்சணம்:</u>

ராபர்ட் பிரிட்ஜஸ்

காவிய உள்ளமும் பாஷைச் சிறப்பும்

வி. ஆர். எம். செட்டியார் பி. ஏ.

ராபர்ட் பிரிட்ஜஸ் நிறைந்த காவிய உள்ளம் படைத்தவர் — ஓர் அருட் கவி. அவரது கவிதை உள்ளத்தில் ஊறிச் சிலிர்த்து ஸௌந்தரிய உணர்ச்சியுடன் புஷ்பிக்கும் போது, சொற்கள் ஒரு தனி ஜீவகளையைப் பெற்று மிளிர்கின்றன.

ஒரு சத்திய சொரூபியான சர்ப்பம், உணர்ச்சியின் உயரத்தில் மண்டல மிட்டுத் தலையாட்டி உள்ளத்தை விமர்சனம் செய்து நடிப்பது போல, ஓர் உண்மைக் கவி, உணர்ச்சி வெள்ளத்தில் மனோசாந்திக்காக மண்டல மிட்டுக் காவிய உள்ள விமர்சனம் செய்கிறான்; அவனே மொழி வளர்க்கும் தந்தை, அவனே பாஷைச் சிற்பி.

பட்சிகள் பறக்கும் லாவகத்தையும், குத்துபோடும் விந்தையையும், மூக்கின் விசித்திர முனையையும், நெல்லை அவை கவ்வும் அழகையும் ஒருவன் ஆழ்ந்து கவனித்துச் சிந்தித்தால், கடவுள் எப்படிச் சிருஷ்டியின் சிற்பியாக அமைகின்றான் என்பது நன்கு புலனாகும்.

நமது கவி பிரிட்ஜஸ் (Poet-Laureate) சுந்தர சுதந்திரச் சொல் லோலியத்தின் மூலம் பாஷைச் சிற்பம் வளர்க்கின்றார். பாஷையில் தம் மேதையால் புதிய சொல்லிணைப்பு மரபுகளைச் சிருஷ்டியாவிட்டாலும், பாஷைக்கு ஒரு நவமான அழகையும் சொற்களுக்குச் சுதந்திரமான தொரு அர்த்த சப்த கௌரவத்தையும் விளைவிக்கும் திறமை யுடையவர். சிதறும் எண்ணங்கள் சொல்லின் வலையில் சிக்குண்டு கவிதா சன்னதப் பேனாமுனைத் துறைமுகத்துக்குத் தத்தளித்து நீந்தி வருகின்றன. பாஷையின் உணர்ச்சிக் கரையில் சொற்கள் ரீங்கார மிடுகின்றன. பிரிட்ஜஸின் கவிதா ரகஸ்யம், அழகின் உயரத்தினின்று சந்தோஷ அலைகளை உட்பருகி, வாசகர்களுக்கோர் சாந்தியைத் தருகின்றது.

அவர் எழுதிய பாஷைச் சிற்பமான 'அழகுச் சாஸனம்' (Testament of Beauty) எனும் நூலில் அழகின் உண்மை, கவிதா சன்னத இதயத்தில் ஜீவன் பொழிந்துகொண்டிருப்பதை நாம் உணர்ந்து பருகுகிறோம். எழுதும் நடையை அவர் அனுபவித்து அடக்கி ஆள்கின்றார். இவ்வழகுச் சுரங்கத்தில், பிரிட்ஜஸின் உண்மைக் கவிதை பரிமளிக்கின்றது.

பிரிட்ஜஸ் இயற்றிய கவிதைக் கோவைகள், ஒளித்திரளிலே உணர்ச்சிப்பெருக்கு இசை பெற்றுப் பாஷையாய்ப் பரிணமித்த நடைச் சித்திரங்களாகின்றன. அவர் எழுதிய துண்டுக் கவிகள், (Sonnets) புரோமிதியஸ் (Prometheus) முதலியவைகளில், சொற்கள் ஆழமின்றித் தயங்குகின்றன. ஆனால், 'அழகுச் சாஸன'த்தில் உணர்ச்சிச் சிகரம் சொற்சிகரமாகவும் பொற்சிகரமாகவும்மாறி, நடையும் தந்த நடையாக ஜொலிக்கின்றது. ஷேக்ஸ்பியர் நாடகங்களில் சொற்கள் படிப்படியாக வளர்ச்சியுற்று இறுதியில் புஷ்பிப்பதுபோல், நமது பிரிட்ஜஸின் நடையும் முடிவில் முதிர் கனியாக மாறுகின்றது. சொல்லலைகள் சப்த ஜாலங்களாக ஆங்கில பாஷையைப் புதுப்பிக்கின்றன. நமது கவியின் உள்ளத்தினின்று மிதந்துவரும் சொற்கள், மாதள முத்துக்கள்போல், தனி இனிமையுடனும் தனி வர்ணத்துடனும் ஜொலித்து ஜீவிக்கின்றன. 'நீதிமன்ற ஹாஸ்யம்' (The Humours of the Court) என்பதில் நமது கவியின் உள்ள நிகழ்ச்சிகள் நிமிஷ விந்தைகளாக உணர்ச்சிக்கடலில் பிறிட்டுக் கொந்தளிக்கின்றன.

1914-1918-ஆம் ஆண்டு யுத்தத்தின் போது நமது கவிபாடிய புது முறையான பாசுரங்கள் ஆழ்ந்த நடையை அணைந்து பரந்து விரிகின்றன. பாட்டின் பெயர்களே பிதிர்கள்

போல் தோன்றுகின்றன. நடையின் மின்னலில் பாமர ஜனங்களின் மனம் குழம்புகிறது. உள்ளக் கொந்தளிப்பும் பாஷைக் கொந்தளிப்பும் இணைய, சப்த ஜாலங்களைக் கிளறி, எழுத்துக்களை உச்சரிப்பின் மேடு பள்ளங்களை ஒட்டி அடுக்குகின்றார். மோனையின் மின்னலில் பாஷையின் யுத்த நதி பிறக்கின்றது.

‘அழகுச் சாஸனம்’ 4100 வரிகள் அடங்கிய மணி மண்டபம்; கலைக்கோபுரம்; சிந்தனைத் தீபம். நீதியின் முனைகள் புரண்டு புரண்டு ஆத்ம வெள்ளத்தில் சந்திக்கின்றன. வேதாந்தத்தின் சிகரமே கவிதை. உலகத்திலுள்ள சகல வஸ்துக்களும், உண்மை தோய்ந்த அழகின் மார்பில் உறங்கி விழிக்கின்றன. 80 வயதுக்கு மேற்பட்ட நமது கவியின் அனுபவக் களஞ்சியமாக இந்த நூல் விளங்குகின்றது. வாழ்க்கையில் வளரும் வர்ணப் படிகளைக் கவிக் கண்ணுடன் நோக்குகின்றார். இயற்கையின் கோர வடிவமும் மனித வாழ்க்கையின் இன்ப துன்பப் பிணைப்பும் கடவுளின் உட்சோதியை மலர்ப்பிக்கும் அடிப்பீடங்களாக அமைகின்றன. வாழ்க்கையின் விந்தை, தெய்வ சோதனையாக ஆத்ம ஜன்னலின் முன் எட்டிப் பார்க்கும் மல்லிகைபோல் மயங்கி ஊசலாடுகின்றது.

சிந்தனைத் திரள்கள் ஆழ்ந்து வேரூன்றிக் கவிதைச் சிகரங்களாக வளர்ந்தோங்கி, கனிக் கொத்துகளாக, காவிய கங்கையில் மிதந்து வருகின்றன! அதன் நீர்க்குழிகள், சிந்தனைக் கரையில் வயிரக் குன்றுகள் போன்றும், மாணிக்கப் பர்வதங்கள் போலும், தென்னைமரத்தின் உச்சியில் கொலு வீற்றிருக்கும் பசுங் கிளியின் காவிய உள்ளம் போன்றும், நமது செவிப்பட்டு இதயத்தை எட்டிப் பிடிக்கின்றன. பிரிட்ஜஸின் நடை ஒரு ஆல விருட்சம் போன்றது. எண்ணம் கூந்தல் மயம். சொற்கள் சீறிச் சீறி வளைந்து வளைந்து வட்டமிட்டு, மின்னி மின்னி, சிறகு பெற்று வானிற் பறந்து, இறுதியிலே கீத முனையில் சாந்தி யடைகின்றன. சொல்லலைகள் எண்ணச் சிலைகளாக எழுந்து நின்று கண்சிமிட்டிப் புன்முறுவல் பூக்கின்றன.

ஓர் உண்மைக் கவி, தன் மனக் கொந்தளிப்பையே முன்னால் சாந்தப்படுத்திக் கொள்ளுகின்றான்; அதுவே கவிதைக் கடலின் கீத கர்ஜனை—காவிய உள்ள விமர்சனம். இதையே நமது அருட்கவி பாரதியாரும் அடிக்கடி தமது அருவிப் பாசுரங்களில் வற்புறுத்துகின்றார்.

முதல் பார்ஸி கவர்னர்

இந்தியாவுக்கு முதன் முதலாக வந்து குடியேறிய பார்ஸிக்காரர் தோராப்ஜி என்பவர்தான். அவரது மகனான ரஸ்டம்ஜியின் வாழ்க்கை மிகவும் ரஸமானதாகும்.

பிரிட்டிஷாருக்கு அவர் செய்த சேவையின் பலனாய், பம்பாய் கவர்னர் பதவி வகிக்கும் கௌரவம் அவருக்குக் கிடைத்தது. அவர் இரு முறை மணந்தார். இரு மனைவிகளிடத்தும் அவருக்குச் சந்ததி பிறக்கவில்லை. 75 வயதாகி விட்டது. புத்திரப்பேறு அடையும் ஆசையையே அவர் விட்டுவிட்டார்.

இச்சமயம் இரானிலே யிருந்த ஒரு பார்ஸி, அங்கு நிகழ்ந்த மதக் கொடுமை தாங்காமல், பிரோஷா என்ற தமது பதினான்கு வயது மகளுடன் இந்தியாவுக்கு ஓடி வந்தார். அவளுக்கு ஒரு சுயம்வரம் நடந்தது. கோட்டைக்கு அருகே பம்பாய்ப் பார்ஸி புருஷர்களெல்லாம் கூடினார்கள். யாரும் எதிர்பாராதபடி, 75- வயதுக் கிழவரான ரஸ்டம்ஜியை அவள் தேர்ந்தெடுத்து விட்டாள்.

ரஸ்டம்ஜி குழப்பமடைந்து, உடனே அவ்விடத்தை விட்டு அகன்றார். "வேறு யாரையாவது தேர்ந்தெடு" என்றால், "மாட்டேன்" என்று கண்டிப்பாய் மறுத்துவிட்டாள் பிரோஷா. கடைசியிலே, ரஸ்டம்ஜியையே அவள் மணந்தாள். அழகும் அறிவும் நிறைந்த நான்கு குழந்தைகளை ரஸ்டம்ஜிக்கு அவள் பெற்றுத் தந்தாள்.

ரஸ்டம்ஜி 95- வயதுவரை வாழ்ந்தார். இரண்டு புதல்வருக்குத் தம் கையாலே மணமுடித்தும் பார்த்தார். பிரோஷா 80 வயது வரை வாழ்ந்து, 1808-ஆம் வருஷம் காலமானாள்.

ஒரு பத்திரிகை நிருபர் பெருமை

இன்று உலகிலே பத்திரிகை நிருபர்களுக்குள்ளே தலைசிறந்து விளங்குபவர் விக்காம் ஸ்டீட் என்ற ஆங்கிலேயர்தான். இப்போது அவருக்கு 69 வயதாகிறது. பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் இலாக்காவில் முக்கியப் பதவி வகிக்கிறார். உலகெங்கும் கோடிக் கணக்கானவர், அவரது உலக வர்த்தமான விமர்சனங்களைத் தினந்தோறும் ரேடியோவில் கேட்டு வருகிறார்கள்.

1919-ஆம் ௵ லார்டு நார்த் கிளிப் இவரைத் தமது ‘டைம்ஸ்’ பத்திரிகையின் ஆசிரியராக நியமித்துக்கொண்டார். விக்காம் ஸ்டீட் தமது மனச் சாட்சிப்படி சுதந்திரமாய் நடப்பவர். ஆகையால், அந்தப் பதவி வகிக்கத் தொடங்கிய மூன்றாவது வருஷம், முதலாளி நார்த் கிளிப்புக்கும் இவருக்கும் ஏதோ ஒரு அபிப்பிராய பேதம் ஏற்பட்டபோது இவர் விலக வேண்டியதாயிற்று.

என்னதான் மன வருத்தத்துடன் பிரிய நேர்ந்தாலும், இவர் பெருமையை நார்த் கிளிப் அறிந்திருந்ததால், லட்சம் பவுனுக்கு ஒரு ‘செக்’ எழுதி அதை இவருக்கு ஸன்மானமாக அனுப்பினார். விக்காம் ஸ்டீட் அந்தச் ‘செக்’கைக் கொடுத்துப் பணம் வாங்கவில்லை. அப்படியே சட்டமும் கண்ணாடியும் போட்டு வீட்டிலே மாட்டிவிட்டார்! பணத்தைவிட ஒரு பத்திரிகை நிருபனது கௌரவம் பெரிது என்று அவர் இதன் மூலம் நிலைநாட்டியது உலகப் பிரசித்தமாகி விட்டது!

பறித்த பூக்கள்.

வேதத்தில் தேச பக்தி

ஹிந்து வேதங்கள் ஐயாயிரம், ஆறுயிரம் வருஷங்களுக்கு முற்பட்டவை என்று சரித்திராசிரியர்கள் கூறுகிறுர்கள். வேத ரிஷிகளின் தேச பக்தி, இன்றும் நமக்கு நிர்மலமான உதாரணமாய்ப் பொலிகின்றது. 'கலைமக'ளில் ஸ்ரீ ஆர். கே. பார்த்தசாரதி, எம். ஏ., எழுதியுள்ளதொரு கட்டுரையில், அதர்வண வேதத்திலுள்ள பிருத்வீ ஸூக்தத்தின் மந்திரங்கள் சிலவற்றை இதற்கு மேற்கோளாய் அவர் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறுர் :

(1) ஓ பூமியே, நீ எனது தாய்; நான் உனது சேய். நீ எனக்குப் பாலூட்டு.

(2) நான், தாய் நாட்டில் வாழும் நான், ஒருவராலும் துன்புறுத்தப் படவில்லை; அடக்கப் படவில்லை; ஒடுக்கப் படவில்லை. நான் எல்லோரையும் அடக்குகின்றேன். நான் ஒவ்வொரு தேசத்தையும் வெல்கின்றேன்.

(3) அநேக பாகங்களை யுடையதும், அநேக பாஷைகளைப் பேசும் மக்களைப் பெற்றதும், அநேக கொள்கையினர் அடங்கியுள்ளதும், அநேக பழக்க வழக்கத்தினரைக் கொண்டதுமான இத்தேசம், பால் தரும் பசுவினைப் போல், நமக்கு, வேற்றுமையின்றி ஆயிரக்கணக்கான நன்மைகளைக் கொடுத்து அருள்புரிவதாகுக!

வால் நட்சத்திரங்கள்

இப்போது இந்தியாவின் பல பாகங்களில் ஒரு வால் நட்சத்திரம் காணப்படுவதாகச் செய்திகள் வெளியாகி வருகின்றன. சென்னை மாகாணத்தின் பல பாகங்களிலும், அதைப் பலர் கண்டிருக்கிறுர்கள். தலை கீழ்ப்புறமாகவும், வால் மேலாகவும் தென் மேற்குப் பக்கத்தில் தெரிந்தது. இதற்கு முன் 1910-ல் தான் வால் நட்சத்திரம் தெரிந்தது. இத்தகைய வால் நட்சத்திரங்களைப் பற்றிய சில ரஸமான விவரங்கள் 'குமர'னில் காணப்படுகின்றன :

சாதாரண நட்சத்திரத்தோடு வால் போன்று நீளமாக ஒரு ஒளி தெரிவதால் இதை 'வால் நட்சத்திரம்' என்று அழைக்கின்றனர். ஆங்கிலத்தில் இதன் பெயர் 'காமெட்.' கிரேக்க பாஷையில் 'காம்' என்றுல் தலை யென்று பொருள்.

கிரகங்களைப் போலன்றி வால் நக்ஷத்திரங்கள் சுயப் பிரகாசம் உடையவை. ஒரு வால் நட்சத்திரத்தைப் போல் மற்றெரு வால் நட்சத்திரம் இருப்பதில்லை. சிலவற்றுக்கு வால் இருக்காது. 1744-ல் தோன்றிய நட்சத்திரத்துக்கு 6 வால்கள் இருந்தனவாம். சிலவற்றுக்குப் பழைய வால்கள் தேய்ந்து புதிய வால்கள் முளைக்கவும் காணப்பட்டிருக்கிறது. 1910-ல் தோன்றிய 'ஹாலி'யில் இவ்வாறு தென்பட்டது. 1811-ல் தோன்றிய ஒரு நட்சத்திரத்தின் தலைப் பாகம் மட்டும் 12,00,000 மைல் குறுக்களவுடையதாயிருந்தது. 1843-ல் ஒரு நட்சத்திரத்தின் வால் மாத்திரம் 15,50,00,000 மைல் நீளமிருந்ததாம்!

வால் நட்சத்திரங்கள் மிக லேசானவை. இதனுல் அவை சமீபத்திலுள்ள கிரகங்களைப் பாதிப்பதில்லை. ஹாலி என்ற ஆங்கில வான சாஸ்திரி 1704-ல், சில வால் நட்சத்திரங்கள் குறிப்பிட்ட காலத் தவணைகளில் மீண்டும் மீண்டும் காட்சியளிக்கும் என்று கண்டு பிடித்தார். அவர் பிரத்தியேகமாக ஆராய்ச்சி செய்த வால் நட்சத்திரத்துக்கு அவரது பெயரே இடப்பட்டிருக்கிறது. அது 75 வருஷங்களுக்கு ஒரு முறை வானில் தோன்றுகிறது. அவர் சொன்னது உண்மையாயிற்று. அந்த நட்சத்திரம் 1759-லும் 1835-லும் 1910-லும் காணப்பட்டது.

ஹாலி வால் நட்சத்திரத்தைத் தவிர, வேறு பல நட்சத்திரங்களும் இவ்வாறு குறித்த தவணைகளில் தென்பட்டு வருகின்றன. சில ஒரே முறை தோன்றி, பின் மறைந்து போவதும் உண்டு.

இந்த வால் நட்சத்திரங்கள் சூரியனைச் சுற்றி வட்டமான பாதையில் செல்வதில்லை; அவை சுற்றும் பாதையின் வடிவத்தைப் பொறுத்து அவை அடிக்கடி தென்படுவதும், ஆயிரக் கணக்கான வருஷங்களுக்குத் தென்படாமற் போவதும் அமைகின்றது.

சுவாமி விவேகானந்தர்

ஹிந்து மதத்தின் புனிதத்தை நவீன நாகரிக உலகத்துக்கு எடுத்து விளக்கிய பெரியார் சுவாமி விவேகானந்தர். அவருடைய பின்வரும் சரித்திரச் சுருக்கத்தைத் 'தனவணிகன்' வெளியிட்டுள்ளது :

1862-ஆம் ௵ ஜனவரி மாதம் 19-உ கல்கத்தாவில் திரு. விசுவநாதத்தாவின் குழந்தையாகப் பிறந்தார் விவேகானந்தர்.

நரேந்திரர் எனும் இளமைப் பெயர் பூண்ட விவேகானந்தர், உரிய காலத்தில் கல்லூரிப் படிப்பை முடித்து, பி. ஏ. பட்டம் பெற்று, சட்ட ஞானத்துறையில் செல்ல ஆயத்தமானுர். இந்தப் பருவத்தில் இவரது மனம் பல சந்தேகங்களினுல் தவித்தது. தமது சந்தேகங்களைத் தெளிந்து கொள்வதன் பொருட்டு, பல சமயப் பெரியார்களை விசாரித்தார். அவரது மனக்குழப்பம் நீங்கவில்லை.

இத்தகையதோர் தருணத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரது தரிசனம் கிடைத்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணரது கருணை நிறைந்த உள்ளம், நரேந்திரது மனக்கலக்கத்தைப் போக்கும் மருந்தாயிற்று. குரு சிஷ்ய பாவத்தில் இரு பெரியார்களும் ஐக்கியமாயினர். உலகை உய்விக்க வேண்டித் தமக்குக் கிடைத்த சிஷ்யன் நரேந்திரன் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் களிகூர்ந்தார். தம்மை உய்விக்க வந்த தமது அரிய குருநாதர் ஸ்ரீ பரமஹம்சர் என்று ஸ்ரீ நரேந்திரர் ஆனந்த பரவசரானுர்.

இத்தகையதோர் நிலையில் சுவாமி விவேகானந்தரின் அருமைக் குருநாதர் ஸ்ரீ பரமஹம்சர் 1886-ஆம் ௵ ஆகஸ்டு 16 உ பேரின்பப் பெரு நிலையில் ஐக்கியமானுர். இதற்குப் பிறகு அமெரிக்காவில், சிகாகோ நகரில் சர்வமத மகாநாடு நடைபெற ஏற்பாடாயிற்று. இந்த மகாநாட்டுக்கு, சுவாமி விவேகானந்தரை அனுப்பி வைத்த பாக்கியம் தமிழ் நாட்டைச் சார்ந்தது.

சர்வமத மகாநாட்டிலே சுவாமி விவேகானந்தர் செய்த பிரசங்கம் எனும்

தேனே அனைவரும் பருகிக் களித்தனர். இந்து மதத்தின் சமரஸத்தன்மை, தாராள நோக்கம், புனிதக் கொள்கைகள் முதலியவை அனைவருக்கும் பிரமிப்பையளித்தன.

விவேகானந்த சுவாமி இந்தியாவில் கன்னியா குமரி முதல் இமயம் வரை சுற்றுப்பிரயாணம் செய்தும், அமெரிக்காவிலும் மேல் நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்தும், இந்தியாவின் உண்மை நிலையையும், ஹிந்து மதத்தின் புனிதமான கொள்கைகளையும் நன்கு விளக்கினர்.

முட்டாளுடன் சந்திப்பு

சுவாமி விவேகானந்தரின் அஞ்சா நெஞ்சமும், தேச பக்தியும் பிரசித்தமானவை. ஒரு சமயம் இரு ஆங்கிலேயரின் துடுக்கை சுவாமிகள் அடக்கிய ஒரு ரஸமான சம்பவத்தை, ஸ்ரீ. சுப. பழனியப்பா 'தனவணிக' னில் குறித்திருக்கிறுர் :

விவேகானந்த சுவாமிகள் ரயில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். இரு பிரயாணிகள் அவரைப்பற்றி ஆங்கிலத்தில் துச்சமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஸ்வாமிகளுக்கு ஆங்கிலம் தெரியா தென்பது அவர்கள் துணிபு. பிறிதொரு ஸ்டேஷனில் வண்டி நின்றதும் அவ்விடத்திய அதிகாரி ஒருவரைத் தண்ணீர் வேண்டி ஸ்வாமிகள் ஆங்கிலத்தில் கேட்டதை யறிந்த அந்தப் பிரயாணிகள் வியப்புற்றனர். "நாங்கள் பேசியதை நீர் எவ்விதம் சகித்தீர்?" என்று அவர்கள் இவரை வினவினர்கள். அதற்கு ஸ்வாமிகள் "நான் முட்டாள்களைக் காண்பது இதுவல்ல முதல் தடவை" என்று அமைதியாய்க் கூறினர். இவ் வார்த்தைகளால் ஆத்திரமூண்ட அந்தப் பிரயாணிகள் அவரைச் "சண்டைக்கு வாரும்" என்று சவால் கூறினர்கள். ஸ்வாமிகள் அதற்கும் ஆயத்தமானர். அவரது பருத்த புஜங்களைக் கண்ட வழிப்போக்கர்கள் பேசாமல் திரும்பி விட்டார்கள்!

லீலா தேசாய்

ஸ்ரீமதி லீலா தேசாயின் இந்த வாழ்க்கைக் குறிப்புகள் 'ராஷ்டிர வாணி'யில் பிரசுரமாகி யுள்ளன :

லீலா தேசாய் பரம்பரைப் பெரிய மனிதர்கள் குலத்தில் பிறந்தவள். அவளுடைய தந்தையான டாக்டர் தேசாய் அமெரிக்காவில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கையில், லீலா பிறந்தாள்.

தாய் வழியில் வங்கக் கவி ரவீந்திரநாத டாகூருக்கு அவள் உறவாவாள். சிறு வயதிலிருந்தே அவளுக்குக் கலைப் பைத்தியம் உண்டாம். மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறி மேல் படிப்புக்குப் போனள். அப்போது உதயசங்கரின் நாட்டியத்தைப் பார்த்ததும் அவளுக்கு அந்தக் கலையில் ஆர்வம் ஏற்பட்டது. உடனே படிப்பை விட்டுக் கலையில் ஈடுபட்டாள்.

லேடி இர்வின் காலேஜில் நாட்டிய ஆசிரியையாக நியமிக்கப்பட்டாள். அங்கிருக்கும் பொழுதே இந்தியாவின் பல பாகங்களுக்கும் சென்று கதக்களி, மணிப்புரி ஆகிய நாட்டிய முறைகளைப் பயின்றாள்.

அவளுடைய புகழ் ஓங்கியதும் சினிமாவுக்கு அழைக்கப்பட்டாள். 'பிரஸிடெண்ட்,' 'வித்யாபதி' ஆகிய முதல் இரு படங்களும் அவளுக்குப் பெரும் புகழைத் தந்தன.

லீலா தேசாயின் நாட்டியத்துக்கும், இதரரின் நாட்டியத்துக்கும் முக்கியமான வித்தியாசம் உண்டு. சம்பிரதாய சுத்தமாக உதயசங்கர் போன்றோரும், கர்நாடக சுத்தமாக பாலசரஸ்வதி போன்றோரும் ஆடுவதை நாம் பார்த்திருக்கிறோம். இதன்றி, பரம்பரையான திட்டமில்லாமல் அங்கங்கே ஆடப்படும் நாட்டு நாட்டியங்களையும் கண்டிருக்கிறோம். லீலா தேசாயின் நடனம் இரண்டிலும் சேராதது. இரண்டையும் வெகு எளிதில் எல்லோரும் ரஸிக்கும் வகையில் ஒன்றுசேர்த்து லீலா நடித்துக் காட்டுகிறாள். நாட்டியத்துடன் நாடக பாவத்தையும் குழைவோடு சேர்ப்பது அவளுடைய விசேஷ அம்சமாகும்.

மகாத்மா தமாஷ்

'குமுதினி' என்ற பெண்மணியின் கட்டுரைகள் மிக ரஞ்சிதமானவை. அவர் காந்திஜியின் ஸேவா கிராமத்துக்கு ஒரு முறை சென்றிருந்ததைப்பற்றி 'கலைமகள்' ளில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதன் இறுதிப் பகுதி இது :

நான் அங்கே இருந்த சமயம் காந்திஜீ என்னைப் பரிகசித்துக் கிண்டல் செய்து கொண்டே இருந்தார்.

"எனக்குத் தமிழ் சொல்லிக்கொடு" என்று ஹிந்தியில் கேட்டார்.

"உங்களுக்குத்தான் அது தெரியுமே" என்று நான் தமிழில் பதில் சொன்னேன்.

"தெறியும். உம், நன்றுய்த் தெறியும்" என்று அவரும் தமிழில் அழுத்தமாகச் சொல்லிப் பலமாய்ச் சிரித்தார்.

நான் பேசும் ஹிந்தி அவருக்கு வேடிக்கையாக இருக்கும். "உனக்கு ஹிந்தி வெகு நன்றாகத் தெரியு மல்லவா?" என்பார். அவர் என்னதான் பரிகசித்தாலும் என்னுடைய அரைகுறை ஹிந்தி ஞானத்தைப் பற்றின பெருமை என்னைவிட்டு அகலுமா? நான் ஹிந்தியில்தான் அவருடன் பேசுவேன்.

நான் அவரிடம் சென்ற காரியம் முடியவில்லை; ஆனால் உத்தேசித்த காலம் ஆகிவிட்டபடியால் திரும்பிவர வேண்டிய தாயிற்று.

"இன்னும் சில தினங்கள் இருந்து விட்டுப் போ" என்றார் காந்திஜீ, கருணையுடன்.

நான் தயங்கினேன்; பதில் சொல்லக் குழப்பமாக இருந்தது; பிறகு உடன் வந்தவர் மூலமாக, கணவர் சௌகரியத்தைத் தெரிந்து கொள்ளவேண்டுமென் பதைச் சொன்னேன்.

"உன் கணவருக்கு நீ அடிமையா?" என்று அவர் கேட்டார்.

எனக்குச் சிரிப்பு வந்தது. இருந்தும், "நீங்கள்தான் போன முறை நான் வந்த சமயம், பெண்கள் கணவர் சொல்வதைக் கேட்டுக் கீழ்ப்படிந்தே நடக்கவேண்டும் என்று உபதேசம் செய்தீர்களே!" என்று, ஆத்திரப்படுவது போன்ற பாவனையுடன், சொன்னேன்.

சட்டென்று விடை வந்தது: "அந்த வார்த்தையை நான் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்."

இந்தக் கேலிக்கு என்ன பதில் சொல்வது!

பேசாமல் ஊருக்குத் திரும்பி விட்டேன்.

நமது கப்பல் செல்வம்

முன்னொரு காலத்தில் மிகவும் செழித்திருந்த நமது கப்பல் வர்த்தகம் இப்போது க்ஷீணித்துக் கிடக்கிறது. 'இந்தியத் தொழிலாளி' யில் தோழர் கன்னைய நாயுடு, பி. ஏ., பி. எல். அவர்கள் கூறும் இந்த விவரங்கள், நமது கப்பல் வர்த்தகத்தின் தற்போதைய பரிதாப நிலையை நன்கு காட்டும் :

1931-32-ஆம் ஞ இந்தியாவில் பதிவான கப்பல்கள் 409. இவை ஏற்றிச் செல்லக் கூடிய சாமான்களின் மொத்த எடை 2 லட்சத்து 70 ஆயிரம் டன்கள் மட்டுந்தான். ஆனால், பிரிட்டிஷ் தீவுகளில் பதிவான கப்பல்கள் 1 கோடியே 97 லட்சம் டன்னும், அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் பதிவான கப்பல்கள் 1 கோடியே 34 லட்சம் டன்னும், ஜப்பானில் பதிவானவை 4 கோடியே 30 லட்சம் டன்னும், கனடாவில் பதிவானவை 15 லட்சம் டன்னும் ஏற்றிச் செல்லத் தக்கவை. நேர்மையற்ற போட்டி காரணமாகவும், முன்னேற்றத்திற்கான கொள்கைகள் வகுக்கப்படாததினுலும், இந்தியாவில் வியாபாரக் கப்பல்கள் கட்டப்படுவதே இல்லை யென்று கூடக் கூறி விடலாம்.

பாலர் கதை:

பறவை - விலங்கு யுத்தம்

'மாமி'

காட்டிலே ஓர் ஓநாயும் ஒரு கரடியும் உலாத்தப் புறப்பட்டன. அப்போது, எங்கிருந்தோ ஒரு பாட்டுக்குரல் கேட்டது.

"ரொம்ப இனிமையா யிருக்கிறதே! யார் பாடுகிறார்கள்?" என்று கரடி கேட்டது.

"இது தெரியாதா உனக்கு? பட்சிகளின் அரசியான குயில் பாடுகிறது" என்று ஓநாய் சொல்லிற்று.

"அப்படியா, தம்பி? அதன் பாட்டே இவ்வளவு இன்பமா யிருக்கிறதே; அதன் அரண்மனை எவ்வளவு அழகா யிருக்குமோ? அதைப் பார்க்க எனக்கு ஆசையா யிருக்கிறது. காட்டுவாயா?" என்று கேட்டது கரடி.

"ஆஹா!" என்றது ஓநாய்.

பிறகு, குயிலரசியின் கூண்டைக் கரடிக்கு, ஓநாய் காட்டிற்று. கூண்டிலே கன்னங் கறே லென்று சில குஞ்சுகள் இருந்தன.

"பூ! இவ்வளவு தானா? குப்பையில் கிடக்கும் நாறுகளைக் கொண்டு தயாரித்த கூடு தானா அரண்மனை! இந்த மூதேவிக் குஞ்சுகள்தானா இளவரசிக் குயில்கள்!" என்று கேலி செய்தது கரடி. பின்னர், ஓநாயும் கரடியும் போய்விட்டன.

ஆனால், கரடியின் ஏளனத்தைக் கேட்டு, குயில் குஞ்சுகள் மகா கோபம்கொண்டன; தாய்க் குயில் வந்ததும் அதனிடம் முறையிட்டன. "கரடியைத் தண்டிக்காவிட்டால், நாங்கள் ஒன்றும் சாப்பிடமாட்டோம். பட்டினி கிடந்து செத்துப் போவோம்" என்று குஞ்சுகள் கூறின.

"இதோ அப்படியே தண்டிக்கிறேன்" என்று தாய்க் குயில் சொல்லிற்று. கரடியிடம் சென்றது. "எனது பெண்களான இளவரசிகளை நீ இழிவாய்ப் பேசியதால், உன்மீதும் உன் இனத்தார்மீதும் நாம் போர் தொடுக்கிறோம். உஷார்!" என்று குயில் எச்சரித்து விட்டு வந்தது.

கரடி தன் தோழர்களான ஓநாய், நரி முதலிய பல மிருகங்களையும் கூப்பிட்டது. விஷயத்தைச் சொல்லியது. மிருகங்களெல்லாம் போருக்கு ஆயத்தமாயின.

நரியே ரொம்பவும் தந்திரமுள்ள பிராணி. ஆதலால், அதைத் தங்கள் சேனைத் தலைவனாக மிருகங்கள் நியமித்துக் கொண்டன.

பட்சிகளோ, கொசுவைத் தங்கள் சேனாதிபதியாக நியமித்துக்கொண்டன.

யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் உளவறிவதற்காக, கொசு புறப்பட்டது. எதிரிகளின் இருப்பிடத்துக்குப் போய் ஒரு செடியின் இலைக்கு அடியில் ஒளிந்துகொண்டது.

அப்போது நரியும், பிற மிருகங்களும் பேசிக்கொண் டிருந்தன.

"நரியாரே! தாங்களே ரொம்ப யுக்தியுள்ளவர். ஆகையால், எங்கள் சேனைத் தலைவரா யிருக்கிறீர்கள். சண்டையின்போது உங்கள் உத்திரவுப்படி நடக்கக் காத்திருக்கிறோம். அதற்குச் சில அடையாளங்கள் சொல்லுங்கள்" என்று மிருகங்கள் கேட்டன.

"சகோதரர்களே! எனக்கு மயிர் அடர்ந்த அழகான வால் இருக்கிறது. இந்த வாலை நான் உயர்த்திக் கொண்டிருந்தால், ஜயம் நம்முடையதுதான்; எதிரிகள்மீது நீங்கள் பாய்ந்து அடித்துக் கடித்துக் கொல்லவேண்டும். என் வாலைத் தொங்க விடுவேனானால், நாம் தோற்றோம்; நீங்களெல்லாம் ஓட்டமாய் ஓடிவிட

வேண்டும். இதுதான் எனது அடையாளம்'' என்று நரி சொல்லியது.

மிருகங்களெல்லாம் "சரி" என்று ஒப்புக் கொண்டன.

ஒளிந்துகொண்டிருந்த கொசு இதையெல்லாம் கேட்டது. உடனே பறந்தோடிப் போய், தேனீப் படையை அழைத்தது. "நீங்கள்தான் முதலிலே அணிவகுக்க வேண்டும். உங்கள் ஜோலி, நரியின் வாலைச் சூழ்ந்து கொள்வதாகும். அது வாலைத் தூக்கிக்கொண்டிருக்கும். அதை எப்படியாவது கீழே தொங்க விடச் செய்வது உங்கள் கடமை" என்று, தேனீக்களுக்கு, கொசு கட்டளை போட்டது.

இரு கட்சிகளும் யுத்தத்துக்குத் தயாராக அணி வகுத்தன.

முதலிலேயே பத்துப் பதினைந்து தேனீக்கள் நரியின் வாலில் போய் ஒளிந்து கொண்டன.

நரி 'ஜம்' மென்று தன் வாலைத் தூக்கிக் கொண்டது. அந்தச் சமயம் பார்த்து, சுருக் கென்று ஒரு தேனீ கொட்டியது. நரிக்கு வலியும் கடுப்பும் உண்டாயிற்று. இருந்தாலும் நரி பல்லைக் கடித்துக்கொண்டு வலியைப் பொறுத்து, வாலை உயர்த்தியபடியே வைத்துக் கொண்டிருந்தது. பிறகு, இன்னொரு தேனீ கொட்டியது. நரியின் வால் கொஞ்சம் ஆட்டமெடுத்தது. அப்புறம் ஏழெட்டுத் தேனீக்கள் சேர்ந்தாற் போல் கொட்டின. கடுப்பு வலியை நரியால் தாங்க முடியவில்லை. அது வாலைத் தொங்கப் போட்டுவிட்டது.

இதைக் கண்டதும், "தோல்வி வந்து விட்டது'' என்று, மிருகங்களெல்லாம் பயந்து ஓட்டம் பிடித்தன.

"ஜயித்தோம்! ஜயித்தோம்!'' என்று பட்சிகள் கோஷித்தன.

குயில் குஞ்சுகளும் சந்தோஷமடைந்து, உணவைக் கொரிக்கத் தொடங்கின.

பாலர் பாட்டு:

ஊஞ்சலாட்டம்

வித்வான் சு. உமைதாணு பிள்ளை

காலை உன்னி ஆடுவோம்
  கயிற்றைப் பிடித் தாடுவோம்
மேலே வீசி ஆடுவோம்
  வேக மாக ஆடுவோம் (1)

பாடிப் பாடி ஆடுவோம்
  பரிந்து பேசி ஆடுவோம்
கூடிக் கூடி ஆடுவோம்
  குடம் போட்டு ஆடுவோம் (2)

தனித் தனியே ஆடுவோம்
  தம்பி யோடு ஆடுவோம்
தனித் தனியே ஒருவராய்த்
  தள்ளித் தள்ளி ஆடுவோம் (3)

Fashion Insists on-
Smartness!

FOR MODERN SAREES

SHOP AT

RANGOON HALL

RANGOON MERCHANT

★

அழகு செய்வது தற்கால நாகரீக ஆடைகளே!

உயர்தர ஜவுளிக்கு
உத்திரவாதமுள்ள இடம்

ரெங்கோன் - - - ஹால்

கு. அ. அங்கமுத்து முதலியார்

பட்டு ஜவுளி வியாபாரம்,

அம்மன் சன்னதி, :: காரைக்குடி.

தற்கால வயதுடைய உங்கள் போட்டோ ஒன்றை
நவீன முறையில் எடுப்பது அவசியமல்லவா

பின் ஏன் தயங்குகிறீர்கள்?

இன்றே குடும்பத்துடன் வாருங்கள்

திருச்சியில்

போட்டோ எடுக்க ஆண், பெண், குழந்தைகள் சகலருக்கும்
சகலவித வசதிகள் நிறைந்துள்ள இடம்

ராஜா

போட்டோ ஸ்டுடியோ

இரவு பகல் எந்த நேரத்திலும் போட்டோ எடுக்கப்படும்

மற்றும் கலர், என்லார்ஜ்மெண்டுகள் இன்னும் பலவித நூதன போட்டோக்களும் நூதன முறையில் தயார்செய்து கொடுக்கப்படும் போட்டோவுக்கு வேண்டிய நகைகள் உடுப்புகள் நூதன சீன்கள் புதுமோஸ்தரில் தயாரிலிருக்கின்றன.

காபினட் சைஸ் போட்டோ ஒருவருக்கு 1 விதம் அணா 8	வெளியூர்களில் வந்து போட்டோ எடுக்கப்படும்	கார்டு சைஸ் போட்டோ ஒருவருக்கு 3 விதம் ரூ. 1

விவரங்களுக்கு கடிதம் அல்லது நேரில்

ராஜா போட்டோ ஸ்டுடியோ,

(பீமா சென்ட்ரலுக்கு எதிரில்)

கொத்தவால்சாவடி, திருச்சினுப்பள்ளி.

நமது ஏஜெண்டுகள்

1. ஸ்ரீ M. K. பொன்னையா பிள்ளை,
105, நொரீஸ் ரோட்,
கொழும்பு, சிலோன்.

2. ஸ்ரீ K. A. M. P. மீரு சாயபு,
8 & 9, வார்டு ஸ்டிரீட்,
கண்டி, சிலோன்.

3. மெஸர்ஸ் பாரதி பிக்சர் பாலெஸ்,
கல்லுக்கட்டி காரைக்குடி.

4. ஸ்ரீ K. ஸ்ரீனிவாசன்,
லாங் பஜார், வேலூர்.

5. ஸ்ரீ V. B. சாஸ்திரி,
248, பேயர் ஸ்டிரீட், ரங்கூன், பர்மா.

6. ஸ்ரீ V. E. RM. P. பழனியப்ப செட்டியார்,
கண்டனூர், ராமனுதபுரம் ஜில்லா.

7. மெஸர்ஸ் ராஜா பொடி டிப்போ,
செம்மா ஸ்டிரீட், யாழ்ப்பாணம்.

8. மெஸர்ஸ் P. சிவகுரு அண் பிரதர்ஸ்,
108, பிரிக்ஸ் பீல்டு தெரு,
கோலாலம்பூர்.

9. ஸ்ரீ V. R. K. குப்புஸாமி பிள்ளை,
கந்தப்போலா, சிலோன்.

10. ஸ்ரீ A. V. குப்புஸாமி,
ஆசிரியர், திருவள்ளூர்.

11. மெஸர்ஸ் நியூ வவுனியா பக் டிப்போ,
வவுனியா, சிலோன்.

12. ஸ்ரீ R. ராதாகிருஷ்ணன்,
25, வடுகக்காவல் கூடத் தெரு, மதுரை.

13. PL. சொக்கலிங்க செட்டியார்,
விச்வனுதபுரம், ராமச்சந்திபுரம்,
புதுக்கோட்டை ஸ்டேட்.

14. ஸ்ரீ C. K. கணேசன்,
நாசர்கோவில், திருவாங்கூர்.

15. ஸ்ரீ L. அருணுஜலம்,
M. AR. ஸ்டிரீட், தேவகோட்டை.

16. ஸ்ரீ K. A. அய்யாவு அம்பலம்,
திருப்பத்தூர், ராமனுதபுரம் ஜில்லா.

17. ஸ்ரீ K. விச்வனுதய்யர்,
அரிமளம், புதுக்கோட்டை ஸ்டேட்.

18. ஸ்ரீ A. S. பொன்னுஸாமி பிள்ளை,
சீயாழி, தஞ்சை ஜில்லா.

19. ஸ்ரீ A. S. பக்கிரிஸாமி,
135, மார்க்கட் ஸ்டிரீட்,
சிங்கப்பூர், F. M. S.

20. மெஸர்ஸ் சுதேசமித்திரன் புக் - ஸ்டால்கள்

21. ஸ்ரீ E. S. ரெட்டியார்,
பாண்டிச்சேரி.

22. ஸ்ரீ E. K. ஆறுமுகம் பிள்ளை,
வியாபாரம்,
சாலை, திருவனந்தபுரம்.

23. J. N. கோபால கிருஷ்ண-பிள்ளை.
பெரம்பலூர், திருச்சி ஜில்லா.

24. S. வீராகவன்.
P. J. D. ஸ்டோர்ஸ்,
சிங்காரத்தோப்புத் தெரு, திருச்சி.

25. R. ராகவ அய்யங்கார்,
ஸ்ரீரெங்கம்,
திருவானைக்காவல்.

26. லெக்ஷிமி நாராயண அய்யர்,
ஸ்ரீ நடராஜா வால்போஸ்டிங்
விளம்பர ஏஜென்ஸி,
சிதம்பரம்.

27. M. நாராயண நாயர்,
புதுக்கோட்டை.

28. N. சாமிநாதன்,
சி. பசுமலைக்கோட்டை,
அகாபட்டன் சிலோன்.

29. இந்தியன் நேஷனல் நியூஸ்
மார்ட் 143, சர்ச் தெரு, கொழும்பு.

30. C. S. கன்னையா, வேப்பேரி,
மதராஸ்.

அறிக்கை

சந்தா பாக்கி உள்ளவர்கள் தங்கள் சந்தாக்களை அனுப்புவதுடன், பத்திரிகை விஷயமாக தகவல் எழுதும்போது சந்தா நெம்பர்களைக் குறித்தனுப்ப வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர்,
சக்தி காரியாலயம்,
சென்னை.

நமது பிரதிநிதி

நமது பிரதிநிதி திரு. ரா. பாலசுப்ரமண்யம் 'சக்தி'யின் அபிவிருத்தி நாடி தமிழ் நாடெங்கும் சுற்றுப் பிரயாணஞ் செய்து வருவதால் ஆங்காங்கு உள்ள நண்பர்கள், அவருக்கு ஒத்தாசை புரிந்து இயன்ற ஆதரவு தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர்,
சக்தி காரியாலயம்,
சென்னை.

இந்த இதழில்—

'பூ' (பக்கம் 56)

இவர் பாடல்களைப் படித்த பல நண்பர்கள், யார் இந்த நண்பர் என்று கடித மூலமாகவும் நேரிலும் கேட்டுவிட்டார்கள். இனியும் இவரது உண்மைப் பெயரை வெளியிடாதிருப்பது நியாயமல்ல. 'வானொலி' சென்னையி லிருக்கையில் அதன் ஆசிரியராயிருந்த ஸ்ரீ தீத்தாரப்பன்தான் இந்த நண்பர். நல்ல ரஸிகர். இலக்கியம் கலைகளிலே பரமமோகம் கொண்டவர். கம்பனின் காவிய இன்பத்திலே உள்ளத்தைப் பறிகொடுத்த ஸ்ரீ. டி. கே. சிதம்பரநாத முதலியாரின் மகன், ஸ்ரீ. தீத்தாரப்பன் இன்று தேக அசௌக்கியத்தோ டிருக்கிறார்; அந்தச் சிரமத்தையும் பொருட்படுத்தாமல், தமது பாடல்களை இயற்றி நமக்கு உதவி வருகிறார். நோய் தீர்ந்து, குணப்பட்டு, சங்கீதம், கலைகள் சம்பந்தமான பல உரை நடைக் கட்டுரைகளை வழங்கிச் 'சக்தி' வாசகர்களை அவர் களிப்பிக்க வேண்டுமென்பது நமது பிரார்த்தனை யாகும்.

சேது அம்மாள் (பக்கம் 67)

இன்று தமிழிலே கலைச் சுவையோடும், உருக்கமாகவும் கதைகள் எழுதக் கூடிய பெண்கள் இரண்டு அல்லது மூன்றுபேர் தான். அவர்களிலே ஒருவர் இவர். கும்பகோணவாசி. மனித உள்ளத்தின் இளகிய உணர்ச்சிகளை ஸ்வபாவமாய்ச் சித்தரிக்கக் கூடியவர்.

ஆர். திருஞான சம்பந்தம் (பக்கம் 79)

உருக்கமும் உணர்ச்சியும் கலையழகும் நிரம்ப எழுத வல்ல இளைஞர். பிரஞ்சு தேசத்துக் கர்ண பரம்பரைக் கதை யொன்றை இங்கே தமிழ்ப்படுத்தித் தந்திருக்கிறார்.

ரா. நா. (பக்கம் 65)

'ஹிந்துஸ்தான்' ஆசிரியர். குழைந்த உள்ளமும் சாந்த சுபாவமும் படைத்தவர். அவர் எழுத்துக்களிலும் அவை பிரதிபலிக்கும்.

கு. ப. ராஜகோபாலன் (பக்கம் 66)

தமிழ் நாட்டு மறுமலர்ச்சி எழுத்தாளர்களில் முன்னணியில் ஸ்தானம் வகிக்கும் ஒருவர்.

வி. ஆர். எம். செட்டியார் (பக்கம் 91)

ஆங்கிலத்திலே நல்ல புலமை யுடையவர். கவிதை லட்சணம் பற்றித் தொடர்ச்சியாகப் பல கட்டுரைகள் எழுதிச் 'சக்தி'க்கு உதவ இசைந்திருக்கிறார்.

மஞ்சேரி எஸ். ஈச்வரன் (பக்கம் 70)

இவரது ஆங்கிலக் கதைகளும் கவிகளும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நடையும் பொருளும் கொண்டவை.

வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி,
வைத்திய ஆசிரியர் & R. I. M. P. என்ற பட்டங்களும்,
அநேக தங்க மெடல்களும், நற்சாக்ஷிப் பத்திரங்களும் பரிசுபெற்றவருமான

திருச்சி டாக்டர் T. C. சிங்காரம் அவர்களின்

"சித்தாமிர்தம்" (ரெஜிஸ்டர்டு)

(மிகுந்த பலத்திற்கும் வீரிய விருத்திக்கும் நிகரற்றது)

கைகால் அசதி, இடுப்பு வலி, பலஹீனம், நரம்புத் தளர்ச்சி, ஆயாசம், சோகை, பாண்டு, நித்திரையின்மை, சோம்பல் முதலியவைகளை நீக்கி இரத்த விருத்தியையும் அபார தாது விருத்தியையும் உண்டாக்கும். ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை. பெரிய சைஸ் விலை: ரூ. 4—8—0, ஒரு சேர் விலை: ரூ. 2—8—0, அரை சேர் விலை: ரூ 1—6—0

சூதக சஞ்சீவி எண்ணெய்

(ஸ்திரீகளுக்கு ஏற்றதோர் அபூர்வ சஞ்சீவி)

ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் சூதக சிக்கல் வியாதியினின்று விடுபட்டு ஷை மருந்தால் நற்சுகம் அடைந்திருக்கிறார்கள். சூதகம் காலந்தவறி வெளியாதல், அதுசமயம் ஏற்படும் பொறுக்கமுடியாத வயிற்றுவலி, இடுப்பு வலி, கைகால் குடைச்சல், பெரும்பாடு, கெற்ப அழிவு முதலியவைகள் குணமாக கெற்ப உற்பத்தியு முண்டாகும்.

பாட்டில் 1-க்கு விலை ரூ. **2—0—0** பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம்

இவ்விடம் சகல வியாதிகளுக்கும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்
வெளியூர் ஆர்டர்களை கவனித்து அனுப்பப்படும்.

இந்த **மஹா சந்தனாதி தைலமானது** மூளைக்கும் கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய பலவித வேர், பட்டை, இலை, புஷ்பம், விரை, கிழங்கு முதலியவைகளின் சாறு, கஷாயம், சத்து முதலியவைகளும் பலவித வாசனைத் திரவியங்களும் சேர்த்து சாஸ்திர முறைப்படி ஒழுங்காய்த் தயார் செய்யப்பட்டது.

டி. சி. சிங்காரம், அண்டு கோ.,
சித்தானந்த பார்மசி, தெப்பக்குளம் P. O., திருச்சி.

கவனியுங்கள்! தக்க லாபம்!!



No. 1914

எங்களிடம் பலவிதமான கேடியாரங்கள்
குறைந்த விலைக்கு உத்திரவாதத்துடன் கிடைக்கும்

கேடியார ரிப்பேர்கள் தேர்ச்சி பெற்ற பேர்களைக்கொண்டு குறித்த காலத்தில் உத்திரவாதத்துடன் செய்து அனுப்பப்படும்.

No. 1914. சுபீரியர் ஸ்டேபிரைட் (Staybright Steel back) 15 ஜுவல்கள் உள்ளது. நீண்டகாலம் யாதொரு ரிப்பேர் அன்றி சரியான காலம் காட்டக்கூடியது. 2 வருஷம் உத்திரவாதம். லீவர் வாட்சு சதுர சையிஸ் உள்ளது ரூ. **21-0-0.**

No. 101. 10 வருஷம் உத்திரவாதமுள்ள ரோல்டு கோல்டு இலிசா (Elisa lever) லீவர் ரெக்டாங்குலர் ஷேப்டு 15 ஜுவல்கள் உள்ளதும் $7\frac{3}{4}$ சையிஸ் 5 வருஷம் உத்திரவாதமுள்ளது. ரூ. **31-0-0.**



Eliza
No. 101

No. 102. ஷை மாதிரி எவர் பிரைட் ஸ்டீல். ரூ. 29-0-0.
No. 103. ரோல்டுகோல்டு காப்டன் (Captain Lever.)
$7\frac{3}{4}$ சையிஸ் ரெக்டாங்குலர் 16 ஜுவல்கள் உள்ளது.
(West End Pattern) 5 வருஷம் உத்திரவாதமுள்ளது. ரூ. 41-0-0

வரவழைத்து திருப்தி யில்லாவிடில் ஒரு வாரத்தில் பணம் வாபஸ் செய்யப்படும். ஆர்டர் செய்வோர்களுக்கு அழகிய கிருஷ்ணன் போட்டோ கியாலண்டர் இனமாக அனுப்பப்படும்.

மானேஜர்: **நியூ அமெரிக்கன் வாட்சு கம்பெனி,**
201, பெரிய கடைவீதி, திருச்சிராப்பள்ளி.

ஆர்டர் அனுப்பும்பொழுது "சக்தி" யில் கண்டது என்று குறிப்பிடவும்.

குரு மருந்துகள்

60 வருஷ பேரும், புகழும் பெற்றது

King of Anjanams

King of Dentifrices

குரு தைலம்—பாம்கள், அஞ்சனங்களுக்கெல்லாம் அரசன்.

210 வியாதிகளுக்கு மகா சஞ்சீவி. வெளிமருந்தாகவும்—உள்மருந்தாகவும் கொடுங்கள்.

குரு பல்பொடி—பல்பொடிகளுக் கெல்லாம் அரசன்.

குழந்தைகளுக்கு குரு மருந்துகளே அரசன்

இதை வெல்ல வேறு இல்லை—இதை அறியவும்

குரு கஸ்தூரி காரமாத்திரை. 40 மாத்திரை: அணா 6.
குரு கோரோஜனை மாத்திரை. 40 மாத்திரை: அணா 8.
குரு பாலர் வயற்றோட்ட மருந்து. புட்டி அணா 12.
குரு வேப்பெண்ணெய் தைலம். புட்டி அணா 12.
குரு K. சொட்டு மருந்து—கக்குவான் சஞ்சீவி. ரூ. 1-0-0.
குரு பாலர் டானிக்கு. ரூ. 1-4-0.
குரு ஜீமா கழிம்பு—கரப்பான் சஞ்சீவி. அணா 10.
குரு அஸ்தி பஸ்பம்—எலும்புருக்கி நோய், தேறை நோய்க்கு மகா சஞ்சீவி. ரூ. 2-0-0.

குரு மருந்துகள் எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்—
கியாட்லாக்கு வாங்கி பார்க்கவும்

குழந்தைகளுக்கு என்ன என்ன வியாதிகள் இருந்தாலும் விபரமாய் எழுதுங்கள்—
தேரி, தெளிந்த மருந்துகள் இருக்கின்றன.

60 வருஷ பேர், புகழ்பெற்ற மருந்துகள் அனுப்பி சுகப்படுத்தலாம்

டாக்டர் ஏ. மதுரம், குரு மருந்துசாலை,

திருச்சினாப்பள்ளி.

தந்தி : "கல்ச்சர்" திருச்சி

பாக்டரி & பிராஞ்சு : ரங்கூன்

TRADE

தோடு சைஸ்

கல்ச்சர் வைரம்

1-க்கு அணு 8

MARK

TRADE

பேசரி சைஸ்

கல்ச்சர் வைரம்

1-க்கு அணு 6

MARK

Regd No. 1983

தங்கமெடலும், சர்டிபிகேட்டும் பரிசுபெற்ற பர்மா போட்டோ மார்க்

ஒரிஜினல் கல்ச்சர் வைரங்கள்

போலி கல்ச்சர் வைரங்கள் வாங்கி ஏமாறுமல் எமது "பர்மா போட்டோ ஒரிஜினல் கல்ச்சர் வைரங்களை" வாங்கி திருப்தி ஆதும்படி கோருகிறேன். எலக்டிரிக் மின்சார சக்தியால் நூதன வைர முறையில் அசல் சீமை கமலத்திற்கு சமானமுள்ள பூரிப்பும், பல வர்ணங்களுடன் ஜோலிக்கக் கூடியவை.

ஒரிஜினல் டைனமோ வைரங்கள் தோடு சைஸ் வைரம் 1-க்கு ரூ. 1-0-0

"பர்மா ஸ்டார் வைரங்கள்" ரங்கூன் கமலங்களில் எல்லா க்வாலிடிகள், அசல் பவுன் தங்கத்தில் தயார் செய்த கியாரண்டியான கல்ச்சர் வைர நகைகள், லோலக், தோடு முதலியவைகள் விலை சாசமாக கிடைக்கும். அன்பர்கள் ஒருமுறை வாங்கி திருப்தி அடையவேணுமாய்க் கோருகிறேன். பர்மா போட்டோ மார்க் "ஒரிஜினல் கல்ச்சர் வைரங்கள்" தான் மேலானவை. ஆகையால் அன்பர்கள் பர்மா போட்டோ மார்க்கை கவனித்து வாங்கவும்.

(கேட்லாக் இனும்) **சொ. அருணசலம் செட்டி** (கேட்லாக் இனும்)

ஒரிஜினல் கல்ச்சர் வைர வியாபாரம், பெரிய கடைவீதி, திருச்சினப்பள்ளி.

IMPROVES

MEDICATED



PERFUMED

HAIR GROWTH

APPLY FOR AGENCY

நியோ ஸில்வர்

[NEO-SILVER]

என்னும் வெள்ளை உலோகத்தைக் கொண்டு தயாரித்த **வெள்ளிக்கு நிகரான**

- கூஜா
- பன்னீர் சோம்பு
- சந்தனப் பேலா
- டம்ளர்
- பல டிசைன் கொண்ட தட்டுகள்
- வெற்றிலைப் பெட்டி

இன்னும் அநேக விதமான சாமான்கள் எங்கள் இடத்தில் மிகவும் சகாயவிலைக்கு கடைசிவரைக்கும் உத்திரவாதத்துடன் செய்து கொடுக்கப் படும். வியாபாரிகளுக்கும் சப்ளை செய்யப் படும்.

விபரங்களுக்கு

ஏ. என். கே. ஜுவல்லரி

பத்ரி வீராசாமி சந்து,

சைனபஜார், மதருஸ்.

அவரது வாழ்க்கையின் சம்பவங்கள்

12 ரீல் நீளமுள்ள தமிழ் சினிமாப்படம்

டாக்குமெண்டரி பிலிம்ஸ் தயாரிப்பு

Produced & Distributed by :

THE DOCUMENTARY FILMS LTD.

77, LLOYDS ROAD :: ROYAPETTAH MADRAS

Gram : 'MONTAGE' Phone : 86155

Edited, Printed and Published by V. Govindan
at Shakti Press, Limited (Shanti Press), 46, Muthumari Chetti Street, G.T., Madras.